www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 8/50

දිනමුරසු වාරමලර්

மே.01-07,1994

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 48



## உயிர்பெற்றுவரும் 'பிரேமாயிசம்'

அரசியல் அலசல்

## ஆளும் கட்சியின் புதிய உத்தி!





## ஜனநாயக நீரோட்டமும் தத்தளிக்கும் தமிழ்க் கட்சிகளும்!

எக்ஸ்ரே ரிப்போர்ட்



நாலுகாலோடு வாழும் பெண்மணி





மகாபாரதம்

புதிய

கவாஸ்கர்

ஸ்போர்ட்ஸ்

# புற்றுநோய் பற்றிய புதிய தகவல்கள்

கூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# இதயம் என்ற பூஞ்சோலையில்...

வீட்டுத் தோட்டம். அதில் அழகிய பலவர்ணப் பூக்கள். எத்தனை அழகு! எத்தனை இன்பம்! ஓ... அவற்றிடையே சில காட்டுப்பூக்கள்... என்ன செய்வோம்...? அவற்றைப் பிடுங்கி எறிவோம்! கடுமையான வெய்யில், நீரின்றி செடிகள் வாடத் தொடங்குகின்றன. அவற்றுக்கு நீர் பாய்ச்சுவோம். பசளையிடுவோம்... அவை செழித்து வளரும்.


எமது இதயமும் அழகிய பூஞ்சோலை. அதில்தான் மகிழ்வு தரும் எத்தனை பூக்கள். அவை மலர்ந்து மணம் வீசுகையில்தான் எத்தனை...இன்பம்... அந்தப் பூக்கள்தான் அன்பு,...மன்னிப்பு...சகிப்பு...

ஓ..அதிலும் சில காட்டுப் பூக்கள் வளரத்தான் செய்கின்றன. அவை வெறுப்பு... விருப்பு... இவற்றை களைந்தெறிவோம்.

'அன்பு' என்ற மலரைப்பற்றி (1 கொரிந்தியர் 13ல்) வேதாகமம் தெட்டத் தெளிவாக கூறுகிறது. அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. "மற்றவர்களும் என்னைப் போன்ற மனிதர்களே...அவர்களில் அன்புகூர வேண்டும்." என ஒவ்வொரு மனிதனும் நினைத்துவிட்டால் பெரும்பாலான பிரச்சனைகள், கவலைகள் ஏற்படாது போய்விடும்..

(1 யோவான் 4:7-21) அன்பினைப் பற்றி கூறுகிறது. "அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது." அன்புள்ள எவனும் தேவனால் பிறந்தவன். தேவன் தம் குமாரனை கிருபாதார பலியாக அனுப்பி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தது போல நாமும் ஒருவரிடத்திலொருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்.

# ஆன்மீகம்



உண்மை அன்பை ருசித்துள்ள நாம் (கிறிஸ்துவின் மரணத்தின் மூலம்) அதே அன்பை பிறரிலும் காட்ட வேண்டும். அன்பு என்ற மலர் வாடாதிருக்க வேத வசனம் என்ற நீர் ஊற்றி செழித்திடச் செய்து, எம் வாழ்வையும் செழிக்க வைப்போம். உண்மை அன்பில் நிலைக்க இறைவனின் துணையை நாடுவோம்.

ஜே.புளோரன்ஸ்
கெங்கல்ல.

# சிந்தனைக்குச் சில நபி மொழிகள்

எனது (தோழர்கள்) ஸஹாபாக்கள் வானத்தில் மின்னும் நட்சத்திரங்களுக்கு ஒப்பானவர்கள். அவர்களில் எவரைப் பின்பற்றினாலும் நீங்களே நேர்வழி பெறுவீர்கள். *(அல் ஹதீஸ்)*

எனது ஸஹாபாக்களைத் திட்டுபவர்களை நீங்கள் கண்டால் "உங்களுடைய தீமைக்காக உங்களின்மீது அல்லாஹ்வின் முனிவு உண்டாகட்டும்" என்று கூறுங்கள். *(அல் ஹதீஸ்)*

எவர் என்மீது ஸலவாத் மொழிவதை விட்டு விடுகிறாரோ அவர் சுவர்க்கத்தின் பாதையைத் தவற விட்டவர் ஆவார். *(அல் ஹதீஸ்)*

எவரேனும் ஒருவர் முஃமின்களின் ஜெமா அத்தை விட்டும் ஒரு சாண் அளவு அகன்றுவிட்டாலும் அவர் தன் கழுத்தில் இருந்து இஸ்லாம் என்னும் கயிற்றைக் கழற்றியவராக ஆகி விடுவார். *(அல் ஹதீஸ்)*

கடைசிக் காலத்தில் பொய்யர்களும் புளுகர்களும் தோன்றுவார்கள். நீங்களும் உங்கள் மூதாதையரும் கேட்டிராத புதுமையான விஷயங்களை அவர்கள் உங்களிடம் கூறுவார்கள். அவர்களிடமிருந்து உங்களைப் பேணிக் காத்துக்கொள்ளுங்கள். *(அல் ஹதீஸ்)*

எம்.எச்.எம். ஹாரித்-திஹாரிய.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

அன்று-
அமெரிக்காவின் சிக்காகோ வீதிகளில்
உழைக்கும் மக்களின்
உரிமைக்குரல் ஓங்கி ஒலித்தபோது
ஆட்சியாளர்கள்
ஆயுதங்களால் பதில் சொன்னார்கள்.
கொப்பளித்து பாய்ந்த குருதியில்
தம் கொடிகளை தோய்த்தெடுத்து
உழைக்கும் மக்கள்
உயர்த்திப் பிடித்தார்கள்.

உரிமை கேட்டு, உணர்வுகள் சிவந்து
போராடி மரித்த
தம் முன்னோர்களை
உழைக்கும் மக்கள் என்றும்
நினைவில் வைத்து
வீர வணக்கம் செலுத்தும் நாள்தான்
மேதின எழுச்சி நாள்.

போராடாமல் எந்த உரிமையும்
பெற்றுக்கொள்ளப்பட்டதாக சரித்திரம் இல்லை.
இன்று-நாம்
அனுபவித்துக் கொண்டிருக்கின்ற
அரசியல்-ஜனநாயக உரிமைகள்
கேட்டவுடன் கிடைத்தவையல்ல.
தட்டியும் திறக்காத அதிகாரக் கதவுகள்
போராட்ட வீச்சால் புரட்டி எறியப்பட்டு,
அந்த வீச்சுக்கு உரமாக
விலை மதிப்பற்ற உயிர்கள் கொடுக்கப்பட்டு
பெறப்பட்டவை என்பதை
உலக வரலாறு உரத்துச் சொல்கிறது.

அரசியல் - ஜனநாயக உரிமைகள்
மேலும் விரிவாக்கப்படவேண்டும்.

அரசியலில் நேர்மையும், தூய்மையும்
பகிரங்கத் தன்மையும்
ஆழப்பதிந்து வேர் விட வேண்டும்
என்று-
உலகெங்கும் உறுதியான கருத்துக்கள்
உருவாக்கம் கண்டு வருகின்றன.

பேச அனுமதிப்பதும், எழுத விடுவதும்
மட்டும் ஜனநாயகமல்ல.
எடுத்துச் சொல்லப்படும் கருத்துக்களில்
உள்ள நியாயங்களை ஏற்றுக்கொண்டு
அவற்றுக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டும்.

வடக்கே வாய் திறக்க அனுமதியில்லை.
உதடுகள் திறந்தால்
உரிமைப் போர் இறந்துவிடும் என்று
ஒப்புக்கொள்ள முடியாத ஒரு கருத்தை
அங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

தெற்கில் வாய் திறக்கலாம்;
பேனாவையும் திறக்கலாம்.
எனினும்,' எடுத்துச் சொல்லும் கருத்துக்கள்
அதிகாரப் பொறுப்பில் உள்ளவர்களது
செவிகளில் ஏறுவதாக தெரியவில்லை.
தமிழ் கட்சிகள் பலவும் கூட
தமது இருப்பை வெளிப்படுத்த
நினைத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர
அரசியலின் தரத்தை உயர்த்த
எந்தளவுக்கு முயல்கிறார்கள் என்பது
கேள்விக்குறியாகவே இருக்கிறது.

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை
நிரந்தர எதிரிகளும் இல்லை என்று
விளக்கம் சொல்ல விரும்பலாம்.
அதற்காக-
அரசியலில் நல்லவர்களே இல்லை
என்று மக்கள் நினைக்கும் அளவுக்கு
அரசியலை சாக்கடையாக்கிவிடக்கூடாது.

அரசியல்-ஜனநாயக உரிமைகளை
மேலும் விசாலப்படுத்த வேண்டிய நேரத்தில்
அரசியலில் அநாகரிகங்களை அரங்கேற்றுவதும்
அதனால் மக்களை-
ஜனநாயகம் மீது வெறுப்புக் கொள்ள வைப்பதும்
அரசியல் மீது விரக்தி கொள்ளச் செய்வதும்
விரும்பத்தக்கதுமல்ல - வேண்டியதுமல்ல.

சிக்காகோவிலும், அதற்கு முன்னரும்
வரலாறு அறிந்த காலம் முதலாக
இன்றுவரை-
உரிமைகளுக்காக உயிர் கொடுத்தவர்களை
நினைவு கூரும் மே தின நாளில்
உள்ள உரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும்
நியாயமான உரிமைகளை
உயர்ந்து - நிமிர்ந்து - ஒன்றுபட்டு நின்று
வாதாடியும், போராடியும் பெற்றிடவும்
தெளிவு கொள்ள வேண்டும். உறுதி பெறவேண்டும்.
வாழ்க மே தினம்! வெல்க மேதினம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கவிதைப்போட்டி இல-45

### பரிசுக்குரிய கவிதை

**விடியுமா?**

திரும்பிப் பாரம்மா
நம் தேசம்
ஏன் இன்னும்
இருண்டு கிடக்கிறது?!

இ. யோகநாதன்
வவு/ பெ. கோமரசங்குளம்.

### வியக்கப்பட்டவை

**உதயம் எங்கே?**

இதயம்
வரண்ட தேசத்தில்
உதயம்
தேடும்
ஜீவன்கள்.

சுகிதா சுந்தரவடிவேல்
அக்கரைப்பற்று-08.

**நந்தவனச் சிறை**

சின்னச் சின்ன
இதயங்களையும்
சிறையில் போட்டு
வதைக்கும்
இந்த
திறந்த வெளிமுகாம்
எந்த வதை முகாம்...?

வை. சித்திக்கிருஷ்ணா
பாண்டிருப்பு-2.

**தவிப்பு**

மடையுடைத்த ஏக்கங்கள்
மனக் கதவைத் தட்டுவதால்
தடையுடைக்கத் தவிக்குதிந்த உள்ளம்.

ந.தருமலிங்கம்-நீர்கொழும்பு.

**சோகம்**

தெருவோர செய்தியொன்று
காதோரம் வருமென்று
கால் கடுக்க காத்திருக்கும்
போர்கால சோகமிது.

தெ. லோஜனா-கொழும்பு-15.

**அட கடவுளே..**

நாளை வரும்
சந்ததிக்கும்
போர் தருமோ
சிறை?

சரவணேஸ் டெமிசி
ஹோட்டன்-கலவான.

**வழி விடுங்கள்**

முடிவில்லை போருக்கு
விடிவில்லை வாழ்விற்கு
முடிவின் எல்லைக்கே எம் வாழ்வு!
மூடிய எல்லையைத் திறந்து
தஞ்சம் கொடுங்கள் உங்கள் பூமியிலாவது.

அ. தருஷாந்த்-திருகோணமலை.

**காவல்**

பயிர் மேயும் வேலியால்
பயன் என்ன கண்டீர்!

இந்துப்பிரியன்-ஹல்லோயா.

**கொடுமை!**

அகமகிழ்ந்து வாழ்ந்த நாங்கள்-இன்று
அகதி முகாம் வந்து விட்டோம்!
அரை வயிற்றுக் கஞ்சிக்காக
அடைக்கலம் புகுந்து விட்டோம்!

எஸ்.கே. குமார்-வட்டக்களி,சிலாபம்.



**வறுமைச் சிறைக்கூடத்துள்....**

"வலிதான சிறைக்கம்பி உன்முன்னே
வளமற்ற எதிர்காலம் கண்முன்னே."

எஸ். சோமகாந்தன்-மட்டக்களப்பு.

முக்காடு வேண்டாம் அம்மா
முகம் கொடுப்போம் எதுவரினும்
இரும்பு வேலி தடுத்தாலும்
இறுதி வெற்றி எமக்கென்போம்.

சண்முகம்பிள்ளை சண்முகலிங்கம்
திருகோணமலை.

**மன்றாட்டு**

எங்கள் எதிர்காலத்தை
சிறையிட்டீர்கள்! -பரவாயில்லை!
எங்கள் வாழ்வையும்
சிறையிட்டீர்கள்! - பரவாயில்லை!
ஆனால்
சமாதானத்தை மட்டும்
விடுதலை செய்யுங்கள்!

எப். லெனாட்குமார்-ஹப்புத்தளை.

**காலாறும் காலத்தீர்வு**

கலியுகத்தின் கர்ப்பக்கிரகத்தில்
காலாறும் காலத் தீர்வைகளால்
கதியற்று விதியற்ற
கருணைப் பூக்கள்.

சா. விக்னேஸ்வரன்-கல்முனை-01.

யுத்தச் சிறைக்குள்
வாழ்வைத் தொலைத்துவிட்ட நாங்கள்-இன்று
வறுமைச் சிறைக்குள்ளே
வாடித் தவிக்கின்றோம்.

திருமதி கிறேஸ் தங்கராசா-வத்தாறுமுலை.

## கவிதைப் போட்டி இல-48



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 07.05.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 48
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

## வாசகசாலை

அன்புக்கினிய முரசே,

"குருக்கள் செய்தால் குற்றமில்லை" என்பது முதுமொழி. ஆனால் நீயோ யார் தவறு விட்டாலும் அதை தட்டிக் கேட்டு விடுகிறாய். அதனாலோ என்னவோ நான் உன் வாசகனாகிவிட்டேன். நீ என்றும் வாழ வாழ்த்துக்கள்.

ச.ஸ்ரீகஜன்-கொட்டாஞ்சேனை.

▫▫

தித்திக்க வைத்த என் முரசே,

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் வெகு ஜோர். நீ தரும் மகாபாரதம் மிகவும் சிறப்பாக உள்ளது. ரசிகனின் இலக்கிய நயம், கொலைவிழும் நேரம், சிறு கதைகள், தேன் கிண்ணம் இதுபோன்ற இன்னும் பல சுவையான அம்சங்களும்கூட என் மனதை கொள்ள கொண்டு விட்டன. உன் சேவை மென்மேலும் தொடர என் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

செல்வி.என்.கலா.இந்தகல மேற்பிரிவு.

▫▫

அன்பின் முரசே,

வாரந்தோறும் நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் வெகு ஜோர். 'உன்னைப் பார்க்காத கண்ணும் கண்ணல்ல, என்று கூறும் வகையில் உன் புகழ் உயர்ந்து விட்டது. உன் தொழில் என்றும் எழிலுடன் விளங்க இவ்வஞ்சியின் இதமான வாழ்த்துக்கள் என்றும் உனக்கு உண்டு.

செல்வி.செ.ஜீவா-திம்புல.

▫▫

தித்திக்கும் தீஞ்சுவை கொண்ட தினமுரசே,

வாரத்தில் ஒருநாள் நீ வந்தாலும், திகைப்பூட்டும் செய்தி களுடனேயே வருகிறாய். அத்தினம் என் மனம் குதூகலம்.

க.குணவதி-திருமலை.

எங்களின் அபிமான தினமுரசே!

உன் இதழ்களில் தாங்கி வரும் அத்தனை அம்சங்களும் சுவையோ, சுவை. ரசிகனின் கொலை விழும் நேரம், இலக்கிய நயம், பாப்பா முரசில் வரும் அனைத்து அம்சங்களும் வெகு ஜோர். சிறுகதைகள், தேன்கிண்ணம், இன்னும் எத்தனை எத்தனை? அத்தனை அம்சங்களை வாரி வழங்கும் உனக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

மகேந்திரன், சிவா, பிரதீப்,பாலகுமார்-
வெலிமடை.



அன்பான தினமுரசே,

கண்களுக்கு விருந்தளிக்கும் நீ தொடர்ந்து வெளிவர வாழ்த்துகிறேன். உனது படைப்புகள் அனைத்தும் பிரமாதம்.

பௌமி-அனுராதபுரம்.

▫▫

வாராவாரம் நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். ரசிகனின் கொலை விழும் நேரம், இலக்கிய நயம் போன்றவை என் போன்ற இரசிகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

எம்.ஏ.றபீக்-நெய்தல் நகர் மூதூர்-01.

முரசே! உன் உண்மை செய்திகளுக்கு நான் அடிமை. குறிப்பாக க(தை)லையை வடிக்கும் ரசிகனின் கற்பனைக்கு நான் அடிமை. மொத்தத்தில் உன்னில் என்னை தொலைத்துவிட்டேன். என் நெஞ்சம் திருடிய முரசே வாழ்க.

செல்வன்.ஆர்.உதயச்சந்திரன்-
அவிசாவளை.

▫▫

**ஒருவாரப் பிரிவு**

நாம் பிரிவு என்ற சொல்லைக்கூட அறிந்ததில்லையே. நேற்றென்ன இன்றென்ன நெடுங்காலம் விலகாத முரசு என் சொந்தம் "இன்னும் சொல்லவா?"

றைகம ஸ்ரீகாந்தன்-இங்கிரிய.

▫▫

தகவல் பெட்டி மனதை வியக்க வைக்க; சினி விசிட் கண்ணுக்கு விருந்து படைக்க, இலக்கிய நயம் நெஞ்சை அள்ள; ரசிகனின் கொலை விழும் நேரம் மன ஆவலைத் தூண்ட; மொத்தத்தில் சென்ற வார தினமுரசு என்னை மகிழ்ச்சியில் திக்குமுக்காட வைத்துவிட்டது. இதுபோல் என்றும் வான் மின்னும் தாரகையாய் முரசு ஒளி விட்டுப் பிரகாசிக்க என் வாழ்த்துக்கள்!

எம்.சுல்பிக்கார்-பலவத்துறை.

▫▫

அன்பின் முரசே,

திருக்கோவிலில் இருந்து வவுனியாவில் வந்து, கடமை செய்யும் நான் வியாழன் தோறும் உன்னை அதிகாலை ஆறுமணிக்கே பெற்று மகாபாரதம் முதல் அனைத்து அம்சங்களையும் முக்கனிபோல் சுவைத்து வருகின்றேன்.

செல்வன்.எஸ்.சந்திரன்-திருக்கோவில்-02.

▫▫

என் பிரிய தினமுரசே!

உன்னில் சுமை தாங்கிடாக சுமந்து வரும் சிறுகதைகள், மகாபாரதம், கவிதைகள் ஆகியன என்னை சந்தோஷ வெள்ளத்தில் மூழ்க வைக்கின்றன. உன் சேவை என்றென்றும் நீடித்து வாழ வளர என் பல்லாண்டு வாழ்த்துக்கள்.

பெ.தமிழ்ச் செல்வி-பறகடுவ.

▫▫

இனித்திடும் இன்ப முரசே!

நீ வாரா வாரம் வழங்கிடும் அத்தனை அம்சங்களும் முக்கனியிலும் இனியவை. என் இதயத்தில் இனித்திட்ட நீ என்றும் வாழ்க, உன் சேவை வளர்க!

செல்வி.கந்தப்போடி-ஜீவகுமாரி-கொம்மாதுறை

▫▫

டியர் முரசே,

நீ வாரத்திற்கொரு முறை கொட்டும் நம் நாட்டு அரசியல் மழையும் நீ உலகம் முழுதும் சுற்றி வந்து தரும் அரசியல் செய்திகளும் வித்தியாசமான பூ மழை முரசே!

இரா.குணா-லூனுவத்த பஸார்-
லூணுவத்த.

▫▫

வாரம் ஒரு முறை வலம்வந்து புத்தம் புது ஆக்கங்களை நித்தம் எமக்களிக்கும் இனிய முரசே! உன் அத்தனை அம்சங்களும் வெரி வெரி ஃபைன். மருத்துவ விந்தை என்ற பகுதியிலே பல விடயங்களை அறியத் தந்து எம்மை அதிசயிக்க வைக்கின்றாய். உன் சேவை மென்மேலும் சிறப்புடன் திகழ என் வாழ்த்துக்கள்.

பர்ஸானா ராஸிக்-மல்வானஹின்ன,அக்குறணை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஐ.தே.கட்சியின் புதிய பொதுச்செயலாளர் யார்?

## ஆளும் கட்சிக்குள் திரைமறைவில் தொடரும் பிரச்சனைகள்!

## பிரேமா ஆதரவாளர்களை கவர ஹேமா வருகிறார்!!



தென் மாகாண சபைத் தேர்தலையடுத்து ஆளும் கட்சிக்குள் பல்வேறு கோணங்களில் அதிருப்திகள் ஏற்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா தலைமையிலான அரசாங்கம் மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும் கைகழுவி விட்டமையே தென் மாகாண தோல்விக்கு காரணம் என்று ஆளும் கட்சிக்குள் ஒரு பகுதியினர் அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைத்துள்ள வாக்குகள் அக்கட்சியின் கொள்கைகளுக்கு கிடைத்தவையல்ல.

ஐக்கிய தேசியக் கட்சிமீதும், அதன் இன்றைய தலைமைத்துவம்மீதும் வெறுப்படைந்தவர்கள் வேறு வழியில்லாமல் சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்துவிட்டார்கள் என்பது பிரேமா ஆதரவாளர்களது வாதமாகும்.

இதே வேளையில் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவும் தனது போக்கில் நெளிவு சுழிவுகளை கையாளத் தொடங்கியிருக்கிறார்.

பிரேமதாசாவின் இறுதிச் சடங்கில் உரையாற்றி சில சலசலப்புக்களை உருவாக்கிவிட்டு திருமதி ஹேமா பிரேமதாசா ஒய்ந்திருந்தார்.

அரசியலில் ஈடுபடப்போவதை இறுதிச் சடங்கில் மறைமுகமாக குறிப்பிட்டபோதும் பின்னர் நீண்ட மௌனம் ஒன்றை கடைப்பிடித்தார்.

திருமதி ஹேமா பிரேமதாசாவை ஆளும் கட்சிக்குள் கொண்டுவருவதற்கு கட்சியின் பொதுச்செயலாளரும், அமைச்சரும், மறைந்த ஜனாதிபதியின் நெருங்கிய நண்பருமான திரு.சிறிசேன குரே ஆர்வம் காட்டுவதாக முதலில் பேசப்பட்டது.

திருமதி ஹேமா பிரேமதாசா பிரேமாவின் இறுதிச் சடங்கில் உரையாற்றியபோது திரு.சிறிசேன குரேயின் பெயரையும் குறிப்பிட்டு தனது கணவருக்கு பக்கபலமாக இருந்தவர்கள் என்று நன்றி கூறியிருந்தார்.

பிரேமாவின் மறைவின் பின் ஹேமாவை அரசியலில் ஈடுபடச் செய்ய ஆளும்கட்சி விரும்பவில்லை. ஹேமா பிரேமதாசா வருகையினால் ஆளும் கட்சி முக்கிய தலைவர்கள் சிலர் பின்னுக்கு தள்ளப்படும் நிலை வரலாம் என்று முன்னர் கருதப்பட்டதும் அதற்கு ஒரு காரணம் என்று பேசப்பட்டது.

இந்திய ஆங்கில தினசரியான 'இந்து'வுக்கு அளித்த பேட்டியொன்றில் திருமதி ஹேமாவின் அரசியல் பிரவேசம் பற்றி கருத்துக்கூறிய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா, "திருமதி பிரேமதாசா கட்சியின் அடிமட்டத்தில் இருந்து செயற்பட்டு மேலே வரவேண்டும்" என்றே கூறியிருந்தார்.

அதன்மூலம் திருமதி பிரேமதாசாவுக்கு முக்கிய பதவிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது என்பதை ஜனாதிபதி சூசகமாக குறிப்பிட்டிருந்தார்.

திருமதி பிரேமதாசாவுக்கு மாத்திரமல்லாமல், அவரது மகனுக்கும் கட்சியில் பதவி எதுவும் கொடுக்கப்படவில்லை.

கடந்த தென் மாகாண தேர்தலில் பிரேமதாசாவின் மகனுக்கு முக்கிய இடமளிக்கப்பட்டிருக்க வேண்டும். பிரேமதாசா குடும்பத்தினர் மீது அதிருப்தி கொண்ட சிலரது ஆலோசனையால் அந்த முயற்சியும் கைவிடப்பட்டதாக கூறப்பட்டது.

சுதந்திரதினக் கொண்டாட்டங்களிலும் பிரேமா குடும்பத்தினர் காணப்படவில்லை.

பிரேமதாசாவின் மீது மக்களுக்கு வெறுப்பு இருக்கிறது. புதிய தலைமையின் அணுகுமுறை பிரேமதாசாவின் கொள்கைகளை பின்பற்றுவதாக இருக்காது என்று மக்களை நம்பவைக்க வேண்டும் என்று தவறான ஆலோசனையால் ஆளும்கட்சி தலைமை பிரேமாவின் பெயரையே உச்சரிக்கத் தயங்கியது என்று ஒரு முக்கிய பிர்முகர் ஆதங்கப்பட்டார்.

தென் மாகாணசபைத் தேர்தலின்பின் பிரேமதாசாவின் வேலைத் திட்டங்களுக்கு இருந்த முக்கியத்துவத்தை ஆளும் கட்சி தலைமை அறிந்துகொண்டது.

அதே சமயம் திருமதி பிரேமதாசாவும் தானும், பிள்ளைகளும் அரசியலில் ஈடுபடப் போவதாக அறிவித்தனர். எவ்வாறான முறையில் என்பதை உடனே கூறவில்லை.

அடுத்துவரும் தேர்தல்களில் பிரேமதாசாவின் வேலைத் திட்டங்களை பிரச்சாரம் செய்து வாக்காளர்களை திருப்தி செய்ய நினைத்துள்ள ஆளும் கட்சியினர் திருமதி ஹேமா தனித்து அரசியலில் இறங்கினால் வாக்குகள் பிரிந்துபோகும் என்று நினைத்தனர்.

பிரேமா மறைந்து நீண்ட காலத்தின் பின்னர் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா திருமதி பிரேமதாசாவை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து பேச்சு நடத்தினார். கடந்த கால கசப்பான இடைவெளிகளை திருமதி ஹேமா மறந்துவிட வேண்டும் என்ற வகையில் பேச்சு இருந்ததாக கூறப்படுகிறது.

திருமதி ஹேமாவை பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பது, பிரேமதாசாவின் மகனை கட்சி அமைப்பாளர்களில் ஒருவராக்குவது என்று ஜனாதிபதி முடிவு செய்திருக்கிறார்.

ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் திருமதி ஹேமா பிரேமதாசாவுக்காக தனது பதவியை துறக்க முன்வந்துள்ளார்.

இதே சமயம் அமைச்சர் சிறிசேன குரே திருமதி ஹேமா பிரேமதாசா கட்சிக்குள் வருவதை விரும்பவில்லை என்று தெரிகிறது. வேண்டுமானால் பிரேமதாசாவின் மகனுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம், என்று அவர் நினைக்கிறாராம்.

திரு.காமினி திசாநாயக்காவுக்கு அரசாங்கத்தில் முக்கிய பதவி கொடுப்பதையும் திரு.சிறிசேன குரே விரும்பவில்லை. கட்சியின் செயற்குழுவில் முடிவு செய்யலாம் என்று அவர் கூறுகிறார்.

செயற்குழுவில் திரு.காமினியின் விடயம் இரகசிய வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் சிறிசேன குரேயின் கருத்துக்கு ஆதரவு கிடைக்கக்கூடும் என்றே கருதப்படுகிறது.

பகிரங்க வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் ஜனாதிபதியின் விருப்பத்துக்கு நேரடியாக மறுப்புக்காட்ட செயற்குழு உறுப்பினர்கள் முன்வர மாட்டார்கள்.

மறுபுறத்தில் கட்சித் தலைவர் என்ற முறையில் திரு.சிறிசேன குரேயை பொதுச் செயலாளர் பதவியில் இருந்து ஜனாதிபதியால் விலக்கிவைக்க முடியும். தற்போதைய நிலையில் கட்சிப் பிரச்சனை வெளியே தெரிவதை ஜனாதிபதி விரும்பவில்லை.

அதனால் சிறிசேன குரே தனது பொதுச் செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி அவரிடம் கேட்டதாகவும், அதற்கு மறுப்புத் தெரிவித்த திரு.சிறிசேன குரே, வேண்டுமானால் என்னை பதவியில் இருந்து நீக்குங்கள் என்று கூறிவிட்டதாகவும் செய்திகள் வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்படலாம் என்ற பட்டியலில் இரண்டு பேரின் பெயர்கள் அடிபடுகின்றன.

முன்னாள் மேல்மாகாண முதல்வர் திரு.சுசில் முனசிங்கா, வடமேல் மாகாண முன்னாள் முதல்வர் திரு.காமினி ஜெயவிக்கிரம பெரேரே ஆகியோரது பெயர்கள்தான் அடிபடுகின்றன.

இந்த இருவரும் பிரேமதாசாவின் மீது விசுவாசம் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் திரு.காமினிக்கு அரசாங்கத்தில் பதவி கொடுக்கப்படவேண்டும் என்ற கருத்தை இருவருமே ஆதரிப்பவர்கள்.

திரு.சிறிசேன குரே ஆதரவாளர்கள் திருமதி ஹேமாவை கொண்டுவருவதன் மூலம் திருப்தி செய்யப்படுவார்கள்.

அடுத்துவரும் பொதுத் தேர்தலில் கொழும்பில் போட்டியிட திருமதி ஹேமா பிரேமதாசா நிறுத்தப்படுவார். பிரேமதாசா ஆதரவாளர்களை கொழும்பிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் திருப்தி செய்து கொள்ள பிரேமதாசாவின் குடும்பத்தினர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தப்படலாம்.

இதேவேளை பிரதமர் ரணில் அவர்கள் எதிலுமே பட்டுக்கொள்ளாதவராகவே தெரிகிறார். திரு.சிறிசேன குரேயின் கருத்தை ஆதரிக்கிறார் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். ஜனாதிபதிக்கு ஆதரவாக இருக்கிறார் என்று மறுசாரார் கூறுகிறார்கள். ஆனால் அவரோ மௌனமாக அனைத்தையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மறுபுறம் திரு.சிறிசேன குரேயை வெளியே விடாமல், அவரையும் வைத்துக்கொண்டு சமரசத்தீர்வு காணவும் ஒரு பகுதியினர் முயன்று வருகின்றனர்.



பிரேமா கொல்லப்பட்ட இடத்தில் நிறுவப்பட்டுள்ள நினைவுச் சிலை

## புதிய தமிழ் கட்சி முயற்சி முறிவு!

## அரசியல்வாதியின் வேட்பாளர் தேடும் படலம்!!

கொழும்பில் புதிய தமிழ் கட்சி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தியில் திரு.குமார் பொன்னம்பலம், ஒய்வுபெற்ற இராணுவ அதிகாரி பாலராஜா, கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை ஆகியோர் புதிய கட்சியில் இடம்பெறுவர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

புலிகளை எதிர்க்காத வகையில் புதிய கட்சி தனது செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்று கூறப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் தொண்டர் நிறுவனம் ஒன்றை நடத்திவரும் ஒருவர், தமது நிறுவனத்திற்கு கிடைக்கும் நிதியில் ஒரு பகுதியை புலிகளுக்கு வழங்கி வருகிறார். அதன் மூலம் புலிகள் தனக்கு எதிராக எதுவும் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் புதிய கட்சி முயற்சிக்கு பின்னணியில் இருந்தார் என்று அப்பத்திரிகை தெரிவித்தது.

ஆனால் திரு.குமார் பொன்னம்பலம் தவிர்ந்த ஏனையோர், புதிய கட்சி முயற்சியை தாம் ஆதரிக்கவில்லை. தமது பெயரை சம்பந்தப்படுத்தி ஆதரவு தேட ஒரு அரசியல்வாதி முற்படுகிறார் என்று கூறியுள்ளார்கள்.

## மாணவர்களிடம் விழிப்பை ஏற்படுத்துக'

## ஆசிரியர்களுக்கு பிரபா கோரிக்கை!

வடபகுதியில் புலிகள் அமைப்பினரால் நடத்தப்பட்ட பொதுக் கல்வி தேர்வுகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பாராட்டு உரையும் வாசிக்கப்பட்டது.

"போராட்டத்தின் உயரிய நோக்கங்களையும் இலக்குகளையும் மாணவ சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் புரிந்துணர்வை வளர்த்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும்" என்று பிரபா தனது பாராட்டு செய்தியில் தெரிவித்திருந்தார்.

"நாம் சுதந்திரமானவர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்க கூடியவர்களாக இருக்க வேண்டும். அதற்காகவே நாம் போராடுகிறோம்" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"இன்று நாம் ஒரு போர்ச்சூழலில் வாழ்கின்றோம். எமது தேசிய வாழ்வுக்கும் அடித்தளமான சமூக நிறுவனங்களை சிதைந்து போகாமல் பாதுகாப்பது எமது தலையாய பாணியாக இருக்கிறது. குறிப்பாகக் கல்வித் துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் நாம் உருப்படியான பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்" எனவும் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.குணரட்னம், அருட்திரு.பிரான்சிஸ்.ஜோசப் அடிகள், இந்துக்கல்லூரி அதிபர் பஞ்சலிங்கம், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

## விடுவிப்பதாகக் கூறும் விடுதி உரிமையாளர்கள்-பணம் பறிப்பதாகப் புலிகள் குற்றச்சாட்டு!

கொழும்பிலுள்ள தங்கு விடுதி உரிமையாளர்கள் சிலர் தமிழ் இளைஞர்கள், யுவதிகளிடம் பெருந்தொகையான பணத்தை அபகரித்து வருவதாக யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலி அறிவித்தது. பொலிசாரினால் கைது செய்யப்படும் இளைஞர்களையும் யுவதிகளையும் விடுவித்துத் தருவதாகக்கூறி பெருந்தொகையான பணத்தை அந்த விடுதி உரிமையாளர்கள் பெற்றுக்கொள்வதாக புலிகளின் குரல் வானொலியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## திருமலையில் கூட்டணி மூன்று நாள் முகாம்!

## "புலிகள் தடுத்தாலும் போட்டியிடுவோம்"

கடந்த சனி, ஞாயிறு, திங்கட்கிழமை மூன்று நாட்களும் திருகோணமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தங்கியிருந்து அங்கு கட்சி புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

சனிக்கிழமை 23ம் திகதி திருமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பெரும் திரளானோர் கலந்துகொண்டனர். மண்டபம் நிறைந்திருந்தது.

கட்சிக்கிளை புனரமைப்பு கூட்டம் என்பதால் உடனடியாக இருநூறுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து கொடுத்து உறுப்பினர்களாக சேர்ந்து கொண்டனர்.

நீண்ட காலத்தின் பின் பெருந்திரளான மக்களை சந்தித்த திருப்தி கூட்டணி தலைவர்களது முகங்களில் பிரதிபலித்ததை அவதானிக்க முடிந்தது.

திருமலை நகரசபை தலைவரும் முதல்நாள் கூட்ட ஒழுங்கு விடயங்களில் உதவி செய்து கொண்டிருந்ததையும் காண முடிந்தது.

கிளைப்புனரமைப்புக் கூட்டத்தில் இளைஞர்களது முகங்களை கண்ட கூட்டணித் தலைவர்களுக்கு மேலும் சந்தோஷம்.

இளைஞர்களை கவரும் வகையில் வேலைத் திட்டங்களை வகுக்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் பரராஜசிங்கம் தனது பேச்சின்போது தெரிவித்தார்.

மறுநாள் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கேள்விகளுக்கு பதில் சொல்லும் கருத்தரங்கு நடைபெற்றது.

முதல்நாள் கூட்டத்தைவிட குறைவானவர்களே கேள்வி பதில் கருத்தரங்குக்கு வந்திருந்தனர்.

"தாம் மக்களை கைவிட்டு ஓடவில்லை." என்பதை சற்று அழுத்திச் சொன்னார்கள். தமக்கெதிரான பிரதான குற்றச்சாட்டாக அதுதான் முன்வைக்கப்படும் என்று முன்கூட்டியே உணர்ந்திருந்தார்கள் என்று அனுமானிக்க முடிந்தது.

சில கேள்விகளுக்கு நேரடியாக பதில் சொல்லாமல் நழுவப் பார்த்தார்கள்.

"அமிர்தலிங்கத்தை கொலை செய்தவர்கள் யார்?" என்று ஒருவர் கேள்வி எழுப்ப, உடனே பதில் சொன்ன கூட்டணித்தலைவர் "அதுதான் இன்று உலகுக்கே தெரியுமே" என்றார். "எனக்கு தெரியாது சொல்லுங்கள்." என்று கேள்வி எழுப்பியவர் தொடர்ந்து கேட்டிருந்தால் தலைவர் பாடு சங்கடமாகப் போயிருக்கும்.

"அமுதர் கொலைக்கு காரணமானவர்களை ஏன் பகிரங்கமாக கண்டிக்கவில்லை?" என்று கேட்கப்பட்டது. அதற்கும் நழுவலாகவே பதில் சொன்னார்கள். "கண்டித்துக்கொண்டுதான் இருக்கிறோம்." என்று சொல்லப்பட்டது.

"அடுத்த தேர்தலில் போட்டியிடுவது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை" என்றும், "அப்படி போட்டியிடுவதாக முடிவு செய்தால் புலிகள் எதிர்த்தாலும் கூட்டணி போட்டியிடும்" என்று கிளிநொச்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆனந்தசங்கரி கூறினார்.

புலிகள் ஜனநாயக வழிக்கு வந்தால் உங்கள் நிலை என்ன? என்று கேட்டதற்கு பதில் சொன்ன கூட்டணித்தலைவர் திரு.சிவசிதம்பரம் "அவர்களோடு நாமும் சேர்ந்து நிற்போம்" என்று சிரித்துக்கொண்டு கூறினார்.

கூட்டணியின் முன்னாள் உறுப்பினர்கள் பலரும் கருத்தரங்கில் கலந்துகொண்டிருந்தனர்.

"மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள். அதனால் அடுத்த தேர்தலில் போட்டியிட்டால் வெற்றி வாய்ப்பு இருக்கிறது." என்று கூட்டணி முக்கியஸ்தர் ஒருவர் கூறினார்.

"இனத்தின் உரிமைக்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களிடம் ஆயுதங்களை கீழே போடுமாறு கோர முடியாது. இனப் பிரச்சனைக்கு சமாதானதீர்வு ஏற்பட்ட பின்னர் அது பற்றி சிந்திக்கலாம்" என்று கூட்டணித் தலைவர் சிவா குறிப்பிட்டார்.

ஆயுதப் போராட்டம் சமாதான தீர்வுக்கு உந்து சக்தியாக இருக்கிறது என்று கூட்டணி செயலதிபர் திரு.இரா சம்பந்தன் கூறினார்.

புலிகளின் விரோதத்தை சம்பாதிக்கக் கூடாது என்பதில் கூட்டணியினர் மிகவும் கவனமாக இருக்கின்றனர் என்பதை அந்தக் கருத்துக்கள்மூலம் அறிய முடிகிறது.

25ம் திகதி திங்கட்கிழமை தந்தை செல்வநாயகம் நினைவு தினக்கூட்டம் நடைபெற்றது. பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். கட்சிப் பத்திரிகை ஒன்றும் ஆரம்பிக்கப்படப்போவதாக கூட்டத்தில் வைத்தே அறிவிக்கப்பட்டது.

திருமலையில் நடைபெற்ற கருத்தரங்குகளின் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரத்தில் புதிய உற்சாகம் தெரிகிறது.

விளம்பரப் பகுதி



மலையாள மாந்திரீகம்

கொழும்புவாழ் நகர வாசிகளின் நலனைக் கருதி ஒவ்வொரு மாதமும் (எம்மாதமும்)
வினோத் இன்
இல.33, மூன்றாவது மாடி
சிறீ குணானந்த மாவத்தை
கொட்டாஞ்சேனை.
"VINNODH INN"
No. 33. 3rd Floor
Sri Gunanantha Mawatha
Kotahena.

ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வழியாகவும், ஸ்ரீகுணானந்த மாவத்தை உபதபால் கந்தோர் முன்பாகவும் வீற்றிருக்கும் எமது துர்க்கையம்மனை நாட நினைத்ததை நினைத்தவாறு நினைத்தபோதே எமது மலையாள உச்சாடன பீடத்திற்கு வந்து உங்களுக்கு பில்லியா, சூனியமா, கணவன் மனைவி பிணக்கா, கல்யாணத் தடையா, காதலில் படுதோல்வியா, தீரா நோயா, ஆஸ்துமாவா? வியாபார விருத்தி இல்லையா, பொருளாதாரத் தங்கு தடையா? அச்சொட்டான விதியின் சுவடி ஜாதகங்கள் எதுவானாலும்-

நிர்வாக அமைப்போ ஆலோசனையோ-078-71592
மாந்திரீகக் குரு: 078-71243
வெளிநாட்டுத் தொடர்பு:. 052-2508, 052-3093
கடிதத் தொடர்பு: ஜோதிட மாந்திரீக தத்துவஞானி P.K.சாமி,
தபால் பெட்டி 33, ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்,
நுவரேலியா, சிறி லங்கா

P.K. SAAMY ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex,
NUWARA ELIYA.

Dial: 052-2508 & 3093
AND
078-61933

FAX: 0094-523093


ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093*
*078-61933, 078-71243.*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்



ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
*187, செட்டியார் தெரு,*
*கொழும்பு 11,*
*போன்: 421398*


# கல்வி-உயர் கல்வி அமைச்சு கடிதம் கொடுத்தது கல்லூரியோ கதவு திறக்க மறுத்தது!!

## இடம்பெயர்ந்த மாணவர்கள் அவலம்

வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த 1992ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஒரு மாணவரை ஆண்டு 7 வகுப்பு அனுமதிக்காக பம்பலப்பிட்டி இந்து கல்லூரி அதிபரை ஜனவரி 10ம் திகதி கல்லூரியில் சந்தித்தேன். அவர், வகுப்பில் 40 மாணவர்கள் இருப்பதால் அதற்கு கூடுதலாக மாணவர்களை அனுமதிப்பதானால் பத்தரமுல்ல, இசுருபாய, கல்வி உயர்கல்வி அமைச்சிடம் இருந்து அனுமதிக் கடிதம் எடுத்து வரும்படி தெரிவித்தார்.

ஜனவரி 19ம் திகதியிடப்பட்ட இசுருபாய கடிதத்துடன் 24ம் திகதி அதிபர் அவர்களை சந்திக்க, அவர் கடிதத்தை போட்டோ பிரதி எடுத்து வைத்துக் கொண்டு, தங்களுக்கு பதில் வந்ததும் அறிவிப்பதாக கூறினார். பதில் வராததினால் பெப்ரவரி 2ம் திகதி மீண்டும் அதிபர் அவர்களை சந்தித்தேன். கல்லூரி விடுமுறைவிட இருப்பதால் அதன் பின் அறிவிப்பதாக தெரிவித்தார்.

14ம் திகதி விடுமுறை முடியவும் பதில் வராததால் 21ம் திகதி அதிபரை சந்திக்க, அவர் பாடசாலை அனுமதி விண்ணப்ப படிவத்தில் அனுமதி எடுத்து வரும்படி கூறியதால் 24ம் திகதி அனுமதி கடிதத்துடன் இந்து கல்லூரி அதிபர் அவர்களை சந்திக்க, அதையும் போட்டோ பிரதி எடுத்து வைத்துக்கொண்டு உயர் கல்வி அமைச்சில் பாடசாலை அபிவிருத்தி கிளையில் இருந்து பாடசாலை விண்ணப்பத்தில் அனுமதி எடுத்து வரும்படி மீண்டும் தெரிவித்தார்.

மார்ச் 3ம் திகதி அனுமதி கடிதத்துடன் அதிபரை சந்தித்தேன். அவர் பாடசாலையில் இடம் இருந்தால் மட்டும் அனுமதிக்கவும் என்று இருப்பதால் பாடசாலையில் இடம் இல்லை என்றும் அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் அவர்களின் கடிதம் கொண்டுவந்தால் உடன் சேர்த்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

வகுப்பில் இடமில்லை என்று 2 மாதங்களுக்கு முன்பே சொல்லி இருந்தால் மாணவரை வேறு பாடசாலையிலாவது அனுமதிக்க முடிந்திருக்கும்.

இந்து கல்லூரியில் ஆண்டு 7க்கான ஐந்து வகுப்புகளில் சுமார் 200 மாணவர்களும் கல்வி கற்கிறார்கள். ஆனால் பல சிரமங்களுக்கு மத்தியில் கொழும்பு வந்துள்ள- புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தகுதியுள்ள- பாதிக்கப்பட்ட ஒரு மாணவருக்கு கல்வி, உயர்கல்வி அமைச்சு கடிதம் இருந்தும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஒரு தந்தை
ந.முத்துக்குமார்-கொழும்பு-15.

## தீர்ப்பதாக சொல்கிறார்கள் பிரதிநிதிகள்! தீராமல் தொடர்கிறது பிரச்சனைகள்!!

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான அரச நிறுவனங்கள் சொந்தக் கட்டிடம் இன்றி வாடகைக் கட்டிடங்களிலே இயங்குகின்றன. பிரதேச சபை, மிருக வைத்தியசாலை, பொலிஸ் நிலையம் போன்றவைகள் பன்னெடுங்காலமாகவே இவ் அவல நிலையில் இயங்குகின்றன.

அக்கரைப்பற்று பொதுமக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொது நூலக மாடிக் கட்டிடத்திலேயே பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. இதனால் வாசகர்கள் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கல்விக் காரியாலய கட்டிடத்தின் ஒரு பகுதியிலும் கூட்டுறவுக் கட்டிட மேல் மாடியிலுமே பிரதேச செயலகம் இயங்குகின்றது.

பயங்கரவாதப் பிரச்சனையை சாட்டாக வைத்து இப்பகுதியில் உள்ள அபிவிருத்திகளுக்கு ஆப்பே வைக்கப்பட்டுள்ளது எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு சுமார் 45000 பொதுமக்களுக்காக இயங்கும் அக்கரைப்பற்று எழுவட்டுவான் மாவட்ட வைத்திய சாலையிலும் ஒரே ஒரு அம்புலன்ஸ் வண்டியே உள்ளது. காலத்துக்குகாலம் இப்பகுதிகளுக்கு வரும் பா.ம. உறுப்பினர்களும் அமைச்சர்களும் இது பற்றி கவனம் எடுப்பதாகத் தெரிவிப்பார்கள். ஆனால் எவ்வித முன்னேற்றமும் ஏற்படுவதில்லை. கரடுமுரடான பாதைகள் - நடந்து கூடச் செல்ல முடியாத பாதைகளும் இங்குள்ளன.

சென்ற வருடம் இங்கு திறக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலை வைபவத்தில் கலந்து கொள்வதற்கு வருகை தந்த காலம் சென்ற ஜனாதிபதி ஆர் பிரேமதாச அவர்களின் வருகையை முன்னிட்டு பாதைகள் உடனடியாக இரவோடு இரவாக திருத்தப்பட்டன.

அதன் பின் எதுவுமே கிடையாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏன் இப்படி நடந்து கொள்கின்றார்கள் எனப் பொதுமக்கள் வினவுகின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து மேற்கூறப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முன்வர வேண்டும் எனப் பலரும் பேசிக்கொள்கின்றனர்.


பிறந்தநாள் வாழ்த்து



FATHIMA SAHAMA

*பேருவல மஹகொடையைச் சேர்ந்த முஹம்மட் ஹனபி (செரண்டிப் பேருவல) பாதிமா றியாஸா தம்பதிகளின் செல்வப் புதல்வி **பாதிமா சஹாமா** தனது முதலாவது பிறந்த நாளை 29.04.94ல் தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார்.*

இவரை டடா, மமி, அன்பு தாத்தா பாதிமா சஸ்னா. உம்மும்மா, வாப்பும்மா, அப்பா, அங்கிள்மார்களான புர்கான், பர்ஹான் (சவூதி), இம்டியாஸ், பாஸில், ஆன்டிமார்களான ரியாஸா, பாக்கிறா, ரிஸ்மியா மற்றும் நூர் பெரியப்பா குடும்பத்தினர், சாச்சாமார்களான ஜெஸூல், பஹ்மி, இப்பதுர் ரஹ்மான் குடும்பத்தினரும் மற்றும் ஆச்சிமார்கள், அப்பாமார்கள், சாச்சிமார்கள், சாச்சாமார்கள், மாமாமார்கள், மாமிமார்கள், தாத்தாமார்கள், நாநாமார்கள், மச்சான்மார்கள், மதினிமார்கள் உற்றார் உறவினர் அனைவரும் பாதிமா சஹாமாவை அல்லாஹ்வின் அருளால் பல்லாண்டு காலம் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்க என வாழ்த்துகிறார்கள்.



தினமுரசில் விளம்பரம் செய்யுங்கள்
820265


# புகார் பெட்டி

## தாமதமாகும் ஓய்வூதியம்

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தபாலதிபர் ஒருவருக்கு ஒன்பது மாதங்களாகியும் இன்னமும் ஓய்வூதியம் வழங்கப்படவில்லையாம்.

ஓய்வு பெற்ற தினத்திலிருந்து ஒருமாத காலத்துள் ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும் என்று அரசு அறிவித்திருக்கின்ற போதிலும் 01.08.93 தொடக்கம் ஒய்வு பெற்றும் இதுவரை ஓய்வூதியம் வழங்கப்படாததால் உணவுக்குக்கூட கஷ்டப்படும் நிலைக்கு அத்தபாலதிபர் தள்ளப்பட்டிருக்கிறார்.

இத்தகைய தாமதத்துக்கு மட்டக்களப்பு பிரதேச நிருவாக அலுவலகத்தின் "உறங்கலிருக்கைச்" செயற்பாடே காரணம் என நம்பப்படுகிறது.

தொடர்ந்தும் இதே நிலை நீடிக்குமாயின் பென்சன் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றம் செல்ல வேண்டியேற்படும் என அத்தபாலதிபர் வேதனையுடன் முரசுக்குத் தெரிவித்தார்.

## வெளிச்சம் வருவது எப்போது?

களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள இங்கிரியா நகரில் இருக்கும் மக்கள் மயமாக்கப்பட்ட போக்குவரத்து பஸ் தரிப்பு நிலையத்தில் இரவு நேரங்களில் மின்சார வசதியில்லாத காரணத்தால் இவ் பஸ்தரிப்பு நிலையம் இருளில் மூழ்கி கிடக்கிறது.

இதனால் பயணிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இப்படியான அவல நிலையை போக்க இங்கிரியா மின்சார சபை முன்வருமா?

றைகம-ஸ்ரீகாந்தன்
இங்கிரிய.

## தமிழில் கேட்க கிடைக்காதா?

நல்ல விறுவிறுப்பான குடும்ப பிரச்சனைகளை உள்ளடக்கிய "அனுபமா" என்ற தொடர் நாடகத்தை டி.என்.எல். மூலம் பார்த்து மகிழ்ந்தோம். அந்நாடகத் தொடர் சிங்கள மொழிக்கு மாற்றப்பட்டு ஒலிபரப்பானாலும் வானொலியில் எப்.எம். அலைவரிசையில் தமிழ் மொழியில் கேட்க கூடியதாய் இருந்தது.

ஆனால் 20.03.94 அன்று தொடங்கிய "என் அன்பு ராணி" என்ற புதிய நாடகத் தொடரை சிங்கள மொழியிலேயே கேட்க கூடியதாய் உள்ளது. ஏன் முன்பு போல் எப்.எம். அலை வரிசையில் தமிழில் ஒலிபரப்பலாமே? இந்த இனிய நாடகத்தையும் தமிழில் கேட்கும் வாய்ப்பு தமிழ் ரசிகர்களுக்கு கிட்டாதா?

செல்வி.சரவணேஸ் டெயிசி-கலவானை.

## பஸ் தரிப்பு நிலையத்தில் உள்ள குறை!

கல்முனைப் பிரதேசமும் கல்முனைப் பஸ்தரிப்பு நிலையமும் கிழக்கு மாகாணத்தின், அம்பாறை- மட்டக்களப்பு ஆகிய இரு பெரும் நகரங்களின் மத்தியில் அமைந்துள்ளதொரு பிரதான நிலையமாகும்.

இவ்வாறு மிகவும் முக்கியமானதொரு நிலையத்திற்கு நீண்ட காலமாக பொது மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப் படாதது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

நீண்டதூர பஸ், மற்றும் தனியார்த்துறை வாகனப் பயணிகள் தங்களின் அவசரத் தேவைகளுக்காக இங்கு ஒரு பொது மலசலகூட வசதி இல்லாது மிகவும் சிரமப்படவேண்டியுள்ளனர்.

கல்முனைப் பஸ் நிலையத்துக்குப் பின்பக்கமாக கல்முனைச் சந்தாங்கேணி பொது மைதானம் அமைந்திருப்பதால் இங்கு வரும் பயணிகள் தங்கள் அவசரத் தேவைகளுக்காக இம்மைதானத்தையே பயன்படுத்தி வருவது இங்கு பயிற்சியில் ஈடுபடும் விளையாட்டு வீரர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் அசௌகரியங்களைக் கொடுப்பதோடு சுகாதாரத்துக்கும் பாதிப்பைக் கொடுக்கும் நிலையும் ஏற்படுகின்றது.

எனவே இனிமேலும் காலம் தாழ்த்தாது கல்முனைப் பிரதேசத்துக்கு பஸ் நிலையத்தை மையமாகக் கொண்ட பொது மலசலகூட வசதியை ஏற்படுத்திக்கொடுக்க சம்பந்தப் பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்.

எஸ்.ரி.எம்.பஸ்வாக்-கல்முனை-05.

## மீளாத் துயரில் மீனாட்சி அம்மன்! கவனிக்குமா இந்து கலாசார அமைச்சு?

(நிந்தவூர் நிருபர்)



நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மாட்டுப்பனை விவசாயக் கண்டத்தில் சுற்றிவர நெற்காணிகளுக்கு மத்தியில் அமைந்திருக்கும் மீனாட்சி அம்மன் ஆலயத்தின் இன்றைய தோற்றத்தையும், அங்குள்ள மடம் சிதைந்த நிலையில் காடு வளர்ந்து காணப்படுவதையுமே இங்கு படங்களில் காண்கிறீர்கள்!

1990ம் ஆண்டு இப்பிரதேசத்தில் நிலவிய பயங்கரவாத நிலமைகளின் போது இந்த ஆலயத்தின் பொலிவுகள் சிதைக்கப்பட்டதுடன், மடமும் உடைத்துப் பாழாக்கப்பட்டன.

தற்பொழுது இந்த ஆலயத்தில் வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் சிதைவுற்ற ஆலயத்தைப் புனரமைத்து புதுப்பொலிவு வழங்குவதற்கு எவரும் முன்வரவில்லை!

சரித்திரப் பிரசித்திபெற்ற இந்த ஆலயத்தைப் புனரமைத்து புதுப்பொலிவு வழங்கும் விடயத்தில் இந்து கலாசார அமைச்சு கவனம் செலுத்துமா? என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

## ஆதார வைத்தியசாலையின் அவல நிலை

(காரைதீவு நிருபர்)

மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் ஆதார வைத்திய சாலை மகிழடித்தீவு கிராமத்தில் அமைந்துள்ளது. 1990ம் ஆண்டுவரை இப்பகுதி மக்களுக்கு சிறந்த சேவையாற்றிவந்த மேற்படி வைத்தியசாலையில் ஒரு புதிய மகப்பேற்று விடுதியும் பல இலட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 1990ம் ஆண்டின் பின் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையினால் இவ்வைத்தியசாலை கைவிடப்பட்டதோடு மாடுகள் தங்கும் இடமாகக் காட்சியளிக்கின்றது. போக்குவரத்து வசதியற்றதும் மண்முனை வாவியினால் பிரிக்கப்பட்டதுமான இப்பகுதி வாழ் மக்கள் மட்டக்களப்பு வைத்திய சாலைக்கு பல இன்னல்களுக்கு மத்தியில் வர வேண்டியுள்ளது. இதனால் துரித வைத்திய சேவை கிடைக்காது மரணங்கள் சம்பவிக்கின்றன. நாட்டில் நிலைமை சீரடைந்து சிவில் நிர்வாகம் நடைபெறும் இவ்வேளையில் கூட இவ்வைத்தியசாலை கவனிக்கப்படாது இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

## குடிநீர் வசதியில்லை! குழந்தைகள் பரிதவிப்பு!!

கிண்ணியா நெல் சந்தைப்படுத்தும் களஞ்சியத்தில் புதிதாக (01.02.94) திறந்து வைக்கப்பட்ட தி/ரீ.பி.ஜாயா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு குடிநீர் வசதிகள் இல்லை. இதனால் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

இவ் வித்தியாலயத்தில் ஆண்டு ஒன்று தொடக்கம், 5ம் ஆண்டு வரைக்கும் 650க்கும் மேற்பட்ட பெண்கள் தனிப்பிரிவாக கல்வி பயிலுகின்றனர்.

இக்கட்டடம், ஒரு திறந்த கட்டடமாக இல்லாததாலும், இப்பகுதியில் வெப்ப நிலை கூடிய நிலையில் காணப்படுவதாலும், இக்கட்டடத்தினுள் கல்வியை பயிலுவதிலும் இக் குழந்தைகள் பெரும் அவஸ்தைக்குள்ளாவதையும் காணக் கூடியதாகவுமிருக்கின்றது.

எனவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் இக்குழந்தைகளின் நலனுக்காக உடனடியாக அவசர தேவைகளை நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டும்.

கிண்ணியா-நிருபர்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஜனநாயக நீரோட்டமும் தத்தளிக்கும் தமிழ்க்கட்சிகளும்

அமைச்சர் தொண்டமானும், ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவும் சமீபத்தில் சந்தித்துக்கொண்டபோது ஒரு கோப்பை சோறு, முள்ளுக்கரண்டி உதாரணம் எதுவும் குறுக்கிடவில்லை.

தமது சம வயது பற்றி நினைவூட்டிய ஜனாதிபதி அவர்கள், ஒரு கோப்பை சோறு கணக்கு சொல்லி பிணக்கை வளர்க்க விரும்பவில்லை என்றே தெரிகிறது.

தென் மாகாண தேர்தலில் ஆளும் கட்சிக்கு நெற்றிப் பொட்டில் விழுந்த அடியானது ஜனாதிபதியையும் நிதானித்து யோசிக்க வைத்திருக்கிறது.

அவரது அதிவேகமான பேச்சுக்களும் தற்போது கடிவாளமிடப்பட்ட நிலையில் இருக்கின்றன.

இனப்பிரச்சனை இல்லவே இல்லை என்றும், மற்றும் பல்வேறு உதாரணங்கள் மூலமாம் தமிழ் பேசும் மக்களை சலிப்படைய வைக்குமளவுக்கு வாய் வலிக்காமல் பேசிவந்த ஜனாதிபதி அவர்கள் தற்போது அடக்கி வாசிப்பதுபோல தோன்றுகிறது.

எனினும், ஜனாதிபதியின் பேச்சுக்களை தமிழ் பேசும் மக்கள் அத்தனை சுலபமாக மறந்துவிடுவார்கள் என்று தோன்றவில்லை.

ஆனால், அமைச்சர் தொண்டமானை நண்பராக்கிக் கொள்வதில் ஜனாதிபதி வெற்றி பெற்றுவிட்டார்.

தனது அரசியல் பலமே ஜனாதிபதியை நட்பு நாடி வரவைத்தது என்று அமைச்சர் தொண்டமான் கூறியிருப்பதில் உண்மை இல்லாமல் இல்லை.

எனினும், தொண்டமானின் அரசியல் பலம் மொத்தமான தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகள் குறித்து ஜனாதிபதியை சிந்திக்க

அமைச்சர் செல்லச்சாமி அணியினர், ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியிருந்தபடி உரிய காலத்திற்கு முந்தைய தமது அவசர முடிவுக்கு வருந்தியே ஆகவேண்டிய கட்டம் வந்திருக்கிறது.

அமைச்சர் தொண்டாவை பகைத்துக் கொள்ள ஆளும் கட்சி இனி விரும்பாது.

ஆக, ஜனாதிபதி- அமைச்சர் தொண்டா உறவு இரு தரப்புக்கும் அரசியல் இலாபம். அதனால், இனப்பிரச்சனை தீர்விற்கு என்ன இலாபம் என்று கணக்குப் பார்க்கக்கூடாது. ஏனெனில் தொண்டா முதலில் மலையகத் தமிழ் மக்களது தலைவர்.

ஒரு சிலர் எதோ சில இலாபங்களுக்காக அமைச்சர் தொண்டமானை முழுத் தமிழ் மக்களுக்கும் தலைவர் என்று சித்தரித்துக்காட்ட முற்படுகிறார்கள்.

ஆனால், அமைச்சர் தொண்டமான் தன்னை ஒருபோதும் அப்படிச் சொல்லிக் கொண்டதில்லை. எனவே- அமைச்சர் தொண்டமான்மீது வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் வருத்தப்பட வேண்டியதில்லை.

அரசாங்கத்தை எப்போது மிரட்ட வேண்டும். எப்போது பலம் காட்டி பணியவைக்க வேண்டும். எந்தக் கட்டத்தில் எந்த இடத்தில் அடிக்க வேண்டும் என்ற கலையில் முதிர்ச்சி உள்ளவர் அமைச்சர் தொண்டமான். அதனை மத்திய மாகாண சபை விசயத்தில் தவற விட்டபோதும், மீண்டும் நிரூபித்து விட்டார்.

'தொண்டாவா..' என்று இனிமேல் ஜனாதிபதி விஜேதுங்கா அலட்சியம் செய்ய முடியாது. ஏன் என்றால் மிக விரைவில் தேர்தல்கள் வருகின்றன.

இதில் இன்னொரு விசயமும் இருக்கிறது. அமைச்சர் தொண்டா தொடர்ந்து அரசை விமர்சிக்கலாம். முன்புபோல் காரசாரமாக

வைத்திருக்கிறதா என்றால் பெரும்பாலும் இல்லை என்றே பதில் சொல்ல வேண்டும்.

அமைச்சர் தொண்டமான்கூட தமது ஆதரவை ஆளும் கட்சிக்கு வழங்குவதாயின் இனப் பிரச்சனை விடயத்தில் அரசியல் தீர்வு முன் வைக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தவில்லையே என்று ஒரு சாரார் விமர்சனம் செய்கிறார்கள்.

அதற்கு பதில் சொல்லும் மறுசாரார், தொண்டா முதலில் மலையக தமிழர்களது தலைவர். அதற்கு அடுத்த பட்சமாகத்தான் வடக்கு-கிழக்கு தமிழர்களது பிரச்சனையை அவர் நோக்குகிறார் என்பதை மறந்து விடக்கூடாது என்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களிடம் உங்கள் பிரச்சனையை தீர்க்கிறேன் என்று தொண்டா ஒரு போதும் கூறவில்லை.

ஒரு மத்தியஸ்தரின் நிலையில் இருந்துதான் தனது பங்கை செய்வதாக கூறிவருகிறார். மலையகத்தில் தனது கட்சியையும், தனது தலைமைத்துவத்தையும் பாதுகாப்பதும், பலப்படுத்துவதுமே தொண்டாவின் முழு முதல் பணி, என்பது மறு சாராரின் வாதம்.

மறுசாராரின் வாதப்படி பார்க்கும்போது, ஆளும் கட்சியோடு மீண்டும் நல்லுறவை ஏற்படுத்தியதன் மூலம் தனது கட்சிக்குள் ஏற்பட்ட பூசலில், தனது எதிராளிகளை தொண்டா திகைக்க வைத்திருக்கிறார்.

இல்லாவிட்டாலும் துணிந்து விமர்சிக்கலாம்.

ஆனால் ஜனாதிபதி முன்புபோல அமைச்சர் தொண்டாவை விமர்சனம் பண்ண முடியாது.

காரணம் மிகத் தெளிவானது. ஜனாதிபதியின் ஆதரவு தொண்டாவுக்கு அவசியமில்லை. ஆனால் தொண்டாவின் ஆதரவு ஜனாதிபதிக்கும் ஆளும் கட்சிக்கும் மிகவும் அவசியம்.

எனவே அமைச்சர் தொண்டா தொடர்ந்து அரசை விமர்சித்துக் கொண்டே இருக்கலாம். அதன் அர்த்தம் உறவு முறியும் என்பதல்ல.

முன்னரும் இதோ முறிகிறது, அதோ முறிகிறது என்றார்கள். முரசு மட்டும்தான் உறவு முறியாது என்று முதலில் சொன்னது.

■

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட தமிழ் கட்சிகள் சில தயாராகி வருகின்றன.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கால நேரம் சரியில்லை என்று கொள்கை பேசிய கட்சிகள்கூட அடுத்து வரும் தேர்தல்களில் போட்டியிட ஆசை கொண்டுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்துகொள்ள முற்படுவதுபோல் தோன்றுகிறது.

ஆயுதம் ஏந்திவிட்டு ஜனநாயக நீரோட்டம் வந்த இயக்கங்களுக்கு அரசியல் தெரியவில்லை. வியாபார தந்திரம் தெரியாதவர்கள் கடை விரித்து நஷ்டப்படுவதுபோல, விவரம் தெரியாதவர்களையெல்லாம் அரசியல் வாதிகளாக அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

முன்னர் ஆயுதங்களோடு இருந்தபோது மக்கள் விரோதிகள் என்று பலரை துரத்தித் திரிந்தார்கள். சிலரை தண்டித்தார்கள். கொன்றும் போட்டார்கள்.

இப்போது அதே இயக்கங்கள்சில தம்மால் துரத்தப்பட்டவர்களைவிடவும், தண்டிக்கப்பட்டவர்களை விடவும் மோசமான நபர்களையெல்லாம் மக்கள் பிரதிநிதிகள் என்று அறிமுகப்படுத்துகின்றன.

மக்களுக்கும் இந்த அசிங்கங்கள் தெரியவே செய்கின்றன.

ஆயுதத்தோடு நின்று அடாவடித்தனம் செய்தவர்கள், நடு இரவில் வந்து கொள்ளையிட்டவர்கள்- வாக்குத் தேடி வந்து கதவைத் தட்டும்போது பயத்தோடுதான் வீட்டுக் கதவை திறக்க வேண்டும்.

அவர்கள் தாம் முன்னர் இருந்த இயக்கங்களை மாற்றிக் கொண்டாலும், அவர்கள் மீது உள்ள வெறுப்பான அபிப்பிராயங்களை மக்கள் மாற்றிக்கொள்ள மாட்டார்கள்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அநாகரிகமான ஆட்கள் மூலம் தேர்தல் திருவிழா நடத்திய அமைப்புக்கள் எதிர்வரும் தேர்தலிலும் "மக்கள் தலைவர்களை" உருவாக்க முயலக்கூடும்.

அவ்வாறு நடக்குமானால் மக்களது வெறுப்பு தமக்கு சாதகமாகும் என்றே தமிழர் விடுதலைக் கூட்டணி நினைக்கிறது.

தம்மை அரசியல் ரீதியில் தகுதி பொருந்திய தலைமைத்துவமாக வெளிப்படுத்த தமிழ் அமைப்புக்களுக்கு நிறையவே சந்தர்ப்பம் இருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையை தூக்கி எறிய என்ன காரணங்களை எல்லாம் ஏனைய தமிழ் அமைப்புக்கள் சொல்லிக் கொண்டிருந்தனவோ அதையெல்லாம் மறந்துவிட்டு தரமற்ற அரசியலைத்தான் அந்த அமைப்புக்களால் உருவாக்க முடிந்திருக்கிறது.

தமது அரசியல் பலத்திற்கு ஏற்ப சிந்திக்காமல் அகல கால் வைத்து எங்கும் எமது கட்சிக்கு ஆட்கள் இருக்கிறார்கள் என்று காட்டிக்கொள்ளவே விரும்புகிறார்கள்.

அதனால் ஏதாவது ஒரு பகுதியில்கூட முன்னுதாரணமான கட்சி அமைப்பை கட்டி எழுப்ப முடியாமல் தடுமாறுகிறார்கள்.

நிலமை மாறும்போது பக்கம் மாறுகிறவர்களை கொண்டு வந்து மக்களுக்கு தலைமை கொடுக்கப் போவதாக சொல்வதை யாரும் நம்பத் தயாராக இல்லை.

தலைவர்களுக்குள் மட்டும்தான் போட்டி. தலைவர்கள் தமக்குள் ஒன்றுபட மாட்டார்கள்.

அதனால் அமைப்புக்களின் பெயர்கள் மட்டும் வேறுபட்டாலும் தோற்றம் ஒரு மாதிரியாகவே இருக்கிறது.

அங்கிருந்தவர் இங்கே; இங்கிருந்தவர் அங்கே. கொள்கை முரண்பாடு தலைவர்களுக்குள் மட்டும்தான்.

தலைவர்களுக்கு அடுத்த நிலையில் இருந்து பல தவறுகளுக்கு காரணமாக இருந்தவர்கள் கூட அனுபவிப்பதை எல்லாம் அனுபவித்துவிட்டு பக்கம் மாறி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தலைவர்கள் மட்டும்தான் இருந்த இடத்தில் இருக்கிறார்கள்.

அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அமைப்புக்கள் தம்மை திடப்படுத்திக்கொள்ளாமைக்கு எதிலும் திட்டவட்டமான வரையறை இல்லாமைதான் காரணமாக இருக்கிறது.


அதனால் மேற்கண்ட அமைப்புகள் புலிகளுக்கு எதிராக செய்யும் பிரசாரங்களும்- அவற்றில் உண்மை இருந்தாலும் கூட- அவ்வளவாக எடுபடவில்லை.

மக்களால் வெறுக்கப்படுகிறவர்களை தங்கள் அணிகளில் வைத்துக்கொண்டு, புலிகளது நடைமுறைகள் பற்றி செய்யப்படும் விமர்சனங்கள் யார் காதிலும் விழுவதாகத் தெரியவில்லை.

இந்த இலட்சணத்தில் அரசுக்கு எதிராக எச்சரிக்கை, கண்டனம் என்று சில அமைப்புக்கள் பேசத் தொடங்கியுள்ளன.

அவற்றின் பலம் என்ன என்பது அரசுக்குத் தெரியும் என்பதால் அந்தப் பேச்சுக்களை அரச தரப்பும் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை.

எனவே- அரசியலில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருக்கிறது.




## நாரதர்

# குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவருக்கு அரச தினசரி கண்ணீர் அஞ்சலி



புலிகளது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் தேர்தல் நடத்தப்படும் போது வாக்காளர்களால் மதிக்கப்படக்கூடிய ஒரு தலைமைத்துவம் என்று எவரையும் சுட்டிக்காட்ட முடியவில்லை.

ஆகவே- தமிழர் விடுதலைக் கூட்டணி அந்த வெற்றிடத்தை நிரப்பலாமோ என்று யோசித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், புலிகள் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்று கடுமையான நிலை எடுத்தால் கூட்டணி பின்வாங்கக்கூடும். "நேரமும், காலமும் சரியில்லை, தேர்தல் வேண்டாம்" என்று நீண்ட அறிக்கை விடக்கூடும்.

ஏனைய தமிழ் அமைப்புக்கள் பற்றி கூட்டணி அத்தனை தூரம் கவலைப்படாது.

புலிகள் எடுக்கும் நிலைப்பாடுதான் கூட்டணிக்கு கவலைக்குரிய விசயமாக இருக்கும்.

இதற்கிடையே தமிழ் கட்சிகள் சில கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவது பற்றி இடைக்கிடையே கூடிப் பேசுகின்றன.

தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் தினம் வரை பேச்சு தொடரலாம். பயன் மட்டும் அநேகமாக பூச்சியமாகவே இருக்கும்.

மறுபுறத்தில் இன்னொரு முயற்சி. ஜனாதிபதித் தேர்தலுக்கு தமிழர்களது வாக்குகளைப் பெறக்கூடிய பொது வேட்பாளரை நிறுத்த இரகசிய கூட்டங்கள், ஆலோசனைகள் நடத்தப்பட்டன.

அமைச்சர் தொண்டமானை பொது வேட்பாளராக நிறுத்தலாமோ என்று யோசிக்கப்பட்டது.

இப்போது அது சாத்தியமில்லை என்பதால், திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் (ஜுனியர்) ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடும் என்று பேசப்படுகிறது.

திரு. ஜீ.ஜீ. ஜுனியர் புலிகள் அமைப்பை பகிரங்கமாகவே பாராட்டியவர். ஏனைய தமிழ் அமைப்புக்களை கேலி செய்தும் இருக்கிறார்.

இந்நிலையில் ஏனைய தமிழ் அமைப்புக்கள் அவரை ஆதரிக்க முன்வந்தால் அவர் சொன்னவற்றை ஏற்றுக்கொண்டதாக போய்விடும்.

எனவே- ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் திட்டமும் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

தமிழ் கட்சிகள் யாவும் ஒன்றுபட்டு அதனால் உருப்படியான முயற்சி ஏதாவது உருப்பெறுமா என்பது சமீபகாலத்தில் சந்தேகத்திற்குரிய விடயம்தான்.


■

கொழும்பு குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட அன்ரனி அல்போன்ஸ் அருள்தாசுக்கு கனடாவில் புலிகளின் பத்திரிகையில் வந்த அஞ்சலி முரசில் வெளியாகியிருந்தது.

பின்னர் கடந்த சனிக்கிழமை அரசாங்க ஆங்கில தினசரி அந்த அஞ்சலிக் கவிதையை ஒரு சொல்விடாமல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தது.

அல்போன்ஸ் அன்ரனி அருள்தாசுக்கு அரச தினசரியும் அஞ்சலி செலுத்தியது போல் இருந்தது. அந்த அஞ்சலி எவ்வித விளக்கமும் இல்லாமல் வெளியிடப்பட்ட முறை.

## அதிரடி அய்யாத்துரை



கொழும்பில் பிரபல புத்திஜீவி ஒருத்தர் அரசியல் மேடைக்கு தாவியிருக்கிறார். இவருக்கு கல்வி அறிவித்த குரு ஒரு தமிழர். பிறகு அந்த குருவுக்கே கால் தடம் போட்டு விழுத்திப் போட்டு பதவிக்கு வந்தவராம், இவர்! அது பழைய கதைதான். எண்டாலும் அரசியலில் புத்திஜீவி குதிச்சா நேர்மையும்கூட வந்து குதிக்கும் எண்டு நாங்கள் எக்கச்சக்கமாய் எதிர்பார்க்கக்கூடாது பாருங்கோ. அதுக்குத்தான் சொல்லி வைக்கிறன். புத்திஜீவிகள் வரட்டும். கையிலை இனவாத கத்தி இல்லாட்டி சரிதான். என்ன, நான் சொல்லுறது சரிதானே!

கிழக்கிலை வீடுகளுக்குள்ள அடைஞ்சு கிடக்கிற எங்கட ஆக்கள் கலை நிகழ்ச்சி, பாட்டு கச்சேரி எண்டா வெளியிலை வருவினம். களைச்சுப் போன சனத்துக்கு ஒரு பொழுது போக்கெண்டா மாறுதல் தானே பாருங்கோ. ஆனால் ஒரு விசயம். பாட்டுக் கச்சேரி பார்க்க வாற சனம் எல்லாம் தங்களுக்கு வோட்டுப் போடுவினம் எண்டு அரசியல் கட்சியள் சிலது நினைக்கிறது மெத்தப் பிழை. ஏன் சொல்லுறன் எண்டால் கட்சி கூட்டத்தோடை கச்சேரி வைக்கிற சீஸன் இப்ப துவங்கியிருக்கிற மாதிரித் தெரியுது.

தேச வழமை சட்டத்திலை ரெண்டு எழுத்துக்காரர் செய்திருக்கிற மாறுதல்களுக்கு வடக்கிலை வரவேற்பு இருக்குதாம். கலர் கலராய் புரட்சி பேசின ஆட்கள் செய்ய தவறியதை ரெண்டு எழுத்துக்காரர் செய்திருக்கிறதை நினைச்சா சந்தோசமாய்த்தான் பாருங்கோ இருக்குது. தாய்க்குலம் ரெண்டு எழுத்தாரை சட்ட மாற்ற விசயத்திலை சப்போர்ட் பண்ணுதாம்.

கொழும்பு தங்கும் விடுதி ஒண்டிலை செக்கிங். மாட்டுப் பட்டவர் வலு பக்குவமா, தான் எங்கையெல்லாம் உள்ளுக்கு இருந்தனான் எண்டு பட்டியல் போட்டு சொல்லியிருக்கிறார். அவர் சொன்னதை பக்குவமா காதுகொடுத்துப்போட்டு, வந்தவை கேட்டினமாம், "எல்லா இடமும் இருந்தனீர், எங்கடை ஸ்ரேசனிலை இருந்தனீரோ?" "இல்லை!" "அப்பிடியெண்டா வாரும்!" எண்டு கையோடை கூட்டிக்கொண்டு போட்டினமாம். இப்ப அவருக்கு தலைநகர், புறநகர் எண்டு சகல ஸ்ரேசன்களும் அத்துப்படி.

கொழும்பு குண்டு வெடிப்பிலை மாண்டவர் கனடாவிலை இருந்து வந்தவர் மாதிரி இருக்கிறார் எண்டு செய்தி வந்தவுடனை கனடாவிலை அருள்தாஸ் எண்ட பெயரோடை இருக்கிற சிலரை கனடா உளவுப் பிரிவு துருவு துருவென்று துருவிப் போட்டுதாம். பிறகு மாண்டவர் யார், அவர் கனடாவிலை எங்கை இருந்தவர் எண்டெல்லாம் கண்டு பிடிச்ச பிறகுதான் அந்த பெயரோடை இருந்த ஆட்கள் அப்பாடா எண்டு பெருமூச்சு விட்டவையாம்.

சுவிசிலை இருந்து திருப்பி அனுப்பிற லிஸ்டிலை இருந்த கனபேர் பக்கத்து நாடுகளுக்கு பாயஞ்சிட்டினம். எங்கடை பொடியளா? கொக்கா?

அம்பிகாவதி-அமராவதி காதல் கதை உங்களுக்கு தெரியும். அமராவதி மீது மையல் கொண்டு அம்பிகாவதி பாட, சோழனுக்கு வந்தது கோபம். "நூறு செய்யுள் பாடவேண்டும். சிற்றின்ப வாசனையே கூடாது. அந்த வாசனை வந்தால் மரண தண்டனை." அரச கட்டளை! அம்பிகாவதி பாடினாள். 99வது செய்யுள் முடிய எதிரே அமராவதி! எல்லாம் போச்சு. நூறாவது செய்யுள் கவிழ்த்துப் போட்டுது. அந்த செய்யுள் இதுதான்.

"சற்றே பருத்த தனமே
குலுங்கத் தரள வடத்
துற்றே யசையக் குழையூசல் ஆடத்
துவர் கொள் செவ்வாய்
நற்றேன் ஒழுக நடன
சிங்கார நடையழகின்
பெற்றோர் இருக்கத் தலையலங்
காரம் புறப்பட்டதே"

காதலுக்கு கண் இல்லையோ? ஏன் இல்லை? இருந்ததால்தானே கண்டு மயங்கி அம்பிகாவதி சாகவேண்டி வந்தது. ■

# வராதே என்கின்றன வளைகுடா நாடுகள்! விரிவடைகிறது வேலையில்லா திண்டாட்டம்!!

இலங்கை-இந்தியா போன்ற வளரும் நாடுகளில் வேலை இல்லாத் திண்டாட்டத்தை வளைகுடா நாடுகள் ஓரளவு பகிர்ந்து கொண்டன.

வளைகுடா நாடுகளுக்கு போனால் சம்பாதிக்கலாம் என்று வளரும் நாடுகளில் உள்ளவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

இப்போது அந்த ஆசையிலும் மண் விழுந்திருக்கிறது.

இந்தியா உட்பட வளரும் நாடுகளில் இருந்து வருவோருக்கு வேலை கொடுப்பதை குறைக்க வளைகுடா நாடுகள் தீர்மானித்துள்ளன.

இதன் காரணம் என்ன? 1991ல் குவைத்தை ஈராக் பிடித்தது. அமெரிக்கா தலைமையில் பன்னாட்டு படைகள் தலையிட்டு குவைத்தை மீட்டன.

அப்போதுதான் ஒரு விசயம் தெரிய வந்தது- குவைத்தில் உள்ள மக்களை விடவும் வெளியார் தொகை அங்கு அதிகமாக இருந்தது.

அமெரிக்க ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டுள்ள 'குவைத்' வெளிநாட்டவர் ஆதிக்கத்தால் கவலையடைந்தது. படிப்படியாக வெளிநாட்டவரை குறைக்கத் தொடங்கியது.

குவைத் செய்வதைப் பார்த்து ஓமான் நாடும் வெளிநாட்டவர்களுக்கு அதிக இடம் கொடுப்பதை குறைத்துக் கொண்டது.

ஓமானிய இராணுவத்தில் பிரிட்டிஷ் பிரஜைகளே அதிகமாக இருந்தார்கள். அதனால் விழித்துக்கொண்ட ஓமான் எதிலும் ஓமானியர்கள் என்ற சட்டம் கொண்டு வந்துவிட்டது.

வளைகுடா யுத்தத்தின் பின்னர் குவைத், சவுதி, ஈராக் போன்ற நாடுகளில் இருந்து 20 இலட்சம் தொழிலாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதனால் அந்த தொழிலாளர்கள் மூலம் வளரும் நாடுகளுக்கு கிடைத்த அன்னிய செலாவணி இழப்பு கொஞ்ச நஞ்சமல்ல. 2250 கோடி ரூபாய்.

வளரும் நாடுகள் வேலை வாய்ப்புகளுக்கும் கையேந்தி நிற்பதை விடுத்து தங்களை வளர்த்துக் கொண்டால்தான் நிரந்தர தீர்வு கிடைக்க முடியும்.

# இளவரசி என்றால் எமக்கென்ன? உள்ளேபோடு 10 மாதம்!

பூட்டான் நாட்டு இளவரசியாக இருந்தவர் டெகி வாங்ககி. (43)

இளவரசி என்றால் சும்மாவோ? ராஜபரம்பரை யாச்சே. அதனால் முக்கிய பிரமுகருக்கு உரிய விசா வழங்கப்பட்டது. பூட்டானுடன் நட்புடைய நாடுகளுக்கு இளவரசியார் போனால் தடபுடலான வரவேற்பு. விசேஷ சலுகைகளும் உண்டு. கடந்த வருடம் தைவானுக்கு விமானத்தில் போய் ஜம்மென்று இறங்கினார் இளவரசி.

தைவான் பூட்டானோடு நட்பு கொண்ட நாடல்ல. ஆகவே அதிகாரிகள் இளவரசியாருக்கு சலுகை காட்டவில்லை. சுங்க அதிகாரிகள் சோதனையிட்டனர். என்னே ஆச்சரியம்! இளவரசியின் பொதிகளுக்குள் இருந்து 22 காண்டா மிருக கொம்புகளும் கரடி பித்தப்பைகள் 9ம் கண்டு பிடிக்கப்பட்டன.

"பணக்கஷ்டம். அதுதான் விற்பதற்கு கொண்டு வந்தேன். கடத்தல் எண்ணம் துளியும் கிடையாது. கடனை அடைப்பதே நோக்கம்" என்று இளவரசி சொல்லிப் பார்த்தார். அதிகாரிகள் விடவில்லை.

நீதிமன்றத்தில் வழக்குதொடுத்தனர். சமீபத்தில் தீர்ப்பு சொல்லப்பட்டது. 10 மாதம் சிறைத் தண்டனை. களிப்போடு வாழ்ந்த இளவரசியார் இப்போது சிறையில் கட்டாந்தரையிலே!

# நீரின்றி வாடும் நிலை தோன்றும் நீர்வள ஆய்வாளர் எச்சரிக்கை!



உணவு உற்பத்தி, தொழில், பொதுச் சுகாதாரம் மற்றும் சுத்தம் பேணல் ஆகிய சகலவற்றுக்கும் இன்றியமையாதது சுத்தமான நீர். உலகளாவிய நிலையில் இன்று நன்னீர்த் தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது. இதனால் பல நாடுகளில் திட்டமிடப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் உடனடியாக நிறுத்தி வைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பிரிட்டனில் 24 சதவிகிதம் நீர் உபயோகப் படுத்தப்படுகிறது. 14 நாடுகள்-10 முதல் 20 சத விகிதமான நீரை பாழடித்து விடுவதனால் அங்கெல்லாம் நீர் தட்டுப்பாடு பெருகி வருகிறது.

1990ம் ஆண்டில் - அபிவிருத்தி கண்டுவரும் நாடுகள் 20 சத விகிதத்துக்கும் அதிகமான நீரை உறிஞ்சி விட்டன.

வட ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் நீர் தட்டுப்பாடு பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. இவற்றில் சில நாடுகள் புதைபடிவ மட்டத்துக்கு மேல் தேங்கியுள்ள நீரை உறிஞ்சி விடுகின்றன. இம் மட்டத்தில் மீண்டும் நீர் சுரப்பதற்கு வழியில்லை என்பதனால் இந்த இழப்பினை மீண்டும் ஈடு செய்ய முடிவதில்லை.

நன்னீர் தட்டுப்பாட்டினை ஈடு செய்ய சில நாடுகள் கடல் நீரைச் சுத்திகரித்து-உப்பு நீக்கிப் பயன்படுத்துகின்றன. கடற்கரையில்லாத வேறுசில நாடுகள், பயன்படுத்திய நீரை மீண்டும் சுத்திகரித்து உபயோகிக்கின்றன.

கி.பி.2000ம் ஆண்டளவில், 11 நாடுகளில் வாழும் 25 கோடி மக்கள் நீரின்றி அவதியுற நேரிடும். 2025ம் ஆண்டில் 21 நாடுகளைச் சேர்ந்த 110 கோடி மக்களுக்கு தண்ணீர் கிடைக்க முடியாமற் போய்விடும். இவ்வாறு நீர்வள ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பல நாடுகளில் அபிவிருத்திப் பணிகளுக்கான திட்டங்கள் உடனடியாக நிறுத்தப்பட்டாக வேண்டும் என்று கூறும் நிபுணர்கள் அந்நாடுகளின் தேசிய வருமானத்தின் பெரும்பகுதி அந்நாட்டு மக்களுக்கான குடி நீரைத் தேடிக் கொடுப்பதற்காகவே செலவிடப்படவேண்டிய நிலை ஏற்படும் என்றும் அபாய அறிவிப்பினை விடுத்துள்ளனர்.


நம் நாட்டிலும் வரட்சி காலத்தில் நீர் வெட்டு நடப்பதுண்டு. அப்போதுமட்டும் நம்மில் பலருக்கு நீரின் முக்கியத்துவம் தெரிகிறது. வரட்சி நீங்கிவிட்டால் நீர் விரயமாவது பற்றி யாரும் கவலைப்படுவதில்லை.

இனியாவது சற்று கவனமாக இருப்போம்: வருங்காலத்தில் நாமும் நீரின்றி வாடக் கூடாதல்லவா!

# போதை வியாபாரிகளும் போருக்குத் தயார்!



கிழக்கு பர்மாவில் போதைக் கடத்தல் அதிகமாக நடக்கிறது. அங்கு ஒரு போதைக் கடத்தல் சாம்ராச்சியமே இருக்கிறது. சாவுவியாபாரிகளின் சாம்ராச்சியத்தில் குன்ஷா என்பவன் மன்னன். போதைக் கடத்தல் கும்பல்களுக்கிடையே மோதல்கள் வரும். சமாளிக்க வேண்டாமோ? அதனால் ஒவ்வொரு கும்பலும் ஆயுதம் தரித்த படை வைத்திருக்கிறது. அந்தப் படைக்கு தனியான சீருடையும் இருக்கிறது. அதுமட்டுமா? இராணுவ அணிவகுப்பு மாதிரியும் நடைபெறுவதுண்டு. அப்படியொரு அணிவகுப்பை கடத்தல் மன்னன் பார்வையிடுகிறார். காலம் மாறித்தான் போச்சு!



# நண்பனுக்காக முடி துறந்த மாணவர்கள்!

## அமெரிக்க கல்லூரியில் சுவையான காட்சி!!

மார்க் புஸ்ஸே-16 வயது பள்ளி மாணவன். ஈரலில் புற்று நோய் கண்டு அதனைக் குணமாக்குவதற்காகப் பாவித்த மருந்துகளின் பக்க விளைவு அவனுடைய தலை முடிகளை உதிர வைத்துவிட்டது.

வழுக்கையான தலை மார்க்கை வேதனையில் ஆழ்த்தியது. ஆனால் மார்க்கின் மன வேதனையினை அவனுடன் படிக்கும் மாணவர்களும் பகிர்ந்து கொண்டார்கள்.

ஒருவர் இரண்டு பேரல்ல, மொத்தம் 30 மாணவர்கள் தங்கள் தலை முடிகளை முற்றாக வழித்து விட்டார்கள். கூடவே ஓர் ஆசிரியரும் மாணவர்களுடன் சேர்ந்து, மாணவர்களைக் கொண்டே தனது தலை முடியினையும் முழுமையாக வழித்து விட்டார்.

வாஷிங்டன் மாநிலத்திலுள்ள ரீயர்டன் உயர்நிலைப் பள்ளியின் உதை பந்தாட்டக்குழுவில் மார்க் புஸ்ஸே சிறப்பான ஆட்டக்காரனாகவிருக்கிறான். ஒருநாள் விளையாட்டுக்கான பயிற்சியிலீடுபட்டிருந்த போது மழையில் நனைந்தான். இதனைத் தொடர்ந்து இருமல் ஏற்பட்டது. மருந்துகள் பலனளிக்காதமையினால் உடற் பரிசோதனைகள் நடைபெற்றன. ஈரல் புற்று நோய்க்கான அடையாளங்கள் தென்பட்டன.

இந்தச் சிறு வயதில் ஈரல் புற்று நோய் தோன்றுவது மிகவும் அரிது எனக் கூறிய மருத்துவர்கள் சத்திர சிகிச்சை செய்வது ஆபத்தானது என்றும் கூறிவிட்டனர். ஊசி மருந்துகளும் மாத்திரைகளுமே மார்க்குக்குக் கொடுக்கப்பட்டன. கொடுக்கப்பட்ட மருந்துகளின் வேகம் அவனுடைய தலையினை வழுக்கையாக்கிவிட்டது.

தனது தலை முடி உதிர்ந்தமையினால் கவலைப்பட்ட மார்க்கின் கவலையைப் போக்குவதுடன் அவன் தனித்து விடப்படவில்லை; துணைக்கு உடன் இருக்கிறோம்-என்று உற்சாகமூட்டும் விதத்தில் சக மாணவர்கள் தங்கள் தலை முடிகளையும் சவரம் செய்துவிட்டனர்.

பள்ளியின் பல பகுதிகளிலும் 'மொட்டைத் தலை தனி அழகுடையதே' என்று வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளும் காணப்படுகின்றன. அந்தப் பள்ளியில் இரசாயனவியல் ஆசிரியரும், மார்க்கின் விளையாட்டுப் பயிற்சியாளருமான ஆண்டி ஷல்ற்ஸ் என்பவரும் மார்க்குக்கும் மாணவர்களுக்கும் ஆதரவு தெரிவிக்குமுகமாக தனது தலையினையும் மொட்டையடித்துக் கொண்டுள்ளார்.

உடன் படிக்கும் மாணவர்கள் கொடுக்கும் உற்சாகம் மார்க்கிடம் நல்ல தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கிறது.

தன்னைப் பீடித்திருக்கும் பயங்கர நோய் விரைவிலேயே தன்னை விட்டகன்றுவிடும் என்று மார்க் திடமாக நம்புகிறான். மருந்துகளை கிரமமாக பாவிப்பதுடன் தனது அன்றாடப் பணிகளையும் தயங்காமல் செய்து வருகிறான்.

"புற்று நோய் இலகுவில் தீர்க்கப்பட முடியாததொன்றுதான். ஆனால் இந்த நோயின் கொடுமையிலிருந்து நிச்சயம் விடுபட்டு விடுவேன் என்று எனது மகன் பரிபூரணமாக நம்புகிறான். தான் நோயாளி என்று எப்போதும் காட்டிக்கொள்வதில்லை. அவனுடைய நம்பிக்கை வீண்போகாது என்றே நாங்கள் கருதுகிறோம்" என்று மார்க்கின் தகப்பனாரான லாரி கூறுகிறார்.

# இலங்கைத் தமிழருக்கு குரல் கொடுப்பது துரோகமா? கருணாநிதியிடம் கேட்கிறார் வை.கோ.!

## போர் நிறுத்தம் கேட்டு எம்.ஜி.ஆர் கொடுத்த மனு!

தமிழ் நாட்டில் வை.கோபால்சாமி அணியினருக்கு எதிராக சுப்பிரமணியசாமி ஒரு குற்றச்சாட்டை வீசியிருக்கிறார்.

'சமீபத்தில் நடந்த வை.கோபால்சாமி அணியினரின் பேரணியில் புலிகளும் கலந்து கொண்டனர். அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து படகுகளில் வந்தனர்' என்பது சாமியின் குற்றச்சாட்டு.

வழக்கமாக இவ்வாறான அதிரடி ஜோக்குகளை அவர் வீசுவதால் யாரும் அதனை பெரிதுபடுத்துவதில்லை.

புலிகளோடு வை.கோபால்சாமியை தொடர்பு படுத்தி அவரது வளர்ச்சியை தடுக்கவே கலைஞர் கருணாநிதியும் முற்படுகிறார்.

அதற்கெல்லாம் பதில் சொல்வதுபோல வை.கோ. பொதுக் கூட்டமொன்றில் பேசியிருக்கிறார்.

"அப்பாவித் தமிழர்களுக்காக குரல் கொடுப்பது துரோகம் என்றால் அந்த துரோகத்தை செய்ய நான் தயாராக இருக்கிறேன்" என்று வை.கோ. பேசியிருக்கிறார்.

மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் பற்றியும் வை.கோபால்சாமி விரோதம் இல்லாமல் பேசுகிறார். எம்.ஜி.ஆர் மீது அனுதாபம் உள்ளவர்களையும் தமது பக்கம் கவர்ந்துகொள்ளும் விதமாக அவரது பேச்சுக்கள் இருக்கின்றன.

எம்.ஜி.ஆர். பற்றி வை.கோ. குறிப்பிடும் போது,

"தி.மு.கவில் அண்ணா பொதுச் செயலாளராக இருந்தார். கட்சியின் தலைமைப் பதவியை பெரியாருக்காக காலியாக விட்டிருந்தார். அந்தப் பதவியை கருணாநிதி கைப்பற்றிக் கொண்டார்.

"1970ல் தி.மு.கவை விட்டு எம்.ஜி.ஆரை நீக்கிவிட்டு தனது மகனுக்கு அந்தப் பெயரும் புகழும்வர கருணாநிதி முயற்சி எடுத்தார். அகில உலக முத்து மன்றம் என்று துவங்க ஏற்பாடு செய்தார். மு.க.முத்து ஒன்றும் பெரிய நடிகரல்ல. எம்.ஜி.ஆரைப் போல மக்கள் மனதில் பதிந்தவருமல்ல.

"நான் எம்.ஜி.ஆரை பாராட்டுவதாக பலர் நினைக்கிறார்கள். அப்படி பாராட்டுவதாக எண்ணியிருந்தால் அவர் கட்சி ஆரம்பித்த போதே அவருடன் சென்றிருக்கலாம்.

"ஆனால் நாங்களோ கருணாநிதியின் வார்த்தைகளை நம்பி எம்.ஜி.ஆரை எதிர்த்து 13 ஆண்டுகள் போராடினோம்.

"எம்.ஜி.ஆர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு ராஜீவ் காந்தியை சந்தித்து இலங்கையில் நத்தார் பண்டிகையை முன்னிட்டு இந்திய இராணுவம் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று ஒரு மனு கொடுத்தார்.

"உடல் நலம் இல்லாமல் இருந்த போதும் தமிழர்கள் நலம் கருதி அவர் மனுக்கொடுத்தது அவர் மீது நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தியது. அதன் பின்னர் தி.மு.க.ஆட்சிக்கு வந்தபோதுகூட இலங்கையில் போர் நிறுத்தம் தேவை என்று கருணாநிதி கூறவில்லை" என்று வை.கோபால்சாமி கூறியுள்ளார்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது — இராஜதந்திரி

# தென்னிலங்கை உபவேந்தரின் ராஜினாமா! 'உதவாக்கரை' அரசியலின் வெளிப்பாடு!!

இலங்கை அரசியலில் தற்போது புதிய மாற்றங்களும், திருப்பங்களும் ஏற்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த ஆண்டு மே மாதம் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா குண்டு வெடிப்பொன்றில் கொலையுண்டதையடுத்து, ஆட்சிபீடத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இடம் பெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் ஆட்சியாளருக்கு சவால் விடும் வகையில் எதிரணியினரின் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அமைந்திருந்தன.

தொடர்ந்து கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் இராணுவத் தரப்பினருக்கு பெரும் இழப்புகள் வடக்கு-கிழக்குப் பகுதியில் தோன்றியிருந்ததுடன், இராணுவத் தலைமைப்பீடத்திலும் சர்ச்சைகள் வலுப்பெற்றிருந்தன. இதனையடுத்து இராணுவத் தலைமையிலும் மாற்றம் ஏற்பட்டிருந்தது.

இம்மாற்றங்களின் வரிசையில் தற்போது இலங்கையின் அதி உயர் கல்விப் பீடமாக விளங்கும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தலைமையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தென்னிலங்கையில் சாதாரண மக்கள் முதற்கொண்டு 'புத்திஜீவிகள்'வரை ஆட்சியாளர்கள்மீது கொண்டுள்ள அதிருப்தியை வெளிப்படுத்துவதாகவே கொழும்பு பல்கலைக்கழகத் தலைமையில் தோன்றியுள்ள மாற்றம் காணப்படுகின்றது.

இலங்கையின் முதலாவது பல்கலைக் கழகமாக கொழும்பு பல்கலைக்கழகம் விளங்குகின்றது. உயர்ந்த தரத்திலான கல்விமான்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த நிபுணர்களை சர்வதேச ரீதியாக உருவாக்கிய பெருமை பெற்றதாக இந்த உயர்கல்விக்கூடம் காணப்படுகின்றது.

இலங்கையின் இத்தகைய முக்கிய கல்வி நிறுவனத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கடந்த வாரம் தமது பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்திருந்தார்.

தமது இராஜினாமாவுக்கான காரணத்தை விளக்கி ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவுக்கு விரிவான கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தில் தாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து அக்கட்சியின் அரசியல் நடவடிக்கைகளில் ஒத்துழைக்கப் போவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

கூடவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இன்றைய அரசியல் நடவடிக்கைகள், நாட்டில் புதிய, மற்றும் உடனடியான அரசியல், சமூக மாற்றங்களை கருத்திற் கொண்டதாக இருக்கின்றது எனவும் பேராசிரியர் பீரிஸ் ஜனாதிபதிக்கான தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் ஜே.வி.பி. தீவிரவாதம் வலுப்பெற்றிருந்தவேளை, அரசியல்வாதிகள், பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்தனர்.

கொழும்பிலும், தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கொலைகள் கண்மூடித்தனமாக இடம் பெற்றன. கொழும்பு பல்கலைக்கழகத்திலும் இடையூறுகள், மற்றும் கலகங்கள் தோன்றியிருந்தன.

மாணாக்கர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சேர் பொன்னம்பலம் இராமநாதன், கலாயோகி ஆனந்த குமாரசாமி ஆகியோரின் இன்றைய சந்ததி உறவினர்களில் ஒருவரே பேராசிரியர் ரி.நடராசா ஆவார்.

கொழும்பு பல்கலைக்கழக சட்டக் கல்வித்துறையில் தமக்கென முத்திரை பதித்துக்கொண்டவர்களில் ஒருவரே பேராசிரியர் நடராசா. கொழும்பு சட்டத்துறைக் கல்விப்பீடாதிபதியாக பேராசிரியர் நடராசா பதவி வகித்த காலத்திலேயே பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அன்று பேராசிரியர் நடராசாவின் மாணாக்கராக இருந்தார்.

பேராசிரியர் ரி.நடராசாவின் நெறிப்படுத்தலின் கீழ் சட்ட உயர்கல்வியை மேற்கொண்டிருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தாம் முதன் முதலாக வெளியிட்ட நூலையும் பேராசிரியர் நடராசாவின் பெயருக்கே சமர்ப்பணம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தராக இருந்த காலத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உருவாகியிருந்த 'ஜாதிக சிந்தனய' (Jathika Chinthanaya) என்ற தீவிர இனவாதச் சர்ச்சைக்கும் முகங்கொடுத்திருந்தார்.

கொழும்புப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் நளின் டி சில்வா இந்த 'ஜாதிக சிந்தனய' என்ற இனவாத நிலைப்பாட்டின் சூத்திரதாரியாக இருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் இரு வருடங்களுக்கு முன்னர் இந்த இனவாத விடயம் தொடர்பாகப் பலத்த வாதப் பிரதிவாதங்கள், மற்றும் மாணவரிடையே கொந்தளிப்புக்கள் என்பன தோன்றியிருந்தன.

அப்போது உபவேந்தராக இருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பேராசிரியர் நளின் டி சில்வாவின் இந்த இனவாத நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் பேராசிரியர் நளின் டி சில்வா பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையே தத்துவார்த்த ரீதியாக பிணக்குகள் தோன்றியிருந்தன.

இருந்தபோதிலும் உபவேந்தராக

இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றியபோது இன்றைய அரசியலமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பேராசிரியர்



திரு .ஜி.எல். பீரிஸ்

பீரிஸ் தெளிவாக விளக்கியிருந்தார்.

அக்கருத்தரங்கில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை உள்ளடக்கிய இன்றைய அரசியலமைப்பின் சூத்திரதாரியான முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவும் பங்கு பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனா இன்றைய அரசியலமைப்பு நாட்டுக்கு மிகவும் இன்றியமையாதது என்று அக்கருத்தரங்கில் தெரிவித்திருந்தார். ஆனால் பேராசிரியர் பீரிஸ் திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் இக்கருத்தை நிராகரித்ததுடன், புதிய அரசியலமைப்பொன்றின் மூலமே நாட்டின் இன்றைய பிரச்னைகளுக்குப் பரிகாரம் காணமுடியும் எனவும் அக்கருத்தரங்கில் குறிப்பிட்டிருந்தார்.

தனி ஒரு நபரிடம் அனைத்து அதிகாரங்களும் குவிந்திருக்கும் ஓர் ஆட்சி முறையில் ஜனநாயகத்தை எதிர்பார்க்க முடியாது. அத்தகைய ஆட்சி முறையில் பாராளுமன்ற செயல்பாடுகள் வலுவற்ற

உயர்ந்தவர்.

நாட்டின் அரசியல், மற்றும் சமூகவியல் சார்ந்த விடயங்களை பகுத்தறியும் பக்குவத்தைக் கொண்டதாக பல்கலைக் கழகங்கள் விளங்குகின்றன. பல்வேறு அரசியல் கண்ணோட்டங்களையும் கொண்டவர்களுக்குக் களம் அமைத்ததாகவே பல்கலைக்கழக கல்வி முறை விளங்குகின்றது.

இந்நிலையில் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸின் இராஜிமானாவும், அது குறித்து அவர் தெரிவித்துள்ள காரணங்களும், நாட்டில் இன்று ஓர் உளுத்துப் போன (Rotten Politics) அரசியல் நிலவுவதையே வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

இலங்கை சுதந்திரமடைந்தது முதற்கொண்டு இதுவரை மூன்று அரசியலமைப்புக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியலமைப்பைத் தயாரித்தவர், இலங்கை பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தரான பேராசிரியர் ஐவர் ஜென்னிங்ஸ் (Ivor Jennings) என்பது குறிப்பிடத்தக்கது.

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியலமைப்பு 1972ம் ஆண்டில் வலுவிழந்திருந்தது. அந்த ஆண்டில் பதவியிலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியதுடன், இலங்கையையும் ஒரு பூரண குடியரசாகப் பிரகடனப்படுத்தியிருந்தது.

சுமார் ஐந்து வருட காலம் மட்டுமே இந்த இரண்டாவது அரசியலமைப்பு வலுப்பெற்றிருந்தது. 1978ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையுடன் கூடிய புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியிருந்தது.

இன்று சுமார் 16 வருட காலமாக அமுலில் இருக்கும் ஜே.ஆர்.ஜயவர்த்தன தயாரித்த அரசியலமைப்பு, சுமார் 13 திருத்தங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஆட்சியில் பல்வேறு அரசியல் சூழ்நிலைகளில் இந்த பதின்மூன்று திருத்தங்களும் கொண்டு வரப்பட்டிருந்தன.

ஜே.ஆர். அரசாங்கம் சிக்கலான நிலைமைகளில் இருந்து இலகுவாகத் தப்பிக்கொள்ளும் வகையில் இந்த அரசியல் திருத்தங்களை பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றியிருந்தது.

தற்போதைய அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் இருந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களை வெளியேறச் செய்திருந்தது.

அத்துடன் ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 13வது திருத்தச் சட்டமே இலங்கையில் மாகாண சபை ஆட்சி முறையையும் கொண்டு வந்திருந்தது.

ஆனால் ஜே.ஆரின் அரசியலமைப்போ அல்லது அதில் இடம்பெற்ற திருத்தங்களோ இலங்கையின் பிரதான பிரச்னையான இனப்பிரச்னைக்கு ஒரு நேர்த்தியான தீர்வைக் காணத் தவறியிருந்தன.

இலங்கையில் இன்று அமுலில் உள்ள அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டுமென்பதை சகல தரப்பினரும் உணர்ந்திருக்கக் காணப்படுகின்றனர்.

கடந்த ஆண்டு ஆளுங்கட்சியினர் சிரேஷ்ட சட்டத்தரணியான கே.என்.சொக்ஸி என்பவரை அரசியலமைப்புத்துறைக்குப் பொறுப்பான அமைச்சராக நியமித்திருந்தனர். திரு.கே.என்.சொக்ஸியின் அமைச்சரவை நியமனம் அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கையாகவே கருதப்படுகிறது.

ஆனால் இன்று ஆட்சியாளரைப் பொறுத்தவரை நாட்டின் அரசியலமைப்பில் அக்கறை காட்டுவதை விட தமது கட்சியின் கட்டமைப்பைப் பேணுவதிலேயே கூடுதல் அக்கறை காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அரசியலமைப்பை மாற்றி நாட்டைத் திருத்த முயலுமுன்னர் தமது கொள்கைகள், நிலைப்பாடுகளை மாற்றியமைத்து புதிய அரசியல் சிந்தனைக்கு வழிவிட வேண்டியவர்களாக ஆட்சியாளர்கள் காணப்படுகின்றனர்.

இன்றைய ஆட்சியாளர்களின் தவறான அரசியல் நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதாகவே கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தரின் இராஜினாமா விளங்குகின்றது.

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் ஜீ.எல்.பீரிஸின் இராஜினாமாவுக்கு ஒரு வாரம் முன்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் பதவியிலும் மாற்றம் ஏற்பட்டிருந்தது.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எ.துரைராசா யாழ்ப்பாணத்தில் தமது பதவிக் காலத்தை பூர்த்தி செய்த பின்னர் கொழும்பு திரும்பியிருந்தார். பேராசிரியர் எ.துரைராசா இலங்கையின் பொறியியல் கல்வித்துறையில் தமக்கென ஒரு தனியிடத்தை வகித்து வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறை பீடாதிபதியாக இருந்து இலங்கையின் பொறியியல் துறைசார்ந்த உயர் கல்விக்கு பேராசிரியர் துரைராசா பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தார்.

பேராசிரியர் துரைராசாவின் பொறியியல் துறை சார்ந்த பங்களிப்பு சர்வதேசரீதியாகவும் பிரபலம் பெற்றதொன்றென்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆறு வருடகாலமாக யாழ் பல்கலைக்கழகத்தில் உபவேந்தராக பதவி வகித்த பேராசிரியர் துரைராசா யாழ் குடா நாட்டில் நிலவும் கஷ்ட நிலவரங்களுக்கு முகங்கொடுத்திருந்ததுடன், துவிச்சக்கர வண்டியிலேயே யாழ்ப்பாணத்தில் நடமாடித்திரிந்து தமது பணிகளை மேற்கொண்டிருந்தார்.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பதவியைப் பூர்த்தி செய்து கொண்ட பேராசிரியர் துரைராசாவுக்கு வழங்கப்பட்ட பிரியாவிடை வைபவமொன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனும் கலந்து கொண்டு, பேராசிரியர் துரைராசாவின் பணிகளைப் பாராட்டியிருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கையின் ஏனைய பல்கலைக் கழகங்களைப் போலன்றி மிகவும் அபாயகரமான, சிரமங்கள் நிறைந்த சூழ்நிலையிலேயே இயங்கி வருகின்றது.

இருந்த போதிலும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் அப்பல்கலைக் கழக செயற்பாடுகளில் தேக்கநிலை ஏற்படுவதையோ, இடையூறுகள் தோன்றுவதையோ வெற்றிகரமாக சமாளித்து வருபவர்களாகவே காணப்படுகின்றனர்.

எனவே வடக்கே யாழ் பல்கலைக்கழக உபவேந்தரின் மாற்றமும், தெற்கே கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தரின் இராஜினாமாவும் இலங்கையில் இன்று வடக்கிலும், தெற்கிலும் நிலவுகின்ற இரு வேறுபட்ட சூழ்நிலைகளையே படம் பிடித்துக் காட்டுவனவாக இருக்கின்றன.

ஆனால் ஆட்சியாளர்கள் நாட்டின் இன்றைய நிலை குறித்து சிந்திக்க முடியாத ஒரு கட்டத்திலேயே இருக்கக் காணப்படுகின்றனர்.

ஆளுங் கட்சியினர் தம்மை எதிர்வரும் தேர்தல்களில் தப்ப வைத்துக்கொள்வது குறித்த திட்டங்களை வடிவமைப்பதிலேயே முனைப்பாக இருந்து வருகின்றனர்.

இத்திட்டங்களில் ஒன்றாகவே மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் கொள்கைகளுக்கு புத்துயிர் அளிப்பதில் ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டுகின்றனர்.

இந்த ஆர்வத்தையடுத்தே 'பிரேமதாசாயிஸம்' (Premadasaism) என்ற புதிய சிந்தனைக்கு ஆட்சியாளர்கள் வடிவங்கொடுத்து வருகின்றனர்.

இச் சிந்தனையை பிரேமதாசாவின் உருவச் சிலையாக வடிவமைத்து, இந்த ஆண்டின் மே தினத்தன்று- அதாவது ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் முதலாவது சிரார்த்த தினத்திலன்று கொழும்பில் திறந்து வைக்கவும் தயாராகின்றனர்.

எனவே 'பிரேமதாசாயிஸம்' ஆட்சியாளர்களின் ஒரு புதிய அரசியல் உத்தியாகவே காணப்படுகின்றது.



பிரேமா

# ஆளும் கட்சியின் புதிய உத்தி: சிலைவடிவம் பெறும் 'பிரேமதாசாயிஸம்'

இதனையடுத்து கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தராக இருந்த பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டிருந்தார்.

பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தரவின் மறைவையடுத்தே கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தராக பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நியமிக்கப்பட்டிருந்தார்.

பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சட்டக்கல்வித் துறையைச் சார்ந்தவர். சட்டத்துறை சம்பந்தமாக சர்வதேச ரீதியில் பல்வேறு மகாநாடுகள், கருத்தரங்குகளிலும் பங்கு பற்றியதுடன், பல முக்கிய அரங்குகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள், விரிவுரைகளையும் பேராசிரியர் பீரிஸ் வழங்கியிருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்துள்ள பேராசிரியர் பீரிஸ், யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் நடராசாவின்

இருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பேராசிரியர் நளின் டி.சில்வாவை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்தும் வெளியேற்றுவதில் வெற்றி கண்டிருந்தார். இதனையடுத்து 'ஜாதிக சிந்தனய' என்ற இனவாத நிலைப்பாடு, கொழும்பு பல்கலைக் கழகத்தின் மாணவர் பேரவையினரால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கடந்த காலங்களில் பல்வேறு அமைப்புக்களால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விரிவுரைகள், கருத்தரங்குகள் என்பவற்றில் கலந்து கொண்டு இலங்கையின் இனப் பிரச்னை தொடர்பாக தமது கருத்துக்களை வெளியிட்டு வந்தார்.

பேராசிரியர் பீரிஸ் தமது கண்ணோட்டங்களை பெரும்பாலும் ஒரு புதிய அரசியலமைப்பின் அவசியம் குறித்து வலியுறுத்துவதாகவே வெளியிட்டு வந்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் தலைநகரில்

தாகவே இருக்கக் காணப்படும் என்று பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டிருந்தார்.

இன்றைய ஆட்சியாளரின் போக்கு, மற்றும் தமது பதவி சம்பந்தமான நெருக்கடி நிலை, நாட்டு நிலைமை, அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு என்பனவற்றைக் கருத்திற் கொண்டே தனது உபவேந்தர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளதாக பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கூடவே தாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்து அக்கட்சி சார்பாக அரசியல் நடவடிக்கைகளில் இறங்கப் போவதாகவும், பேராசிரியர் பீரிஸ் அறிவித்துள்ளார்.

பேராசிரியர் பீரிஸ் ஒரு சாதாரண நபரல்ல. இலங்கையின் அதி முக்கிய கல்வி நிறுவனமான கொழும்பு பல்கலைக்கழகத்தில் மாணவர் நிலையிலிருந்து பின்னர் படிப்படியாக வளர்ச்சி கண்டு இறுதியாக அப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக


# சுள்ளென்று தாக்கும் வெய்யில்! ஜில்லென்று சாப்பிட ஆசையா?

சுள்ளென்ற வெய்யிலில் அலைந்தால் ஜில்லென்று ஏதாவது சாப்பிடத் தோன்றும். கூல்ட்ரிங்ஸ், ஐஸ்கிறீம் என்று தெருவில் வியாபாரம் சக்கை போடு போடும்.

குழந்தைகளும் சரி, பெரியவர்களும் சரி ஐஸ்கிறீம் சாப்பிடுவதானால் அவர்களுக்குத் தனி சந்தோசம்தான். விலையை விடுங்கள். இப்போது எதுதான் விலை இல்லை! புழுத்த கத்தரிக்காய்கூட கிலோ 40 ரூபாய் விற்கிற காலம்.

ஐஸ்கிறீம் நல்ல தரமான கம்பனிகள் தயாரித்ததாக இருந்தால் தாராளமாக சாப்பிடலாம். அதற்கும் சில 'கண்டிஷன்களே' இருக்கின்றன.

குழந்தை ஐஸ்கிறீம் கடைகளைப் பார்த்ததும் அடம் பிடிக்கும். ஏற்கனவே தடிமன். இதில் ஐஸ்கிறீம் வேறு என்று பிள்ளையைத் தாய் உருட்டி மிரட்டுவார்.



பால், சீனி, கிறீம் என்று எல்லாம் சத்துள்ள பொருட்கள் தான் ஐஸ்கிறீமில் இருக்கின்றன.

ஐஸ்கிறீம் சாப்பிட்டால் தடிமன் வருமென்று சொல்ல முடியாது. நீங்கள் கப் ஐஸ்கிறீம் வாங்கிக் கொடுக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். குழந்தை அதை எப்படிச் சாப்பிட வேண்டும் என்று சொல்லிக்கொடுக்க வேண்டும்.

ஐஸ்கிறீம் வாங்கியதும் அப்படியே கரண்டியினால் விழுங்கி விடக்கூடாது. கொஞ்சம் ஐஸ்கிறீமை கரண்டியால் எடுங்கள். மெதுவாக எடுத்துச் சாப்பிட வையுங்கள். ஜில்லென்று அப்படியே விழுங்கினால் குளிர்ச்சி தொண்டையைத் தாக்கி உடனடியாகத் தடிமனை ஏற்படுத்தும்.

ஐஸ்கிறீம் சாப்பிடுவதால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க உடனே கொஞ்சம் தண்ணீர் குடித்து விடுங்கள். அது போதும்.

நீங்கள் நாற்பது வயதைத் தாண்டியிருந்தால் ஐஸ்கிறீம் சாப்பிடுவதைக் குறைக்க வேண்டும். ஐஸ்கிறீம் சாப்பிட்டால் அதிகமான கலோரிகள் உடம்பில் சேர்ந்துவிடும். அதிலும் மாலை வேளையிலோ, இரவு விருந்துகளிலோ ஐஸ்கிறீம் சாப்பிட நேர்ந்தால் கொஞ்சம் யோசிக்க வேண்டும். இடுப்பில் சதை போட்டுவிடும்.

இன்னொரு விசயம், குழந்தைகள் ஐஸ்கிறீம் சாப்பிட்டதும் அப்படியே விளையாட ஓடிவிடுவார்கள். ஐஸ்கிறீமில் உள்ள இனிப்புத் துகள்கள் பற்களில் படிந்து வெகுநேரம் தங்கி விட்டால் பல்லுக்குக் கெடுதல். ஐஸ்கிறீம் சாப்பிட்டதும் நன்றாக பிரஷ் பண்ணி வாய் கொப்பளிக்க வேண்டும்.

## உண்ணும் விசயத்தில் கவனிக்கவேண்டிய ஒன்பது விதிகள்

வயிற்றுக் கோளாறுகளுக்கு முக்கிய காரணம் (வயிறுதான் என்று சொல்கிறீர்களா?) நம்முடைய பழக்கங்கள்தான். அதாவது அதிகமாகச் சாப்பிடுவது, சுகாதாரமில்லாமல் கெட்டுப்போன பதார்த்தங்களைச் சாப்பிடுவது. இதையும் தவிர சாப்பிடும் முன் கவனிக்க வேண்டிய சில விஷயங்களைக் கவனிக்காதது... இப்படிப் பல.



1. வீட்டில் பல்லி, பூச்சிகள் இருக்கும். அதனால் சாப்பாட்டைச் சரியான மூடியால் மூடி வைக்க வேண்டும்.
2. சமையலறையில் தலைவாரிக் கொள்ளக்கூடாது.
3. சவர்க்காரம், கிளீனிங் பவுடர், பிளீச்சிங் பவுடர் என்பவற்றைச் சமையலறையில் வைக்கக்கூடாது.
4. பழைய குழம்பு, கறி என்பவற்றை உடனே அகற்றிவிட வேண்டும்.
5. பெரியவர் சிறியவர் என யாராக இருந்தாலும் சாப்பிடும் தட்டு, தங்களுடைய கைகள் இவற்றைச் சுத்தமாகக் கழுவிய பிறகே சாப்பிட வேண்டும். காற்றில் கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் எத்தனையோ இருக்கும். ஆகையால் வெகுநேரம் சாப்பாட்டுத் தட்டின் முன் இருக்காமல் உடனடியாகச் சாப்பிட்டு முடிக்க வேண்டும்.
6. சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி நகத்தை வெட்டி விடவேண்டும். தலையைச் சொறிந்து கொள்ளலாம். அல்லது மண்ணில் விளையாடலாம். நுண் கிருமிகள் விரல் நகங்களுக்கிடையே புகுந்து சாப்பிடும் போது வயிற்றுக்குள்ளே புகுந்து விட்டால் கோளாறுகளுக்குக் கொண்டாட்டம்தான்.
7. எதையும் நன்றாகக் கழுவி விட்டுச் சாப்பிடவேண்டுமென்ற பழக்கத்தைக் குழந்தைப் பருவம் முதலே நெஞ்சில் பதிய வைக்க வேண்டும்.
8. சாப்பிடும் இடம் சுத்தமாக இலையான் வராமல் பாதுகாக்க வேண்டும்.
9. சாப்பிட்ட இடத்தை உடனே சோப்பு நீர் தெளித்து, துணியால் துடைத்த பிறகுதான் மீண்டும் சாப்பிடப் பயன்படுத்த வேண்டும்.

இந்த ஒன்பதையும் நீங்கள் தெரிந்து வைத்துக் கொண்டால் மட்டும் போதாது. பின்பற்ற வேண்டும். அஜீரணமோ, கோளாறோ எதுவும் உங்களை நெருங்காது.

## லேடீஸ் ஸ்பெசல்

## ஒரு குழந்தை பிறந்த பின் உடல் பருக்க காரணம் என்ன?



கன்னிப் பெண்ணாக இருக்கும் போது கொடி போல இருக்கும் பெண்கள், மணமாகிக் குழந்தை பெற்ற பின்பு இடுப்புப் பெருத்துப் போய் விடுகிறார்கள். குழந்தை பிறந்த பிறகு ஓய்வு எடுப்பதும், கருத்தடை மாத்திரைகள் சாப்பிடுவதும், தாம்பத்திய வாழ்வும் உடல் பருமனுக்குக் காரணமாகின்றன.

உடல் பழையபடி, ஒல்லியாகக் கொடிபோல இருக்க என்ன செய்யவேண்டும் என்று பார்க்கலாம்.

வீட்டு வேலைகள் எவ்வளவு இருந்தாலும் உடற் பயிற்சி கட்டாயம் செய்ய வேண்டும். வெளியில் அரைமணி நேரம் நடக்கலாம். வீட்டிலேயே செய்ய வேண்டுமென்றால் ஸ்கிப்பிங் நல்ல பயிற்சி ஜொக்கிங் போவதை விடவும். வேகமாக நடக்கலாம்.

சிலர் பயிற்சியும் செய்துவிட்டு, நெய்யும், தயிரும் வெண்ணெயுமாகச் சாப்பிடுவார்கள். பயிற்சியோடு உணவுக் கட்டுப்பாடும் முக்கியம். கலோரிகள் எவ்வளவுக்கு எவ்வளவு உள்ளே போகிறதோ, அத்தனையையும் உடம்பு உழைப்பிலே செலவழிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஊளைச் சதைதான். இடுப்பு பெருத்துவிடும். அடிக்கடி மோர் குடித்து, கொழுப்பு இல்லாத சாப்பாடு சாப்பிட்டு, பயிற்சியும் செய்தால்- பிறகென்ன கொடியிடைதான்.

## தினமுரசு-அருள் ஜூவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

பரிசுத் திட்ட கூப்பன் இல-10

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது -சுகந்தினி

### பால் சீஸ் பெர்ட்

**தேவையானவை:**

பால்-2 மேசைக்கரண்டி
சீஸ்-50 கிராம்
பொடியாக நறுக்கிய தக்காளிப்பழம்-200 கிராம்
மிளகுத்தூள்-1/2 தே.கரண்டி
வெண்ணெய் (பட்டர்)-50 கிராம்

**செய்யும் முறை:**

1. சீஸ், பால், தக்காளி மூன்றையும் ஒரு கிண்ணத்தில் போட்டு அடுப்பில் வைத்து கொதிக்க விடவும். அடுப்பை மெதுவாக எரியவிடவும்.
2. கெட்டியானவுடன் மிளகுத்தூள், உப்பு 2 சிட்டிகை சேர்க்கவும்.
3. டோஸ்ட் செய்த பாண் துண்டின் மேல் தடவிப் பரிமாறவும்.

### பட்டாணி சான்ட்விச்

**செய்முறை:**

1. பட்டாணியை வேகவைத்து உப்பு சேர்த்து நன்றாக மசித்துக் கொள்ளவும்.
1 தேக்கரண்டி எலுமிச்சம் பழச்சாறு சேர்க்கவும்.
2. பட்டர் அல்லது மாஜரின் தடவி, மிளகாய் சோஸ் (சில்லிசோஸ்) தடவிய பாண் துண்டில் பட்டாணி கலவையை வைத்து, சான்ட்விச் தயாரிக்கவும்.

## பெண்புத்தி—முன்புத்தி

இன்றைய ஆடம்பர யுகத்தில் ஆண்களும், பெண்களும் காரை ஓட்டிச் செல்வதை நாம் காணலாம். ஆனால் கார் ஓட்டும்போது இருபாலார் மனநிலையும் வேறுபட்டு இருப்பதாக நியூயோர்க்- ரோசஸ்டர் பல்கலைக்கழக ஆராய்ச்சி கூறுகிறது. நன்கு பழகாத வழித்தடங்களில் செல்லும் ஆண்கள் எந்த அடையாளங்களையுமே மனதில் வைப்பதில்லையாம். மாறாக ஒரு திருப்பம் முடிந்து எத்தனை நிமிடத்தில் மறுதிருப்பம் வரும் என்கின்ற நேரக்கணக்கை மட்டும் ஞாபகத்தில் கொள்கின்றனராம். ஆனால் பெண்களோ சாலையோர அடையாளங்களையே வழிகாட்டிகளாக ஆக்கி விடுகின்றனர். உதாரணமாக கடைப்பெயர், கோயில், பெட்ரோல் ஷெட் போன்றவற்றை மனதில் வைத்துத் தாங்கள் செல்ல வேண்டிய வழியைத் தெரிவு செய்கின்றனர். ஆராய்ச்சியிலும் இது ஆழமான ஆராய்ச்சியல்லவா?

## தலைச்சாய இரகசியம் சொல்கிறோம் கொஞ்சம் காது கொடுங்கள் இங்கே!

நாற்பது வயதில்- ஏன் சிலருக்கு 35 வயதில்கூட தலை தும்பைப் பூவாய் வெளுத்து விடுகிறது. கஷ்டமாகத்தான் இருக்கும். அறுபது வயதான அம்மாக்கள்கூட கருகரு முடியோடு இருக்கிற காலம் இது. எல்லாம் சாயம்தான்.



தலைச்சாயம், இரசாயனப் பொடியாகவும் கிடைக்கிறது. மூலிகைப் பொடியாகவும் கிடைக்கிறது. மூலிகைப் பொடிகளைப் பயன்படுத்தும்போது அதிக எதிர் விளைவுகள் ஏற்படுவதில்லை. இரசாயனப் பொடிச் சாயத்தைப் பயன்படுத்துவதற்கு முன்பாக நம்முடைய தோலில் அலர்ஜி ஏற்படுகிறதா என்று காது மடலின் பின்புறம் தேய்த்துப் பார்க்க வேண்டும். சிலருக்கு ஒத்து வருவதில்லை.

ஆனால் மூலிகைப் பொடிகளை எல்லோருமே பயன்படுத்தலாம். ஏன் நாம் கூட மூலிகையினால் தலைச்சாயம் தயார் செய்யலாமே.

கையாந்தகரைப்பொடி, உலர்ந்த நெல்லிக்காய்த்தூள், மருதாணிப் பொடி இவற்றில் ஒவ்வொரு தேக்கரண்டி எடுத்துக் கொண்டு தேயிலைத்தூள் போட்டுக் கொதிக்கவிட்டு எடுத்து வைத்து மறுநாள் அந்தச் சாய நீரை தலையில் தடவிக்கொள்ள வேண்டும். இப்படி அடிக்கடி சாயத்தைத் தடவி வந்தால் இளநரை போய் விடும். எந்தவிதமான அலர்ஜியும் ஏற்படாது.

## ஆனாலும் நத்தை வேகம்தான்



தேவாலயங்களில் பெண் பாதிரிமார்கள் பூஜை செய்யவேண்டும் என்பது நீண்ட நாளைய கோரிக்கை. அதனை இப்போதுதான் வத்திக்கான் திருச்சபை ஏற்றுக்கொண்டுள்ளது. காலம் தாழ்த்திய முடிவு நத்தை வேகம் என்று அமெரிக்க 'டைம்ஸ்' கார்டூன் மூலம் வெளியிட்டுள்ளது.

## நீங்களும் தைக்கலாம்

சிறு பையன் மேற்சட்டை

**4–6 வயதுப் பையன்**

**அளவு: மார்பு குறுக்களவு**

(Measurment: Chest)11"

| மார்பு சுற்றளவு Bust | உயரம் Height | கை Sleeve |
|---|---|---|
| 24"+4" | 12" | 12" |

**1/2முதுகு (Half Back) படம் 2.**


OB=புஜத்திலிருந்து இடுப்புவரையுள்ள உயரம்.

OH=1/2 அங்குலம்.

OC=மார்புச் சுற்றளவில் 1/4 பாகம்.

AD=2 அங்குலம் வலப்புறம் தள்ளியும் 1/2 அங்குலம் உயர்ந்தும் இருக்கப் பின் 1/2 முதுகுக் கழுத்தை அமைக்க.

H ஐஅமைக்க OD குறுக்குக் கோட்டிற்கு 1 அங்குலம் கீழும் Gக்கு மேலும் 1/2 அங்குலம் வலப்புறம் தள்ளியும் அமைக்கவும்.



படம் 2. சட்டையின் பின் பாதி

படம் 3. சட்டையின் முன் பாதி

CE=மார்பின் 1/4 பாகம் சுற்றளவு + 1/4 தளர்ச்சி அளவு= 6"+1"=7 அங்குலம் (1/4 Bust Measurment+1/4 of loose)

FG= மார்பின் 1/2 பாகம் குறுக்களவு 1/2 (Chest measurment)

ADகழுத்து வளைவு: HGE புஜ வளைவு: DH;EI நேர்க்கோடுகளை இணைக்கவும். B I சட்டையின் கீழ்ப் பாகம்.

**1/2 முன் பாகம் (Half front) படம் 3.**

AD=Aயிலிருந்து 2 அங்குலம் இடப் புறமும் 2 அங்குலம் உயர்ந்தும் இருக்க அமைக்கவும்.

FG= மார்பின் 1/2 பாகம் குறுக்களவு (1/2 Chest measurment).

E C= மார்பு சுற்றளவின் 1/4 பாகம் + 1/4 தளர்ச்சி அளவு = 6"+1"=7 அங்குலம் (1/4 Bust measurment-+1/4 of loose)

Hஐஅமைக்க OD கோட்டில் 1/2 அங்குலம் கீழும் Gக்கு மேலும் 1/2 அங்குலம் இடப்புறம் தள்ளியும் அமைக்கவும்.

EI,DH நேர்க்கோடுகள் இணைக்கவும்.

HGE புஜ வளைவையும் AD கழுத்து வளைவையும் இணைக்கவும்.

குறிப்பு:

BI சட்டையின் அடிப்பாகம்.

BI சட்டையின் கீழ் மடிப்புக்கு 2 அங்குலம் அதிகப்படி துணி விடவும்.

**கைப்பாகம் (Sleeve) படம் 5.**


AB= மேல் புஜத்திலிருந்து கையின் மணிக்கட்டு வரைக்கும்.

AC 1 1/2 அங்குலம்.

CD 6 அங்குலம் அல்லது மார்பு சுற்றளவில் 1/4 பாகம்.

AD ஒரு வளைவை இழுத்துக் கொள்ளவும்.

BE 4 1/2 அங்குலம்.



படம் 4.

படம் 5.

DE= நேர்க்கோட்டை இழுத்துக் கொள்ளவும்.

BE= நேர்க்கோட்டை இழுத்துக் கொள்ளவும்.

**கழுத்துப்பட்டை (Collar) படம் 4.**

BA= 3 அங்குலம்.

BC= 3 அங்குலம்.

CD= 5 1/2 அங்குலம்.

DE= 3 அங்குலம், E ஆனது Dக்கு இடப்புறம் தள்ளியும் 2 அங்குலம் உயர்ந்தும் இருக்கும்.

AE,BD வளைவை வரையவும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# எனக்காக பிறந்தவனே உனக்காக காத்திருக்கிறேன்!

## நாலுகால் அழகி மணமகன் தேடுகிறாள்



மனிதனுக்கு இரண்டு கால், மிருகத்திற்கு நாலுகால் என்பது பொதுவான விசயமாக இருக்கலாம்.

ஆனால், விதிவிலக்குகளும் இருக்கத்தான் செய்கின்றன.

நம் நாட்டிலே கண்டியிலே நாலு காலோடு குழந்தை பிறந்தது. இரகசியமாய் அந்த செய்தியை பாதுகாத்தார்கள்.

எப்படியோ முரசின் நிருபர் உள்ளே புகுந்து படத்தோடு செய்தி தந்துவிட்டார்.

வெளிநாடுகளில் அதிசய செய்திகளை சேகரிக்க என்றே இலட்சம் இலட்சமாய் செலவழித்து கண்டறிந்து வெளியிடுகிறார்கள்.

மருத்துவ விஞ்ஞான முன்னேற்றம் அதிசயப் பிறவிகள் சிலரை பாதுகாத்து விடுகிறது.

படத்தில் உள்ள பெண் ஒரு அதிசயப் பிறவிதான்.

பெயர் ஆஸ்லே. இவர் பிறந்தது 1972ம் ஆண்டு.

இவர் ஒரு இரட்டைப் பிறவி. கருவில் ஒன்று ஆஸ்லேயின் உட் பகுதியில் உறைந்துவிட்டது.

பிறந்தவுடன் மேலதிகமான கால்களை அகற்றிவிடவே பெற்றோர்கள் விரும்பினார்கள்.

"அகற்ற முடியும். ஆனால் குழந்தையின் ஏனைய இரு கால்களுக்கும் அதனால் பாதிப்பு ஏற்பட்டு முடமாகிவிட்டால் நாம் பொறுப்பல்ல" என்று மருத்துவர்கள் சொன்னார்கள்.

அதனால் நாலு கால்களோடு ஆஸ்லே வளர்ந்து பெரியவளானாள்.

ஆஸ்லேக்கு ஆரம்பத்தில் கூச்சமாக இருந்தது. பள்ளியிலும் சக மாணவ மாணவிகள் கால்களையே பார்த்தபோது சங்கடமாக இருந்தது. பின்னர் பழக்கமாகிவிட்டது.

இப்போது ஆஸ்லேக்கு ஒரு ஆசை.

தன்னை புரிந்து கொண்ட ஒருவர் தனக்கு கணவனாக கிடைக்க வேண்டும். காத்திருக்கிறார் ஆஸ்லே.

அமெரிக்க கனடா போன்ற நாடுகளின் சஞ்சிகைகளில் ஆஸ்லேயின் படத்துடன் மணமகள் தேவை செய்தியும் வெளியாகியுள்ளது.

செய்தியை வெளியிட்ட சஞ்சிகைகள் அவரது சொந்த முகவரியை வெளியிட வில்லை. அதனால் ஆஸ்லேக்கு தேவையற்ற சிரமங்கள் ஏற்படும் என்று ஒரு முன்னெச்சரிக்கை.

முன்னெச்சரிக்கையோடு ஒரு முகவரி வெளியிடப்பட்டுள்ளது. அது அமெரிக்காவில் உள்ள ஆஸ்லேயின் குடும்ப நண்பர் ஒருவரது முகவரியாகும். அதனால் ஆஸ்லே அமெரிக்காவில் வசிப்பதாக கருத முடிகிறது.

நாலுகால் பெண்ணை கை பிடிக்க விரும்புபவர்கள் (கை இரண்டுதான்) தொடர்பு கொள்ள அந்த முகவரியை வெளியிட்டுள்ளார்கள்.

வேண்டுமானால் இந்த முகவரியோடு தொடர்பு கொள்ளுங்கள். உகந்தவர்தானா என்று உங்களை ஆராய்ந்துவிட்டு, பின்னர் திருமணம் பற்றி முடிவு செய்யலாம் என்கிறது அந்த விளம்பரம்.

யாருக்கு கொடுத்து வைத்திருக்கிறதோ தெரியவில்லை.

நாலுகால் அழகி தன் ராஜகுமாரனுக்காக வழிமேல் விழி வைத்து காத்திருக்கிறார். ■

தகவல் பெட்டி

## மேனியில் ஏறும் ஆணி!



அமெரிக்காவில் இருக்கிறது வேர்ஜினியா மாநிலம்.

அங்குதான் இருக்கிறார் ஜோஸ் பெர்ணாண்டஸ்.

சாகசம் செய்யும் தாகம். புகழ் பெறவேண்டும் என்று மோகம்.

கூரான பிளேட்டுகளை சப்பிக் கொப்பளித்து காட்டுவார். நம் நாட்டில்கூட சிலர் வீதிகளில் அவ்வாறு சாகசம் செய்வதை பார்த்திருப்பீர்கள் அல்லவா!

ஜோஸ் பெர்ணாண்டஸ் செய்துள்ள அரிய சாதனைகளில் ஒன்றுதான் படத்தில் இருக்கிறது.


மூக்கு துவாரத்தின்
வழியாக
நான்கு அங்குல
ஆணிகள் இருபதை
சம்மட்டியால் அடித்து
உள்ளே செலுத்துவது.
யப்பா!

4 அங்குல ஆணிகளை, சம்மட்டியால் ஓங்கி அடித்து-உள்ளே செலுத்தும் சாதனை.

படத்தில் பார்க்கும்போதே புல்லரிக்கிறதே, நேரில் பார்த்தவர்களுக்கு எப்படியிருந்திருக்கும்.

மூக்கில் குழவி கொட்டினால்கூட நம்மால் தாங்க முடியாது. இவர் ஆணியை வைத்து வித்தை காட்டுகிறார். ஆள் கில்லாடிதான்.

## மலையும் காதலிக்கும்! பெரு மலைக்கு கிடைத்த பேரழகி




படத்தில் இருக்கும் மாமிச மலையை எங்கோ பார்த்தது போல் இருக்கிறது அல்லவா? பார்த்திருப்பீர்கள். முரசு 44ல் சாயுமோ இந்த மலை? என்ற தலைப்போடு முரசு வாசகர்களுக்கு அறிமுகமானவர்தான் அண்ணர்.

பெயர் சலீவா ஃபுவாலி அற்றிசானோ. உலகில் உள்ள மல்யுத்த மனித மலைகள் 20ல் இவரும் ஒரு பிரபல மலை.

அண்ணருக்கு பெண் இரசிகைகள் அதிகம் என்றாலும் அவர்களுக்கு அருகில் செல்ல பயம். தூரத்தில் நின்றே இரசிப்பதோடு சரி.

ஆனால் ஜப்பான் நாட்டின் மாடல் அழகி சுமிக்கா சியோடா மட்டும் மலைக்கு பக்கத்தில் துணிந்து நெருங்கிவிட்டார்.

அண்ணலும் நோக்க, அவளும் நோக்க பிறகென்ன காதலாகிவிட்டது. மலை சாய்ந்து விட்டது மங்கையின் பக்கம்.

திருமணம் என் பலத்தை குறைக்காது. திருமணத்தன்று காலையில் எழுந்து பயிற்சி செய்வேன். மாலையில் களத்தில் குதித்து சண்டையிடுவேன். என் இறுதி மூச்சு உள்ளவரை மோதிக்கொண்டே இருப்பேன்." என்கிறார் மாமிச மலை.

சுமிக்கா எப்படித்தான் சமாளிக்கப் போகிறாரோ? சவாலே சமாளி!

www.padippakam.com



# மினி சினி

★ இந்த வருட ஆரம்பத்தில் செஞ்சுரி போட்ட பிரபுவை அடுத்து கோகுலம் புகழ் ஜெயராம் செஞ்சுரி போடப் போகிறார். அவரது 100வது படம் தமிழா? அல்லது மலையாளமா என்று தெரியவில்லை.

★ 'பருவராகம்', 'நாட்டுக்கொரு நல்லவன்' ஆகிய தமிழ்ப் படங்களில் நடித்துள்ள இந்தி நடிகை ஜூஹி சவ்லா, 'ஐ லவ் இந்தியா' படத்தைத் தயாரித்த நிறுவனம் தயாரிக்கும் புதிய படமொன்றில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார்.

★ 'கிழக்குச் சீமையிலே' பெரிய வெற்றியைப் பெற்றிருந்தும் அதில் இரண்டாவது கதாநாயகியாக நடித்த அஸ்வினிக்கு போதிய பட வாய்ப்புக்கள் இல்லாததால், மலையாளத்தில் அதிக கவனம் செலுத்தி நடித்து வருகிறார்.

★ விரைவில் பாக்கியராஜ் கதை, திரைக்கதை, வசனம் எழுத அவரது சிஷ்யரான பாண்டியராஜன் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

★ 'சிறகடிக்க ஆசை' படத்தில் சிவகுமாரின் ஜோடியாக அறிமுகமானவர் மந்தாகினி. இவர் தற்போது தனது பெயரை இந்து என மாற்றிக் கொண்டு புதிய படமொன்றில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

★ பிரதாப் போத்தனிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர் ராஜராஜசோழன். இவர் தற்போது 'சங்கீதம் பாடவா' என்ற படத்தினை இயக்கி வருகிறார்.

★ நட்சத்திர இயக்குநர் பிவாசு தற்போது இயக்கி வரும் 'சாது' படத்தை அடுத்து நாகார்ஜுன் கதாநாயகனாக நடிக்கும் தெலுங்குப் படமொன்றை இயக்க எண்ணியுள்ளார்.

★ தெய்வேோவியின் தெலுங்கில் முதன் முதலாக வில்லனாக நடித்த 'குந்தி புத்ரடு' படம் சுமாராக ஓடியது. என்றாலும் அவருக்கு வில்லனாக நடிப்பதற்கு பல பட வாய்ப்புக்கள் தெலுங்கிலிருந்து வந்துள்ளன.

★ நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கங்கை அமரன் இரண்டு படங்களை இயக்கவுள்ளார். இவற்றில் அறிஞர் அண்ணா எழுதிய கதை ஒன்று படமாகிறது.

★ கிராமத்துக் கதையைக் கொண்டு முதல் இயக்கிய 'சிந்துநதிப்பூ' படத்தை இயக்கிய செந்தமிழன் அடுத்து தான் இயக்கும் படத்திற்கு நகர வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு கதை அமைத்துள்ளார்.

# காதோடு சொல்லுகிறோம்

★ 'வீட்ல விசேஷங்க' என்று கவர்ச்சி நடனம் ஆடிய 'ஷி' நடிகை இனி அப்படி ஆட மாட்டேன் என்கிறார். சண்டைப் படம் எடுத்தால் கூப்பிடுங்கள். கராத்தே தெரியும் என்கிறார். அதனால் அவர் வீட்டுக்குப் போகவே தயாரிப்பாளர்கள் பயந்து நடுங்குகிறார்கள்.

★ விக்னேஷ் பெயர் எடுக்கு முன்னரே காதல் விவகாரத்தில் சிக்கிவிட்டார். சங்கவியோடு ராசியானதால் படப்பிடிப்புக்கு வருவதை விட்டு சுற்றித் திரிவதில் நேரத்தை போக்குகிறாராம்.

★ அரண்மனைக் கிளி நாயகி இப்போது கல்யாணம் கிடையாது என்கிறார். இந்து வருடம் தள்ளி வைத்திருக்கிறாராம். விரும்புபவர்கள் காத்திருக்க வேண்டுமாக்கும்.

★ பதினாறு வயது நாயகி தேன் பெயரில் சொந்தமாக வீடு வாங்கிவிட்டார். திருமணத்திற்கு பின் நிம்மதியாக வாழ அந்த வீடு உதவும் என்கிறார். மார்க்கெட் குறையத் தொடங்க திருமண ஆசையும் ஓடி வரும் என்கிறார்கள்.

★ அர்ச்சனை நடிகைக்கு வாய்ப்புக்கள் அதிகம் வருவதில்லை. அதனால் வருமானமும் இல்லை. சொந்தமாக ஒரு வீடுகூட வாங்க முடியவில்லையே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்.

★ ரஞ்சித நடிகை பிரபல ஹீரோக்கள் சிலருக்கு பிரத்தியேகமாக விருந்து கொடுப்பதாக பேச்சு. அவர்களும் அவரை பலமாக சிபாரிசு செய்கிறார்களாம்.

★ வள்ளி நாயகி பிரபல இயக்குநர்கள் சிலருக்கு தூது அனுப்பி வாய்ப்பு கேட்டு வருகிறார். இதுவரை பெரிய வாய்ப்புக்கள் எதுவும் தேடி வரவில்லை. என்னிடம் என்ன இல்லை. ஏன் புறக்கணிக்கிறார்கள் என்று புலம்புகிறாராம்.

★ நீலக்கண் நடிகைக்கு இந்த வருடத்தில் ராசி என்று ஜோசியர் சொன்ன வாக்கு இதுவரை பலிக்கவில்லையாம். 'கா' நடிகர் கூட அவரை சிபாரிசு செய்வதில்லையாம். படு கோபத்தில் இருக்கிறார்.

★ மதுவை பெயரில் கொண்ட நடிகை இந்தியில் பிரபலமான சில ஹீரோக்களோடு நெருக்கமாக நடிப்பதாக கோடம்பாக்கத்தில் கிசுகிசு. அவரைப் பிடிக்காத ஒரு நடிகைதான் கிசுகிசுவை கிளப்பி விட்டுள்ளதாக மது நடிகை தரப்பு சொல்கிறது.

## தேவியின் தூது!

ஸ்ரீதேவிக்கு ஒரே வருத்தம். அவரது பிரத்தியேக நடன இயக்குநர் ஏதோ ஒரு பிரச்சனையால் விலகிப் போய்விட்டார். போனவரும் சும்மா இருக்காமல் மாதுரி டிக்ஷித்துடன் இணைந்து விட்டார். மாதுரி டிக்ஷித் அதனால் இலாபம் அடையக்கூடும் என்று நினைத்த ஸ்ரீதேவி மீண்டும் வந்துவிடுமாறு நடன இயக்குநருக்கு தூது அனுப்பிக்கொண்டிருக்கிறார்.

## ஆடைக்குறைப்புக்கு ரெடி!

ராம்கி ஜோடியாக இரண்டு படம், ஆனந்தபாபு ஜோடியாக 'பட்டுக்கோட்டை பெரியப்பா' என்று மள மளவென்று புதிய படங்களில் ஒப்பந்தமாகி வருகிறார் மோகினி.

மலையாளத்திலும், கன்னடத்திலும் சில படங்கள்.

ஆடைக்குறைப்புக்கு பச்சைக் கொடி காட்டியுள்ள மோகினி வெளிநாடுகள் பலவற்றுக்கு சென்று நடனமாடி வருகிறார்.

விரைவில் சொந்தக் குரலில் பாடும் நடிகையாகவும் இருக்கிறது.

"யாருடைய மனதையும் புண்படுத்தும் விதமாக பாட மாட்டேன். என்னுடைய குரல் ஓரளவு நன்றாகத்தான் இருக்கிறது." என்று அடக்கமாகச் சொல்லுகிறார்.

## அங்கே வேலை இல்லை!

கவர்ச்சி நடிகை அனுஜா தமிழில் இரண்டு படங்களில் ஆடினார். பின்னர் தெலுங்குப் பக்கம் ஓடினார். சுமனுடன் ஒரு படத்தில் நடித்தும் அது ஓடவில்லை. அதனால் மூட்டை முடிச்சுகளோடு மீண்டும் தமிழுக்கு வர தயாராகிக்கொண்டிருக்கிறார்.



## மார்க்கண்டேயரின் 175

தமிழ்த்திரையுலக மார்க்கண்டேயர் என்று புகழப்படுகிறவர் சிவகுமார். அவருக்கு பின் வந்த பல நாயகர்கள் காயப் போனார்கள். அவர் மட்டும் இப்போதும் 16 வயது இளைஞர் போல சுறுசுறுப்பாக ஓடித் திரிகிறார்.

சிவகுமாரின் 175 படம் 'வாட்ச்மேன் வடிவேலு' சிவகுமாரின் மனைவியாக சுஜாதா நடிக்கிறார். ஆனந்த் பாபு-கஸ்தூரி ஜோடியும் உண்டு.

## திரோசாவுக்கு ராதிகா அடி

எனக்கு எல்லாமே என் அக்காதான். எனக்குரிய உடைகளை தேர்வு செய்வது, சமையல் வேலையை கற்றுக் தருவது எல்லாமே அக்காதான் என்று சொல்லும் நிரோசா, ராதிகா அக்காவிடம் நான் அடிக்கடி வாங்கியிருக்கிறேன் அடி" என்று சொல்லிச் சிரிக்கிறார்.

## அப்படித்தானாம்!





## நெஞ்செல்லாம் மகிழ்ச்சி!

சரத்குமாரோடு கட்டபொம்மன், கார்த்திக்கோடு சின்ன ஜமீன், விஜயகாந்தோடு பதவிப் பிரமாணம்.

வினிதாவுக்கு நெஞ்சு கொள்ளாத சந்தோசம். முன்னணி கதாநாயகர்களோடு ஜோடி சேர்ந்து நடிப்பதால் ஊதியமும் உயரும், புகழும் கூடும். துபாய் நாட்டில் இருந்து தமிழுக்கு வந்திறங்கியவர் வினிதா. எப்படியும் நடிக்க தயார் என்ற தாராளமான கொள்கையுடையவர். இப்போது சத்யராஜ், பிரபு ஆகியோரோடும் புதிய படங்களில் ஒப்பந்தமாகியிருக்கிறார். வினிதாவின் அடுத்த இலக்கு கமல், ரஜினியோடு எப்படியும் ஒரு படத்தில் நடித்து விடவேண்டும் என்பதுதான். 'பதவிப் பிரமாணம்' படத்தில் விஜயகாந்தின் பாத்திரம் ராஜீவ் கொலை குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட புகைப்படப் பிடிப்பாளர் ஹரிபாபுவை வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. ஹரிபாபு இறந்துபோனாலும், 'பதவிப் பிரமாணம்' படத்தில் விஜயகாந்தின் பாத்திரம் அவர் இறந்து போகாதது போல மாற்றப்பட்டுள்ளது.

## முக்கிய அறிவித்தல்!

திருத்தப்பட வேண்டியிருக்கிறது பாவையின் தோகை!
பாதை மாறி போதையில் விழக்கூடும் மனக் குதிரை!

-நலன்விரும்பி-

## இவர்களோடு இவையும்!

'வீட்ல விசேஷங்க' படத்தில் நடித்த மோகனா கதாநாயகியாக நடிக்க, நாகராஜ் என்னும் புது முகம் கதாநாயகனாக நடித்து வரும் படம் 'தெய்வ சாட்சி'. பேபி ஷாமிலி முக்கிய பாத்திரத்தில் தோன்றுகிறார்.

குரங்கு-நாய், பாம்பு போன்றவையும் முக்கிய பாத்திரங்களில் தோன்றி நடிக்கின்றன.

பிரபல இயக்குநர் செந்தில் நாதன் திரைக்கதை எழுதி இயக்கியுள்ளார்.

பாடல்கள் வாலி, இசை தேவா.

## 'சொக்கத் தங்கம்'

ரஞ்சித், விக்னேஷ், பிரகதி ஆகியோர் நடித்துவரும் படம் 'சொக்கத் தங்கம்'. வில்லனாக கரிகாலன் நடிக்க, கிளு கிளுப்பான பாத்திரத்தில் விசித்ரா. வடிவேலு, இளவரசி, சி.ஆர். சரஸ்வதி ஆகியோரும் நடிக்கிறார்கள்.



-பிருந்தா-
படம்-வண்ணத்திரை

# சினி விசிட்

## வாய்ப்பு அமையவில்லை

பாரதிராஜாவால் அறிமுகப்படுத்தப்பட்ட நாயகிகள் புகழ்பெறுவதுபோல நாயகர்கள் புகழ் பெறுவதில்லை. ஏன்றாலும் நெப்போலியன் மட்டும் தொடர்ந்து நிலைத்து நிற்கிறார். நாடோடித் தென்றல் படத்தில் இரண்டாவது கதாநாயகனாக அறிமுகமான ரஞ்சித், அதன் பிறகு பெரிதாக நல்ல வாய்ப்பு எதுவும் அமையவில்லை. அந்த வருத்தம் அவருக்கும் உண்டு. நிழல்கள் ரவி மீது பாரதிராஜா அபிமானம் வைத்திருக்கிறார்.



விஜயகாந்த்-வினிதா
படம் - பதவிப்பிரமாணம்



## உலாவுக்கு வரும் நிலா

வித்தியாசமான பாத்திரம் ஒன்றில் சரவணன் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக புதுமுகம் நடிக்கிறார். அந்த புது முகத்தின் பெயர் நிலா.

'அக்கரைச் சீமையிலே' படத்தை தயாரித்த நிறுவனம்தான் இதையும் தயாரிக்கிறது. படத்திற்கு 'ஒரு காதல் பயணம்' என்று பெயரிட்டுள்ளார்கள்.

## ஆங்கிலப் படம் இயக்குவார் கமல்!

இந்தியில் 'மகாநதி' படத்தை இயக்கும் கமல்ஹாசன் அடுத்து ஆங்கிலப் படம் ஒன்றையும் இயக்க திட்டமிட்டுள்ளார். ஆனால் அதற்கு பெரிய பட்ஜெட் தேவைப்படும். சில ஆண்டுகள் கழித்துதான் அந்த திட்டம் கைகூடும் என்கிறார் கமல்.



முகப்பில்
நிரோசாவின் முகத்தில்
தன் முகம் பார்ப்பது
ஆனந்த்பாபு
படம்-வானவில்

## ...வுக்கு பிடித்த நடிகர்

... நாயகி பிரியாராமனுக்கு பிடித்த ...ரவன். அவரே சொல்லி இருக்கிறார். ...ன் திருமணம் ஆகிவிட்டதே என்று ...டார் பிரியாராமன்.

...டையிலோ முத்தக் காட்சியிலோ நடிக்கமாட்டேன். அதனால் பல ...போய்விட்டன பரவாயில்லை என்றும் ...பிரியாராமன்.

...வந்த பிறகு மனம் திறந்து ...தைத்துக்கொண்டாராம். காரணம் ...அனுபவம்தான்.

## அதிகமாய் தா!

பாண்டியராஜன் காட்டில் மீண்டும் மழை.

அதனால் தயாரிப்பாளர்கள் படையெடுத்துப்போய் கதவைத் தட்டுகிறார்கள். உடனே சம்பளத்தை உயர்த்தி விட்டார் பாண்டியராஜன். காற்றுள்ள போதுதானே தூற்றிக்கொள்ள முடியும்.

## அரங்குபோட ஆனது பத்து இலட்சம்!

'புதிய முகம்' படத்தில் பேர் வாங்கிய வினீத் கதாநாயகனாக நடிக்கும் 'மே மாதம்' படத்தின் படப்பிடிப்புக்கள் முடிவடையும் நிலையில் உள்ளன.

புது முகம் சோனாலி கவர்ச்சி கதாநாயகியாக வெளுத்து வாங்கியிருக்கிறார். 10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட விசேஷ அரங்கில் படப்பிடிப்புக்கள் நடத்தப்பட்டன. மணிரத்தினத்திடம் உதவியாளராக இருந்த பாலு படத்தை இயக்கியுள்ளார். தயாரிப்பு ஜி.வெங்கடேஸ்வரன். (ஜின்)

## இப்போதும் இளமையோடு!

'கிழக்குச் சீமையிலே' படத்திற்கு பின்னர் விஜயகுமாருக்கு பேர்சொல்லும்படியான ஒரு படம் 'சக்திவேல்'. கதாநாயகன் செல்வா. ஆனாலும் விஜயகுமாருக்கு படத்தில் முக்கியத்துவம் அதிகம். தனது உடம்பை கவனமாக பாதுகாத்துவரும் விஜயகுமார் இன்றும் இளமையானவராகவே தெரிகிறார். "இப்போதுகூட இளம் கதாநாயகிகளோடு 'டூயட்' பாடி என்னால் நடிக்க முடியும்." என்று தன்னம்பிக்கையோடு பேசுகிறார். 'புதுப்பட்டி பொன்னுத்தாயி' என்னும் படத்தில் 'கிழக்குச் சீமையிலே' படத்தைப் போலவே நெப்போலியன், ராதிகா, விஜயகுமார் மூவரும் இருக்கிறார்கள்.



விஜயசாந்தி

## ...-நட ராணி!

விஜயகாந்துடன் நடிக்க ... தாயகம் ... படம் ... [illegible] ... விஜயசாந்தி.

... [illegible]

## நீச்சல் உடையில் கௌதமி

என்னுடைய உடல்வாகுக்கு நீச்சல் உடையில் நடிக்க முடியாது என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்த கௌதமி இந்தியில் ஒரு படத்தில் நீச்சல் உடையணிந்து மிகவும் கவர்ச்சியாக நடித்திருக்கிறாராம். தமிழுக்கு 'டாட்டா' சொல்லிவிட்ட அவர், இப்போது இந்திப் படவுலகை மிகவும் நம்புகிறார்.

## பிரபுவைப் பிடிக்கும்

'கிழக்குச் சீமையிலே' படத்திற்குப் பிறகு நிறைய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் ராதிகா. நடிகர்களில் தனக்கு மிகவும் பிடித்தவராக பிரபுவைக் குறிப்பிடுகிறார். "பிரபு எனக்கு ரொம்பவும் பிடித்தவர். மிகவும் 'ஃப்ளக்சிபில் டைப்' நேரிலும் சரி, நடிப்பிலும் சரி எதையும் எளிதில் புரிந்துகொண்டு செயற்படுவது அவரது பாணி." என சொல்கிறார் ராதிகா.

பிரபுவோடு நடித்த 'நினைவுச் சின்னம்' படம் தனக்கு பிடித்த சிறந்த படங்களில் ஒன்று என்கிறார்.

## டிஸ்கோவின் தத்துவம்

ஒரு படத்திற்குக் கவர்ச்சி நடிகை என்பவள் சமையலுக்கு உப்பு மாதிரி. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே. கவர்ச்சி இல்லாப்படம் டப்பாவுக்குள்ளே. இன்றைய இளைஞர்கள் கவர்ச்சிக்குக் கொடுக்கிற வரவேற்பை, கருத்துக்களுக்குக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். ஆனாலும், கதைக்குப் பொருத்தமாகத்தான் கிளாமர் இருக்க வேண்டும் என்று சொல்கிறார் டிஸ்கோ சாந்தி.

## இந்து-ஏமாற்றிவிட்டது!

'வீரா' - 'வண்டிச்சோலை சின்ராசு' படங்களின் வீடியோ கசட்டுகளுக்கு தலைநகரில் கடுமையான கிராக்கி.

தமிழ் நாட்டிலும் இரு படங்களும் வசூலில் பாதகம் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன.

'வீரா' முதலிடத்தில் இருக்கிறது. 'இந்து' எதிர்பார்க்கப்பட்டளவுக்கு பிரமாதமாய் இல்லை.

பல காட்சிகள் எடிட்டிங்கில் வெட்டப்பட்டுவிட்டன. எடிட்டிங் சிறப்பாக இல்லாததால் சில காட்சிகள் படத்தோடு ஒட்டாதது போல் தெரிகின்றன.

சரத்குமார் ஒரு காலை இழந்தவராக நடிப்பதாகத்தான் முதலில் திட்டம். பின்னர் மாற்றப்பட்டு, சரத்தின் பாத்திரமும் விளம்பரம் செய்யப்பட்டளவுக்கு இரசிகர்களை வியக்கச் செய்ய முடியவில்லை.



"காக்கை குருவி எங்கள் ஜாதி-நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்;
நோக்குந் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை;
நோக்க நோக்கக் களி யாட்டம்."

-சுப்பிரமணிய பாரதியார்-



## நற்பாதை



பள்ளிக்கு நாளும் சென்றிடுவீர்
பண்பை முதலில் பழகிடுவீர்.
உண்மை என்னும் ஒரு சொல்லில்
உள்ளம் நிறைந்து நடந்திடுவீர்.
கணக்கை கசடறக் கற்றாலும்
பிணக்குகள் ஏற்பட நடவாதீர்.
குற்றம் களைந்து நடந்திடுவீர்
அறிவை அணிந்து நடந்திடுவீர்
பாரில் மதிப்பில் உயர்ந்திடுவீர்.

அனுப்பியது: சி. துஷ்யந்தன்
மண்டூர் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு.

## பாப்பா முரசு சிறுகதை

# வைக்கோல் போரில் தீ

மோட்டூர் என்ற ஊரில் பண்ணையார் ஒருவன் இருந்தான். அவன் பெயர் மாணிக்கம்.

அவனுக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தன. எப்போதும் ஆடம்பர வாழ்க்கையையே அவன் வாழ்ந்து கொண்டிருப்பான். மிகவும் பகட்டாக உடை உடுத்திக்கொண்டு தெருவில் சுற்றி வருவான். கிராம மக்கள் தன்னைப் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவே அவன் அந்த ஊர் முழுக்க கம்பீரமாகச் சுற்றித் திரிவான்.

ஆனால் அந்த ஊர்வாசிகளே அவனைக் கண்டு கொள்வதே இல்லை. அவன் யாருக்கும் உபயோகமற்ற ஒரு தற்பெருமைக்காரன் என்பதை என்றோ உணர்ந்து விட்ட அவர்கள், தெருவில் அவனைப் பார்க்கும் போதெல்லாம் கண்டுகொள்ளாமல் தத்தம் வேலைகளிலேயே மூழ்கி விடுவார்கள்.

இதைக் கண்கூடாக அனுபவித்து வந்த மாணிக்கம் மிகவும் வருத்தப்பட்டான். ஒரு செல்வந்தனாய் இருந்தும் இந்தக் கிராம மக்களிடம் சிறிதுகூட மரியாதையை எதிர்பார்க்க முடியவில்லையே என்று வருத்தப்பட்டான். ஆனாலும் பகட்டாக வாழ்வதிலிருந்து ஏனோ அவனால் விடுபட முடியவில்லை.

ஒருநாள் அவன் அருகில் இருக்கும் நகருக்குச் சென்று பிரபலமான நகைக்கடை ஒன்றில் ஒரு தங்க மோதிரம் வாங்கி விரலில் போட்டுக்கொண்டு வந்தான்.

வருகின்ற வழியெல்லாம், தன் மோதிரம் பலரது கண்களில் படுமாறு கையை ஆட்டிக்கொண்டே வந்தான். ஆனால் அவனை யாருமே கண்டுகொள்ளாதது அவனுக்குப் பெரிய வருத்தமாக இருந்தது.

ஓரிடத்தில் சிலபேர் கும்பலாக நின்று சுவாரஸ்யமாக எதையோ பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடத்தில் தனக்குப் பெருமை கிடைக்கும் என்று நினைத்த மாணிக்கம் அவர்களிடம் கம்பீரமாக நடந்து சென்றான்.

அவர்களைப் பார்த்து, "வானம் இருண்டிருக்கிறது. மழை வருமோ?" என்று மோதிர விரலால் வானத்தைச் சுட்டிக்காட்டிக் கேட்டான்.

அவர்களோ, வானத்தைப் பார்த்தார்களே தவிர, அவனின் புது மோதிரத்தைப் பார்க்கவே இல்லை. ஒரு சிலர் பார்த்தும், இது என்ன பெரிய அதிசயம்? என்று நினைத்து பார்க்காததுபோல் இருந்து விட்டார்கள்.

அங்கும் தனக்குப் பெருமை கிடைக்க வில்லை என்பதை உணர்ந்து கொண்ட மாணிக்கம் மேலும் நடந்தான். ஓரிடத்தில் இன்னொரு கும்பல் தெரிய, அங்கு சென்றான். அவர்களிடம் ஒரு வீட்டை, மோதிரம் அணிந்த விரலால் சுட்டிக்காட்டி, "அந்த வீட்டில் இப்போது யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

அவர்களும் அவனது மோதிரத்தைப் பார்த்தார்கள். ஆனால் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் தோற்றுவிக்காமல் அவன் கேட்டதற்குப் பதிலை மட்டும் சொல்லிவிட்டு மறுபடி தங்கள் சுவாரஸ்யமான பேச்சில் மூழ்கிப் போனார்கள்.

அந்த இடத்திலும் ஏமாற்றத்தைச் சந்தித்த மாணிக்கம் மேலும் சில இடங்களிலும் இதே ஏமாற்றத்தைத்தான் சந்தித்தான். இதனால் அவனுக்குக் கோபம் வந்தது. கிராமத்து ஜனங்கள் ஆடைகளையும், ஆபரணங்களையும் இரசிக்கத் தெரியாத முட்டாள்களாக இருக்கிறார்களே என்று நினைத்து எல்லார் மீதும் ஆத்திரப்பட்டான். இறுதியில் அவனது ஆத்திரம் அவன் வீட்டு வைக்கோல் போரின் மேலேயே விழுந்தது.



ஊர் உறங்கும் நேரத்தில் அந்தப் பெரிய வைக்கோல் போரில் தீ வைத்தான். தீ தகதகவென்று பிடித்து எரிவதைத் தற்செயலாகப் பார்த்து விட்ட பண்ணையாள் ஒருவன், அத்தனை பண்ணையாட்களையும் தட்டியெழுப்பி தீயை அணைப்பதில் ஈடுபட்டான்.


அப்பொழுது பண்ணையாட்களில் ஒருவன் அந்தத் தீயின் வெளிச்சத்தில் பட்டு ஒளிர்ந்த மாணிக்கத்தின் மோதிரத்தைப் பார்த்துவிட்டான்.

"ஐயோ இந்த மோதிரத்தை எங்கே வாங்கினீர்கள்? மிகவும் பிரகாசமாக இருக்கிறதே. உங்கள் விரலுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது," என்று புகழ்ந்து விட்டான் அந்தப் பண்ணையாள்.

தன் வேலைக்காரனாவது தன் மோதிரத்தைப் பார்த்துப் பெருமைப் பட்டானே என்று நினைத்தபோது மாணிக்கத்திற்குச் சந்தோசமாக இருந்தது. ஆனாலும் அவன் அந்தப் பண்ணையாளைப் பார்த்து, "இதைப் பகலிலேயே பார்த்து நீ கேட்டிருந்தால் இந்த வைக்கோல் போர் தீப்பற்றி எரிந்திருக்காது" என்றான் மாணிக்கம்.

குழந்தைகளே! நமக்குப் பெருமை கிடைக்க வேண்டும் என்பதற்காக, பொன்னான நேரத்தை ஆடம்பரத்திலும், அனாவசியச் செலவிலும் செலவழித்தால் இறுதியில் நாம் அடையப்போகும் பலன் என்ன? நஷ்டம் தவிர எதுவுமே இல்லை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.05.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 38
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு -05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 35

**பரிசுக்குரியவர்**
சக்திராஜ் சந்திரசேகரம்
கோணேஸ்வர இந்துக் கல்லூரி
திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்**

வை.திலகநாயகி
உடப்பு-04.

செல்வி. பெய்னா ஹஸ்னா
தெகிவளை.

விநோகாந்தன் வீரபுத்திரன்
புனித ஜோன் போஸ்கோ மகா வித்தியாலயம்- ஹட்டன்.

கி.அமிர்தவர்ஷினி
விக்னேஸ்வரா வித்தியாலயம்
கதிரவெளி.

கே.நிஷாந்தினி
டிக்கோயா.

செல்வன்.வில்வராஜா.கிருஷாந்தன்
திருகோணமலை.

## விடுகதைகளும் விடைகளும்

1. எரிபொருள் இல்லாமல் இயங்கும் இயக்கம். நின்றால் இயங்காது. அது என்ன?
2. கண்ணிருந்தும் குருடாய், காதிருந்தும் செவிடாய், பார்ப்பவரைக் கவரும். அது என்ன?
3. பறந்துவரும். பறவையுமல்ல, வெளிச்சம் தரும். பல்ப்புமல்ல. அது என்ன?
4. பிறருக்காகவே தன்னை அழித்துக்கொள்வான். அவன் யார்?
5. வாழ்ந்தால் இப்பறவை கூட்டுக்குள்ளே வாழும். கூட்டைவிட்டுப் பறந்தால் பின் கூடு வந்து சேராது. அது என்ன?
6. வசதியுள்ளவன் வீட்டில் தாமதித்து நாட்டையே வலம் வருவான். அவன் யார்?
7. மானிடரை அலங்கரிப்பாள். அவர்களை படைத்தவனையும் அலங்கரிப்பாள். ஆனால் அவள் ஆயுளோ ஓர் நாள்தான். அவள் யார்?
8. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அதனை ஒரேயொரு முறை அடைவோம். அது என்ன?
9. உருவம் இல்லாதவன். ஆனால் உலகமெல்லாம் உலா வருவான். அவன் யார்?
10. பிரியமானவர்களிடம் பெற முடியும் பூ. ஆனால் அழிவில்லாத பூ. என்ன பூ?

### விடைகள்

1. இதயம் 2. பாவை
3. மின்மினிப்பூச்சி 4. செருப்பு
5. உயிர் 6. பணம்
7. மலர் 8. மரணம்
9. காற்று 10. அன்பு

ஞா. இன்பச் செல்வம்
மட்/ ஆரைப்பற்றை மகாவித்தியாலயம்.

## ஒலிம்பிக் கொடியில் உள்ள ஐந்து நிறங்களும் அதற்குரிய கண்டங்களும்

நீலம்-ஐரோப்பா மஞ்சள்-ஆசியா
கருப்பு-ஆபிரிக்கா பச்சை-அமெரிக்கா
சிவப்பு-அவுஸ்திரேலியா

## இவை-இப்படி


1. இதயத்துடிப்பைத் தூண்டும் இதயத்தின் மையம் எது? **பேஸ்மேக்கர்**
2. இதயத்துடிப்பை குறைக்கும் இரசாயனப் பொருள் எது? **அசட்டைல் கொலின்**
3. ஆரோக்கியமான மனிதனின் இதயத்துடிப்பு எவ்வளவு? **நிமிடத்திற்கு 72 முறை**
4. நைதரசன் ஏராளமாக அடங்கியுள்ள உரம் எது? **யூரியா-இதில் 34% அடங்கியுள்ளது.**
5. உலகில் மிக முக்கியம் பெற்ற விஞ்ஞான சஞ்சிகை எது? **(Nature)நேச்சர்**
6. இரத்த அழுத்தத்தை கணிப்பதற்கு பயன்படும் கருவி. எது? **'ஸ்டிக்மானோ மீட்டர்'**

ம.வெலன்டினா
நல்லாயன் மகளிர் கல்லூரி-நுவரெலியா.


## அறிவோம் மனதில் பதிவோம்



ஐரோப்பாவில் பூக்கள் உற்பத்தியிலும், ஏற்றுமதி செய்வதிலும் முதல் இடம் வகிக்கும் நாடு நெதர்லாந்து. ஐரோப்பாவிலேயே அதிகமாகப் பூக்களை இறக்குமதி செய்யும் நாடு ஜேர்மனி.



சீனாவை கி.பி. 860முதல் கி.பி.874ம் ஆண்டுவரை ஆண்ட மன்னர் வீசாங். இவரது மகள் காய்ச்சலில் அவதிப்பட்ட போது 20 வைத்தியர்கள் அவளுக்கு வைத்தியம் செய்தனர். அப்படியும் அப்பெண் இறந்துவிட்டாள். உடனே அந்த 20 வைத்தியர்களின் தலையைச் சீவும்படி ஆணையிட்டார் மன்னர்.



கடல்நீர் நாய்கள் நத்தைகளைப் பிடிக்கும் முன்பாக ஒரு பெரிய தட்டையான கல்லை எடுத்துக் கையிடுக்கில் வைத்துக்கொள்ளும். பிறகு இரு கைகளிலும் நத்தைகளையும், சிப்பிகளையும் பிடித்துக்கொண்டு கடலின் மேல் பரப்பிற்கு வரும். அங்கே உடலை நிமிர்த்திப் படுத்த நிலையில் தட்டையான கல்லைத் தனது நெஞ்சின்மீது வைத்துக்கொள்ளும். பின் ஒவ்வொரு நத்தையாக அந்தக் கல்லில் வைத்துத் தட்டித்தட்டி ஓடுகளை நீக்கி அவற்றின் மெத்தென்ற உடல் பாகத்தை உண்ணும். சாப்பாடு முடிந்ததும் அப்படிப் படுத்த நிலையிலேயே அலைகளின் தாலாட்டில் சுகமாகத் தூங்கும். 'உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு,' என்பார்கள். இந்த நீர் நாயும் அதற்கு விதிவிலக்கு அல்ல.

## அல்ஜிப்ரா பட்டர்!

இப்போது நாம் ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு அல்ஜிப்ரா போடுகின்றோம். இதை முதன் முதலில் கண்டு பிடித்தவர் யார்? மேனாட்டவர் அல்ல, தேவ நாகரி எழுத்துக்களைக் கொண்டு (உபயோகித்து) அல்ஜிப்ரா கணக்கை முதன் முதல் செய்தவர் 'ஆரியப்பட்டர்'. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கணித மேதை. அல்ஜிப்ராவின் காலத்தை கணக்கிட ஆராய்ச்சி செய்தபோது, ஆரியபட்டரின் நூல்களில் அல்ஜிப்ரா காணப்பட்டதாம். எனவே ஆராய்ச்சியாளர், அவர்தான் முதன் முதலில் அல்ஜிப்ராவை கணித்திருக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கின்றனர்.

எம்.தில்லைராஜா-பசறை தமிழ் மகா வித்தியாலயம்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

ஸ்போர்ட்ஸ்

# பொறுப்பில்லாத நம்பிக்கை நட்சத்திரங்கள்! உத்வேகமாய் ஆடிய பாகிஸ்தான் அணி

கடந்த 22ம் திகதி சார்ஜாவில் 'ஒஸ்ரலேசியா' கிண்ணத்திற்கான கிரிக்கெட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அபாரமான வெற்றியோடு காட்சி யளிக்க, தனது பொறுப்பற்ற அணியை சபிப்பதை தவிர இந்தியாவுக்கு வேறு வழியில்லாமல் போனது.

இந்திய அணி சிறப்பான ஆட்டக்காரர் களைக் கொண்டிருக்கிறது. 250 ரன்களை அடித்துக் குவிப்பது என்பது சாதாரணம்.

ஆனால், வெற்றிக் கோட்டினை நெருங்கும் போது தடுமாறுவது இந்திய கிரிக்கெட் அணியின் சாபக்கேடாகவே சமீப ஆண்டுகளில் மாறிவருகிறது.

பாகிஸ்தான் அணியிடம் வெற்றிபெற வேண்டும் என்று உத்வேகம் ஆரம்பம் முதல் இறுதிவரை தணியாமல் இருந்ததை கவனிக்க முடிந்தது. 250 ரன்களோடு பாகிஸ்தானை கட்டுப்படுத்திய இந்திய அணியை அதன் நம்பிக்கை நட்சத்திரங்கள் காலை வாரிவிட்டனர்.

டெண்டுல்க்கர் போனதோடு 50 வீத வெற்றிவாய்ப்பு உறுதியாகிவிட்டது என்று பாகிஸ்தான் அணித் தலைவர் சலீம் மாலிக் கூறியிருந்தார்.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்களை கண்டு இந்திய அணி வீரர்கள் பயப்படுகிறார்கள்.

பாகிஸ்தானோடு ஆடும்போது இந்திய அணியின் சிறந்த துடுப்பாட்ட வரிசை சரிந்து விடுகிறது. வினோத் கம்பிளி தவிர சகல சிறந்த துடுப்பாட்டக்காரர்களும் விரைவில் வெளியேறிவிட்டனர். பின் வரிசை துடுப்பாட்டக் கார்கள் ஓரளவு மரியாதையை காப்பாற்றி னார்கள். கடுமையான போட்டிகூட இல்லாமல் இந்திய அணி சுருண்டது பார்வையாளர்களுக்கு கூட சலிப்பை ஏற்படுத்திவிட்டது.

உலக கிரிக்கெட் சாம்பியனான பாகிஸ்தான் அணி தனிக்காட்டு ராஜாவாக திகழ்கிறது.

இந்திய அணியில் கபில், மனோஜ் பிரபாகர் இல்லை, அதனால்தான் தோல்வி என்று சாக்குப்போக்கு சொல்ல முடியாது.

தீர்க்கமான கட்டங்களில் உத்வேகம் பற்றாக்குறையும், பொறுப்பின்மையும் இந்திய அணிக்கு உள்ள குறைபாடுகள்.



சார்ஜாவில் பாகிஸ்தான் அணிக்கு பார்வை யாளர்கள் தரப்பில் இருந்து கிடைத்த உற்சாகம் வேறு அணிகளுக்கு கிடைக்கவில்லை. அதுவும் பாகிஸ்தான் ஆட்டக்காரர்களுக்கு ஒரு பலம்.

கிரிக்கெட் இன்று சர்வதேச கவனத்தை பெறும் விளையாட்டாகிவிட்டது.

சார்ஜா கிரிக்கெட் போட்டிகளை இலங்கையிலும் தொலைக்காட்சி மூலமாக ஆண்களும், பெண்களும் கண்டு களித்தனர்.

பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றவுடன் கொழும்பிலும் பட்டாசுகளின் முழக்கம் கேட்டது.

## அராஜக உச்சரிப்புகள்

விடுதலையைக்
கைது செய்து
அடிமை
விலங்கு பூட்டு.
சுவர்கள்
முகம் பார்க்கும்
அமாவசை
இருட்டுக்குள்
ஜனநாயகத்தை
நெட்டித்தள்ளி
நெருஞ்சிகளால்
அதன் மேனியை
கீறி
ஆறாத காயங்களை
அட்சதைப்படுத்து.
□□
தேசத்தின்
விழிகளை
துப்பாக்கி உதவி
கொண்டு
குருடாக்கி
நாசப்படுத்து.
கும்மிருட்டில்
தடம் மாறும்
மண்ணில் முளைத்து
நிற்கும்
மானுடங்களை
சித்ரவதை செய்து
கூக்குரலிடச்செய்.
□□
சந்தோஷங்களுக்கு
மீண்டும் மீண்டும்
சமாதி கட்டு.
குப்புறவிழும்
உயிர்களுக்கு
கல்லறைகளை
ஒவ்வொரு
பொழுதுகளிலும்
திறந்து
வை.
□□
தட்டிவிடு
அராஜகத்தையும்
இனவாதப் பேய்களையும்.
சுதந்திரத்தை
வெட்டித்தள்ளிவிட்டு
குருதி மீதான
வேட்கை கொண்டு
மானுடங்களில்
ராட்சஸமாய்
ஒட்டிக்கொள்ளட்டும்.
□□
கலவரங்களை
மூட்டிவிடு.
இன ஒற்றுமை
கல்லறைப்படட்டும்.
பூவைச்சூடிய
நிலமகள்
நிஷ்டூரச் சுமைகளை
கண்ணீருடன்
சுமக்கட்டும்.
□□
அணுகுண்டுகளின்
ஆட்சி
சிம்மாசனமேறட்டும்.
துப்பாக்கிகள்
காற்றுடன்
கனல் பற்றட்டும்.
மயான வெளிகள்
எங்கும்
மலர்ந்து
நிற்கட்டும்.
மானுடன் மட்டும்
உயிர்களை
அள்ளிக்கொண்டு
ஊர்விட்டு
ஓடட்டும்,
'அகதிகள்'என்ற
பாஷையை
உச்சரித்தவாறு
□□
-கிண்ணியா-சபறுள்ளா-

# தேன் கிண்ணம்



## மாதவளும் - நானும்

காதலெனும் பாதையிலே காலெடுத்து வைக்கையிலே
வாதையெது வந்திடினும் வந்திடட்டும் என்றிருந்தேன்
மாதவளை மாலையிட்டே மல்குமவள் புன்முறுவற்
போதுதரும் தேன்நுகர்ந்தே போதையிது என்றிருந்தேன்....

பாதைநிலை பார்த்தும் பக்கலொக்கல் நோக்கி வந்தும்
மாதவளும் நானும்என்றும் மாகடிதம் மாறி வந்தோம்
காத லினித்திட்டதம்மா கல்யாணம் ஆனதம்மா
மோதலின்று காணுகின்றேன் மூச்செடுக்க நாணுகின்றேன்....

அரையவியலாயிருக்கே என்ற உண்மை சொன்னால்
விறகிருக்காவென்றெல்லோ வேங்கையெனச் சீறுகிறாள்
காசுடையான் என்றெண்ணிச் சேர்ந்தேனே என்கின்றாள்
வீட்டுநிலையெண்ணி யெண்ணி விம்முகிறேன் எந்நாளும்....

ஜெயந்தி-பம்பலப்பிட்டி.



## யுத்த பூமியில்

சுதந்திரத்தைக்
கூறுபோட்டு
கூவிப் பறக்கும்
ஷெல்!
சிதறி வெடித்து
உடல்களைக் கிழித்து
சித்திரவதை செய்யும்...!
□□
அபாய ஒலிகளை
ஊதிவரும்
விமானங்களின்
இரைச்சலில்
ககனம் நோக்கும்
கிலி பிடித்த முகங்கள்...!
□□
விழுந்து குதறும்
குண்டுகள்
பிணக்குழி தோண்டி
உடல்களைப்.
பிய்த்தெறியும்!
ரத்தம் நாறும்!
□□
துரத்தி வரும்
துப்பாக்கி ரவைகள்
மனித உயிர்களை
பறித்தெடுக்கும்!
□□
கண்களில்
பீதி கௌவ
கேள்விக்குறியான
வாழ்க்கையோடு
மனிதம்!
□□
யுத்த பூமியில்
அலுத்துப்போன
அன்றாட நிகழ்வுகள்.

அ.குமணன்-பாண்டியூர்.

## புரியாத நெஞ்சுக்கு

பெண்ணே-நீ
என்னை வெறுக்கிறாய்
புரிகிறது...!

என்னை இதயமில்லாதவன்
என்கிறாயா.......?

பெண்ணே-உன்னைக்
கண்ட போதே அன்றே
என் இதயத்தை இழந்தவனிவன்
புரியவில்லையா.....!

தாஜ்மஹாலையே
தோற்கடிக்கும்
காதல் மஹால் ஒன்றை
உனக்காக
உருவாக்க முடியும்.



வேண்டாம்!
ஏன் என்றா
கேட்கிறாய்?

எம் மண்ணின்
குருதிகள் போட்ட
தெருக்கள்
உறையாது ஓடுகிறது..!


இடிபாடுகளிடை ஓலங்கள்-இன்னும்
குறைவில்லா ஒலிக்கிறது.
உறையுளின்றி
உருக் குலைந்தவுடல்கள்
உய்வின்றி யழ-இவை
உறைந்து விட்ட [illegible]இதயத்தில்.

இனியாவது எ[illegible]

இதயமல்லாதவ[illegible]
உன் வார்த்தைகளால்
எரிக்காதே....

என்னின்ப மஹாலை
கட்டுவேன்-உனக்காக
எப்பொழு தென்கிறாயா?
இம் மண்ணின் இடிபாடுகள்
ஓலங்கள் ஓய்ந்தபின்
நானிருந்தால்...!

மாட்டின் ஜெயா-மட்டுநகர்.



# இந்திய அணிக்கு திடீர் புதையல்



இந்திய கிரிக்கெட் அணிக்குத் திடீர் புதையில்போல கிடைத்துள்ள வீரர் நயான் மொங்கியா. விக்கட் கீப்பர்கள் கிரன் மோரே, விஜய் யாதவ் ஆகியோருக்குப் பிறகு விக்கட் கீப்பர் யார் இருக்கிறார்கள் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்த வேளையில் மொங்கியா கிடைத்து இருக்கிறார்.

பரோடாவைச் சேர்ந்த இளம் வீரரான அவர் ஸ்டம்புக்கு முன்னும் சரி, பின்னும் சரி தனக்குக் கொடுக்கப்பட்ட பணியைச் செம்மை யாகச் செய்து முடிக்கிறார். இன்னொரு வகையில் சொல்ல வேண்டுமானால் தனக்குக் கிடைத்த வாய்ப்பை மிக அருமையாகப் பயன்படுத்தி வருகிறார். 1990ம் ஆண்டு இங்கிலாந்து சென்ற கிரிக்கெட் அணியில் இவர் சேர்க்கப்பட்டு இருந்தார். ஆனால் அப்போது யாருக்கும் மொங்கியாவைப் பற்றித் தெரியவில்லை.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இவர் விளையாடிய போது இவரைப் பலரும் திட்டித் தீர்த்தார்கள். இரண்டு அருமையான காட்ச்களை மொங்கியா பிடிக்கத் தவறியதே அதற்குக் காரணம்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு மொங்கியா அணியிலிருந்து கழற்றி விடப்பட்டார். ஹீரோ கோப்பைப் போட்டிகளின்போது தன்னை அணியில் சேர்ப்பார்கள் என்று மொங்கியா எதிர்பார்த்தார்.

ஆனால் மொங்கியாவுக்கு இடம் கிடைக்க வில்லை. எனினும் மனம் தளராத மொங்கியா மீண்டும் அணியில் இடம் பெறுவோம் என்ற நம்பிக்கையில் இருந்தார். அவர் நம்பிக்கை வீண் போகவில்லை.

பரோடா பல்கலைக்கழகத்தில் பி.கொம் பட்டம் பெற்றுள்ள மொங்கியா இரானி கோப்பைப் போட்டிகளில் வெளுத்து வாங்கி நல்ல பெயர் எடுத்தவர். அந்த வெளுத்து வாங்கலே அவரை இந்திய அணிக்குள் கொண்டு வந்தது.

# இந்த வாரம் உங்கள் பலன்

(01.05.94 முதல் 07.05.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், புதன், செவ்வாய், கேது |
| இடபம் | - வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |

சந்திரன் — தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பண வரவு, தேகசுக நன்மை. | காலை 6 மணி |
| திங்கள்- | அந்நியர் நட்பு, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பிரயாணம், கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- | துயர் நீங்கும், மனப்பூரிப்பு. | காலை 8 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, முன்னேற்றம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | தெய்வானுகூலம், நம்பிக்கை. | காலை 10 மணி |
| சனி- | புதிய முயற்சி, பணவரவு. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் உதவி, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் விருத்தி, மனநிறைவு. | காலை 9 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், பொருள் இழப்பு. | பி.ப 1 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி பலிதம், பணவரவு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- | வீண் முயற்சி, செலவு மிகுதி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, உயர்ச்சி. | காலை 8 மணி |
| திங்கள்- | மன மகிழ்ச்சி, செய்தொழில் நன்மை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பணத்தடை. | காலை 10 மணி |
| புதன்- | வெளியிடப் பிரயாணம், கௌரவம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, உறவினர் உதவி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | கடன் தொல்லை, காரியத் தடை. | பி.ப 4 மணி |
| சனி- | வீண் செலவு, துயர் அதிகம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், மனக் கவலை. | பி.ப 2 மணி |
| திங்கள- | பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| புதன்- | உறவினரால் கஷ்டம், பயமிகுதி. | காலை 9 மணி |
| வியாழன்- | திடீர் பிரயாணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் நட்பு, சுகம். | காலை 10 மணி |
| சனி- | மனப் போராட்டம், முயற்சி குறைவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்- 7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, பணவரவு. | காலை 8 மணி |
| புதன்- | துயர் அதிகம், வைத்தியச் செலவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | உறவினர் ஒத்தாசை, குடும்பசுகம். | காலை 8 மணி |
| வெள்ளி- | வெளியிடத்தால் நன்மை, கௌரவம். | பகல் 11 மணி |
| சனி- | செலவுக் கஷ்டம், மனக்கவலை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, தொழில் மேன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் விருத்தி, முன்னேற்றம். | காலை 7 மணி |
| புதன்- | துயர் நீங்கும், கூடிய முயற்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, மனக்கவலை. | காலை 10 மணி |
| வெள்ளி- | வெளியிட நட்பு, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- | தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரிய சித்தி. | காலை 6 மணி |
| திங்கள்- | கவலை நீங்கும், பணவரவு தடை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, முன்னேற்றம். | பி.ப 2 மணி |
| புதன்- | வெளியிட பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- | தெய்வ நம்பிக்கை, முயற்சி மேன்மை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வீண் யோசனை, செலவுக் கஷ்டம். | காலை 7 மணி |
| சனி- | பிரயாணக் கஷ்டம், மனக் கவலை. | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | வெளியிட வாசம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | காரியானுகூலம், பணக் கஷ்டம். | காலை 9 மணி |
| புதன்- | உறவினர் உதவி, மனக் கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| வியாழன்- | செய்தொழில் விருத்தி, மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், கௌரவம். | பி.ப 1 மணி |
| சனி- | வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், தேகசுக நன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பணவரவு, காரிய சித்தி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | உயர்ச்சி, பணத்தடை நீங்கும். | காலை 7 மணி |
| புதன்- | பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | உறவினரால் தொல்லை, கவலை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வெளியிட பிரயாணம், செலவு. | காலை 7 மணி |
| சனி- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | உயர்ந்த எண்ணம், பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் மனஸ்தாபம், கவலை. | காலை 7 மணி |
| புதன்- | வெளியிட வாசம், முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| வியாழன்- | செய்தொழில் நட்டம், கவலை மிகுதி. | காலை 8 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, கவலை நீங்கும். | காலை 9 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, பொருள் வரவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -8

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பிரயாணம். | பகல் 12 மணி |
| புதன்- | செய்தொழில் விருத்தி, உயர்வு. | பகல் 11 மணி |
| வியாழன்- | வீண் கவலை, காரியசித்தி. | காலை 6 மணி |
| வெள்ளி- | மனத் தெளிவு, தெய்வ நம்பிக்கை. | பி.ப 1 மணி |
| சனி- | செலவுக் கஷ்டம், பணத்தடை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணக் கஷ்டம், மனக் கவலை. | காலை 7 மணி |
| திங்கள்- | துயர் அதிகம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | எடுத்த கருமம் தடை, வீண் முயற்சி. | காலை 7 மணி |
| புதன்- | அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 8 மணி |
| வியாழன்- | பணக் கஷ்டம் நீங்கும், கவலை குறையும். | பகல் 12 மணி |
| வெள்ளி- | மன மகிழ்ச்சி, துயர் நீங்கும். | காலை 6 மணி |
| சனி- | இனசன விரோதம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்





# கருவறையில் இருந்து வேகமாய் வந்தவர்கள்!

## மருத்துவ உலகை வியக்கவைத்த இரட்டையர்!!

எம்மா மற்றும் அமி ஆகிய இரட்டைக் குழந்தைகள் 110 நாட்கள் முன்னதாகவே பிறந்து விட்டன. 10 மாதங்கள்வரை தாயின் வயிற்றில் தங்கி வளர வேண்டிய இந்தச் சகோதரிகள் ஆறு மாதங்கள் மட்டுமே கருப்பையிலிருந்துவிட்டு அவசர அவசரமாக வெளியே வந்து குதித்து விட்டன.

இந்த இரட்டைச் சகோதரிகள் சிலமணி நேரம் மட்டுமே உயிர் வாழலாம் என்று மருத்துவர்கள் போட்ட கணக்கினைப் பொய்யாக்கி விட்டு, கடந்த 17 வாரங்கள் மருத்துவமனையில் இருந்து இப்பொழுது சுகமாக வீடு வந்து பெற்றார் ஜேன்-பிரெயின் தம்பதியினரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளனர்.


இங்கிலாந்தில் டர்ஹாம் நகரில் 1991ம் ஆண்டு ஜுலை 15ல் பிறந்த ஆறன்-லௌறா என்ற இரட்டையர்கள் உரிய காலத்துக்கு 107 நாட்கள் முன்னதாகவே பிறந்து கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்தவர்கள். ஆனால் எம்மா- அமி இரட்டையர்கள் அவர்களைவிட 3 நாட்கள் முன்னதாகப் பிறந்து சாதனை படைத்துவிட்டனர்.



ஸ்கொத்லாந்து-கிளாஸ்கோ நகரைச் சேர்ந்த ஜேன் என்ற 27 வயதுடைய பெண் ஏற்கனவே கருவுற்று, மூன்று மாதங்களில் கரு கலைந்து விட்டது. பின்னர் கருவுற்று, தீவிர பரிசோதனைகளின்போது இரட்டைக் குழந்தைகள் என்று தெரிந்ததும் ஜேனும் கணவர் பிரெயினும் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் உரிய காலத்துக்கு முன்னதாகவே ஏற்பட்ட பிரசவ வேதனையும் தொடர்ந்து குறைப் பிரசவமும் தம்பதியினரை சோகத்தில் ஆழ்த்தின.

இரு குழந்தைகளும் பிறக்கும்போது எம்மா ஒரு இறாத்தலும் 14 அவுன்சும்; அமி ஒரு இறாத்தல் 7 அவுன்ஸ் மட்டுமே எடை கொண்டவைகளாக இருந்தனர். இவை ஆக 6 அங்குல நீளமுடையனவாக இருந்தன. கைகள் தபால் தலை-முத்திரையின் அளவிலேயே இருந்தன. பிறந்து சில மணி நேரமாகியும் இரு குழந்தைகளிடமிருந்து எதுவித சப்தமும் வெளிவரவேயில்லை. உடனடியாக இக்குழந்தைகளை கரு முதிர்ச்சிக் கருவியில் வைத்தனர். பிறந்து இரண்டு மணி நேரத்தின் பின்னர் தான் சக்கர நாற்காலியில் வைத்து, தாய் ஜேன் குழந்தைகள் வைக்கப்பட்டிருந்த அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு குழந்தைகளைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார்.

இரண்டு வாரங்களின் பின்னர் இக்குழந்தைகளுக்கு இருதயம் திறந்து சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் போல் இப்பொழுது எடையும் கூடி வளர்ச்சியும் கண்டு குழந்தைகள் முன்னேற்றம் கண்டு வருகின்றன. இவர்கள் வாரத்துக்கு 4 அவுன்ஸ் வீதம் துரித வளர்ச்சி பெறுகின்றனர்.



# வெள்ளம் வரும் முன்னர் அணைகட்ட வேண்டும்
# புற்றுநோய் வருமுன்னர் அதை தடுக்க வேண்டும்

## அவசியம் அறிந்துகொள்ள வேண்டிய தகவல்கள்!

அமெரிக்காவில் புற்றுநோய் தடுப்புச் சங்கம் பல உபயோகமான பணிகளை மேற்கொண்டு வருகிறது. நாடளாவிய நிலையில் இயங்கும் இச்சங்கம், புற்று நோய் வராமல் எச்சரிக்கையாகவிருத்தல், ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிதல், அவ்வாறு அறிகுறிகள் தென்பட்டால் முளையிலேயே நோய் வித்தைக் கிள்ளி எறிதல் ஆகியவற்றுக்கான ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

நகரங்களிலும் முக்கியமான கிராமங்களிலும் தொலைபேசி இணைப்புகள் மூலம் தொடர்பு கொண்டு புற்று நோய் பற்றிய சந்தேகங்களைத் தெரிந்து கொள்வதற்கான வசதிகளும் பரவலாகச் செய்யப்பட்டுள்ளன.

தொலைபேசி மூலம் வழமையாகக் கேட்கப்படும் பொதுவான வினாக்கள் சிலவற்றை அச்சங்கம் ஒரு பிரசுரமாக வெளியிட்டிருக்கிறது. அதில் காணப்படும் சில வினா- விடைகளை நம் வாசகர்களும் தெரிந்து கொள்ளலாம் என்பதற்காக தந்துள்ளோம்.

கே: ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக ஏற்படும் 5 வகையான புற்று நோய்கள் என்னென்ன என்று கூறமுடியுமா?

ப: பெண்களுக்கு பெரும்பாலும் மார்பு, கருப்பை, கருப்பைக் குழாய், பெருங்குடல், மலவாயில், நுரையீரல் ஆகிய இடங்களில் புற்று நோய் தோன்றுகிறது. ஆண்களுக்கு மார்பகத்திலும் கருப்பை, கருப்பையுடன் இணைந்த குழாய் ஆகியவற்றில் பெரும்பாலும் வருவதில்லை. பெண் களுக்குக் குறிப்பிட்டுள்ள ஏனைய இடங்களில் புற்று நோய் வரலாம். அத்துடன் பீஜம் மற்றும் அதனுடனிணைந்த சுரப்பிகளிலும் குழாய்களிலும் புற்றுநோய் தோன்றலாம்.

கே: மெமோகிராம் எனப்படும் புற்றுநோய்க்கான பரிசோதனையும் மலப் பரிசோதனையும் எப்போது செய்து கொள்ள வேண்டும்?

ப: பெண்கள் 40-49 வயதுக்குள் இரு வருடங்களுக்கொரு தடவையும் 50 வயதுக்குமேல், வருடத்துக்கு ஒரு தடவையேனும் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். 50 வயதுக்குப் பின்னர் இரத்தப் பரிசோதனையும் செய்து கொள்வதை அ.பு.நோ. தடுப்புச் சங்கம் சிபார்சு செய்கிறது. நோய்க்கான அறிகுறி தென்பட்டால் மட்டுமல்ல, சாதாரணமாகவே பரிசோதனைகள் செய்வது நல்லதெனக் கூறப்படுகிறது.




கே: வேதியியல் சேர்மத்தைக் கொண்டு நோயினைக் குணப்படுத்தும் முறையினை ஆண்களுக்கு ஏற்படும் பீஜப் புற்று நோய்க்கு பயன்படுத்த முடியுமா?

ப: நிச்சயமாக இம்முறை நல்ல பலன் அளிக்கும். பொதுவாக விதை மற்றும் விந்துக்குழாய் புற்று நோய்க்கு இதே சிகிச்சை முறையே சிறந்ததெனக் காணப்பட்டுள்ளது.

கே: புற்றுநோய் ஒரு தொற்றுநோயா?

ப: அல்லவே அல்ல! இது ஒரு தொற்று நோய் என்பதற்கு விஞ்ஞான பூர்வமான சான்று இதுவரை இல்லை.

கே: மலக்குடல் அல்லது மல வாயிலில் ஏற்படும் புற்று நோய்க்கு அறுவை சிகிச்சை மூலம் செயற்கை குதம் பொருத்துதல் நன்மை பயக்குமா?

ப: வேண்டியதில்லை. ஆசன வாயிலில் அல்லது உட்புறத்தில் பாதிக்கப்பட்ட பகுதியை அறுவை சிகிச்சை மூலம் நீக்கிவிட்டால் செயற்கையாக எதையும் பொருத்தாமல் இரு பகுதிகளையும் இணைக்கும் நவீன முறை நடைமுறையிலுள்ளது. ஏறத்தாழ 15 சதவிகிதமான சத்திர சிகிச்சைகளுக்குத்தான் செயற்கைப் பொருத்து தேவைப்படுகிறது.

கே: பெருங் குடலோடு தொடர்பான புற்று நோய்க்கான அறிகுறிகள் என்ன?

ப: வயிற்றோட்டம், மலச்சிக்கல், மலம் கழியும் போது இரத்தம் வருதல், மலம் வெளியேறுவதில் சிரமம் ஏற்படுதல், மலவாயில் சுருங்கி காணப்படுதல், வயிற்றில் வாயு சம்பந்தமான வலி தோன்றுதல் ஆகிய அறிகுறிகளையும் பெருங்குடல் புற்று நோய்க்குரியனவாகக் கொள்ளலாம். எத்தனை தடவை முயன்றாலும் மலம் முழுமையாக வெளியேறவில்லை என்ற உணர்வு ஏற்படுவதும் ஒரு காரணியாகும்.

கே: வைரஸ் கிருமிகளுக்கு புற்று நோயைத் தோற்றுவிக்கும் சாத்தியமுண்டா?

ப: ஆமாம்! வைரசுகளில் புற்று நோயினைத் தோற்றுவிக்கும் தன்மையுடையவையும் உள்ளன என்று சந்தேகமுண்டு. இவற்றை விஞ்ஞானிகள் இனம் கண்டு கொண்டால் புற்று நோயினைத் தடுப்பதற்கான ஊசி மருந்தினைக் கண்டு பிடித்து விடலாம்.

கே: புற்று நோய் வராமல் தடுப்பதற்கான உணவு முறைகள் இருப்பின் அவற்றை தெரிவித்தால் நலம்.

ப: பொதுவாக பழவகைகள், காய்கறி கீரைவகைகளை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். நார்ச்சத்து பொதிந்த தாவர உணவுகளால் பலனுண்டு. கொழுப்பு உணவுகளை முற்றாகத் தவிர்த்தல் வேண்டும். உப்பிட்ட-புகையூட்டப்பட்ட பதார்த்தங்களை நீக்கி விடலாம். மதுபானத்தை கூடுமானவரை எட்டத்தில் வைத்திருக்க வேண்டும். அல்லது குறைத்துக்கொள்ள வேண்டும். ■

## சிந்திக்கலாம் இங்கே




முச்சடக்கி இறங்கினால்தான் முத்து எடுத்துவர முடிகிறது.

முயற்சி இருந்தால்தான் வெற்றிச் சிகரங்களில் கால் பதிக்க முடிகிறது.

எடுத்ததுக்கெல்லாம் விதியை நொந்து கொள்வது வாழ்க்கையின் முன்னேற்ற வழியை தவறவிட்டுக் கொண்டிருப்பவர்களின் முணு முணுப்பு.

ஆண்டவனை நம்புவதும், நம்பாமலிருப்பதும் அவரவரின் தனிப்பட்ட நம்பிக்கையைப் பொறுத்தது.

ஆனால், அவனே அனைத்தையும் கவனித்துக் கொள்வான் என்று பாரத்தைப் போட்டுவிட்டு படுத்துத் தூங்கிக்கொண்டிருப்பது உன் வாழ்க்கையை கெடுத்து குட்டிச் சுவராக்கிவிடுகிறது.

கீதையிலே கண்ணன்கூட பாரத்தை என்மீது போட்டுவிட்டு நீ தேர்தட்டில் படுத்துக்கொள் என்று பார்த்தனிடம் சொல்லவில்லையே.

செயல்படு. போர் தொடு. எதிரே நிற்பது எவராக இருந்தாலும் சரி, எது நியாயம் என்று படுகிறதோ அதற்காக போரிடு என்ற கருத்துத்தானே கண்ணன் மூலமும் கற்றுத் தரப்பட்டது.

செயல் மறந்தவனை எந்த தெய்வமும் தேடிவந்து காப்பாற்றாது.

முயற்சி இல்லாதவனை எந்த தேவதையும் வந்து சொர்க்கத்துக்கு தூக்கிச் செல்லாது.

முயற்சி என்பது உடனே பலித்துவிட வேண்டும் என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

என்ன செய்தும் எதுவுமே முடியவில்லையே என்று மனம் முறிந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால் வாலிப வயதிலேயே சிலர் மனதில் முதுமை கண்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிடுகிறார்கள்.

முயற்சியில் நம்பிக்கையை இழந்துவிட்டு மூலைக்குள் ஒதுங்கி நின்று முனகத் தொடங்கிவிடுகிறார்கள்.

பிறக்கும்போது ஆடையின்றித்தானே அனைவரும் பூமிக்கு வந்து அறிமுகமானோம்.

பின்னர் எப்படி ஆடை வந்தது? நிர்வாணத்திற்கு போர்வையாய் ஆடையை கண்டுபிடித்ததும் ஒரு முயற்சிதானே.

நிர்வாணமாகவே இருந்துவிட்டுப் போவோமே என்று நினைத்திருந்தால் ஆடை வந்து ஜாடை காட்டியிருக்காதே.

எந்த முயற்சியும் வெல்வதும், தோற்பதும் உள்ளத்தின் உறுதியில்தான் தங்கியிருக்கிறது.

முயற்சியில் இறங்குவதற்கு முன்னர் மூளைக்கும் வேலை கொடுக்க வேண்டியிருக்கிறது.

என்னால் இது முடியுமா? முடியும் என்றால் எங்கிருந்து எப்படித் தொடங்குவது! நான் மட்டும் போதுமா? இல்லை நட்புக்கரங்களும் துணைக்குத் தேவையா? தேவை என்றால் துணைக்கு வருபவர்களை ஆராய்ந்து அறிந்து தெரிவு செய்யும் தேவை முக்கியம்.

துணைக்கு வருபவன் உன் தோளுக்கு சுமையாகி விடவும் கூடாது. உன் காலுக்கு தடம்போட்டு, தன் துரோக வாளால் உன்னைத் துளைப்பவனாகவும் இருக்கக் கூடாது.

வழியை தெரிவு செய்வது, திட்டம் வகுப்பது, தேவையானவற்றை தீர்மானித்துக்கொள்வது, எடுத்த காரியத்தில் கருத்தும், கண்ணுமாக இருப்பது என்பதெல்லாம் முயற்சி என்பதில் அடக்கம் என்பதை மறந்துவிடக்கூடாது.

எந்த முயற்சியிலும் தடைகள் தலை காட்டும். பத்துதலை அசுரன் போல பயமுறுத்தும். பணிந்து விட்டீர்கள் என்றால் பள்ளத்தில் தூக்கி வீசிவிடும்.

அது மட்டுமா? உயர்ந்த பின்னர் நாலுபேர் உற்சாகமாக கைதட்டுவார்கள். உங்களால் ஏதாவது பயன் இருக்குமானால் உதவுவது போல வலியவந்து நாற்பது பேர் வளைந்து நிற்பார்கள். நானூறு பேர் வாழ்த்த வருவார்கள்.

உயர முயலும் போது மட்டும் துணைக்கு வருபவர்கள் தொகை குறைவாகத்தான் இருக்கும். அவர்கள் தொகையில் குறைவான போதும் மனதில் நிறைவான எண்ணம் கொண்டவர்கள் என்பதை மனதில் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள். பின்னர் மறந்து விடாமல் இருக்க உதவும்.

ஒரு நூறு பேரால் முடியாத காரியத்தை உறுதிவாய்ந்த ஒரு நாலுபேரால் நன்கு சாதித்துக் காட்ட முடியும்.

நூறு கோட்டான்கள் கூவினாலும் பொழுது விடியாது. ஒரு சேவல் கூவினால்போதும் பொழுது விடிகிறது.

அதனால்தான் சொல்லுவார்கள்; நல்ல நண்பர்கள் உள்ளவர்கள் நலிந்து போக மாட்டார்கள் என்று. தற்காலத்தில் நல்ல நண்பர்கள் உள்ளவர்கள் பாக்கியவான்கள்.

அந்தளவுக்கு போலித்தனம் மலிந்து விட்டது. காலத்தைப் புரிந்து கொள்வது கவலைபட நேராமல் இருக்க உதவும்.

ஆகவே-ஆராய்ந்து அறிந்து காரியத்தில் இறங்கினால்-புயல்-நச்சுச் சுழல் என்று எதிரே எதுவரினும் எதிர் நீச்சலடித்து வெற்றிக் கரை சேர முடியும்.

"தொடர்ந்து முன்னேறு தோல்வி கிடையாது."

தளர்ந்து போனோம் என்றால் மீட்சி இருக்காது.

அடுத்துவரும் முரசுகளில் பல விடயங்களை ஆராயலாம். சிலரது அனுபவங்களை நோக்கலாம். இன்று - இது ஆரம்பம் மட்டும்தான்.

(தொடர்ந்து சிந்திக்கலாம்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கொலை விழும் நேரம்

எழுதுவது ரசிகன்



“நெஞ்சிருந்தும்-நினைவிருந்தும்
வார்த்தை இல்லையே-இந்த
நிலைமை சொல்ல உலகில் எந்த
மொழியும் இல்லையே!
தஞ்சமென்று வந்தபின்னும்
கருணை இல்லையே-எதைத்
தருவதென்றும் பெறுவதென்றும்
புரியவில்லையே!”
கவியரசு

சித்ராவின் உடல் பிரேத பரிசோதனை முடிந்து ஒப்படைக்கப்பட்டது.

அழகான, அற்புதமான உடலை பிரிசோதனைக்காக வெட்டிக் கிழித்து சேதம் பண்ணியிருந்தார்கள்.

உடலை பெற்றுக்கொண்டு நெஞ்சில் அறைந்து ஒப்பாரி வைத்தாள் அம்மா. யாரோ சில உறவினர்கள் உதவிக்கு வந்திருந்தார்கள்.

நடந்துபோனால் நாலு பேர் திரும்பி நின்று பார்க்கும் அழகுக்கு சொந்தக்காரியாக இருந்தவளை இப்போது நாலுபேர் சுமந்து போனார்கள்.

தனது அலுவலகத்தில் இடது கரத்தின் சின்ன விரல் நகம் கடித்தபடி பிரேத பரிசோதனை ரிப்போர்ட்டை விழிகளால் வாங்கி மூளைக்கு அனுப்பிக்கொண்டிருந்தார் டி.ஐ.ஜி.டென்சில்.

சித்ராவின் மரணம் தற்கொலையல்ல. நூறுவீதம் உறுதியான கொலை என்று அடித்துச் சொல்லியது ரிப்போர்ட்.

பூபால் அன்ட் பிரதர்ஸ் தொடர்புடையவர்கள் தொடர்ந்து கொலையாகிறார்கள்.

முகம் தெரியாத ஒரு கொலையாளி பொலிசோடு கண்ணாம்பூச்சியாடிக் கொண்டிருக்கிறான்.

யார் அது? அவனா? அவளா? அல்லது ஒருவரா? இருவரா? ஒரு கோஷ்டியா?

முதலில் இதுவரை விசாரணைகளின் சந்தேகப்பட்டியலில் உள்ள பெயர்களை வரிசைப்படுத்த வேண்டும்.

1. போனில் அடிக்கடி தகவல் சொல்லும் பெண்குரல்.

2. பிரியா பசுபதி. பத்திரிகை நிருபர்.

3. மனோகர். அவனும் இப்போது கொலையாகிவிட்டான். எனவே அவன் பெயரை பட்டியலில் இருந்து தூக்கியெறிந்து விடலாம்.

4. சூர்யா- அவளது டயறி ஏன் சித்ரா வீட்டுக்குப் போனது? பலமுள்ள பெண். சண்டையிடும் பயிற்சி கற்றவள். வேகமுள்ளவள். பேசியதில் இருந்து விவேகமும் கொண்டவள் என்பதும் புரிகிறது. மேலும் அந்த ரோஜாப்பூ. அதனால் பட்டியலில் உள்ளவர்களிடையே பத்திரமாக கவனிக்கப்பட வேண்டியவள்.

5. பூபால் அன்ட் பிரதர்ஸ்ஸில் வேலை செய்பவர்கள்.

6. பிரசாத்-பூபால் அன்ட் பிரதர்ஸ் இயக்குநர்களில் ஒருவர். ஹரிகரன் அவரது சகோதரன். சகோதரனை கொல்லும் அளவுக்கு விரோதம் உண்டா? சரி, இருக்கலாம் என்று வைத்துக்கொண்டால் தனது மகள் நிரோசாவை அவர் ஏன் கொல்ல வேண்டும்?

“எல்லோரையும் சந்தேகி. எல்லாவற்றையும் சந்தேகி.” உளவறிதலில், தீர்க்கமான வழக்கு விசாரணைகளில் யாரையும் அலட்சியம் செய்துவிடக்கூடாது. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ தெரியாது. கவனம் முக்கியம். கண்காணிப்பு அவசியம். பொலிஸ் தன் நிழலைக்கூட நம்பக்கூடாது.

டி.ஐ.ஜி.டென்சில் அனைத்தும் யோசித்து, பட்டியல் போட்டு முடித்து, எங்கிருந்து ஆரம்பிக்கலாம் என்று யோசிக்கத் தொடங்க,

தொலைபேசி அழைத்தது.

மறுமுனையில் பரிச்சயமான குரல் கேட்டு, சந்தோசமாகி,

“துரோகி நீயா?”

என்றார்.

“நானேதான்,”

என்றார் மறுமுனையில் குலாம்ஷா. முன்பிருந்த கம்பீரம் குரலில் இல்லாமல் போயிருந்ததை கவனித்து, ரம்யாவின் சோகம் இன்னும் மறக்கவில்லை என்று ஊகித்து,

“குற்றவாளிகளை கூடப் பிடித்துவிடலாம். குலாம்ஷாவைப் பிடிக்க முடியாது. என்னை பார்க்கவே கூடாது என்று விரதமா நீ. உடனே பார்க்க வேண்டும். அடுத்த அரைமணி நேரத்தில் எனக்கு முன் இருக்கிறாய். நோ.நோ. மறு பேச்சுக்கே இடமில்லை.”

“வருகிறேன். ஒரு நிபந்தனை!”



“தொல்லையடா நீ. சொல்லு.”

“உடனடியாக வேலையில் சேரும் உத்தேசம் சுத்தமாகக் கிடையாது. வற்புறுத்தல் கூடாது.”

சற்று யோசித்து,

“ஓ.கே...வா.”

சொல்லிவிட்டு, ரிசீவர் சாத்தி நிமிர, கதவு தட்டி உள்ளே வந்து சல்யூட் வழங்கி,

“உங்களை பார்க்கவேண்டும் என்று ஒரு பெண் வந்திருக்கிறாள்,”

என்றார் உதவியாளர்.அவளிடம் வாங்கி வந்த விசிட்டிங் கார்ட் நீட்டினார்.

வாங்கிப் பார்த்தார். சூர்யா- என்று அழகாக அச்சடிக்கப்பட்டிருந்த எழுத்துக்களோடு கீழே, ‘அமைப்பாளர்’, ‘உயரும் பெண்கள் இயக்கம்’ என்று பொறிக்கப் பட்டிருந்தது.

விசிட்டிங் காட்டை மேசையின் ஓரத்தில் வைத்துக்கொண்டு “வரச் சொல்லுங்கள்” என்றார்.

உதவியாளர் செல்ல, மேசையின் மீது அதுவரை இருந்த அந்த டயரியை எடுத்து மேசை லாச்சியில் பத்திரப்படுத்திக்கொண்டார்.

கதவு தட்டப்பட “யெஸ் கம் இன்.” என்று நிமிர்ந்தவர்,

கதவு திறந்து உள்ளே வந்தவளை பார்த்து. அதிர்ந்து போனார்.

வந்தது சூர்யா அல்ல.

■

வர்ண விளக்குகள் ஒளி சிந்த அவன் பாடிக்கொண்டிருந்தான்.

ஐந்து நட்சத்திர விடுதியின் நடன அரங்கம் களை கட்டியிருந்தது.

மெல்ல மெல்ல சூடேற்றி சூழலை மறக்கடித்து சகலமும் துறந்து தனக்குள் ஈடுபடச் சொல்லும் இசையின் பின்னணியில் அவன் பாடிக்கொண்டிருந்தான்.

மேலைத்தேய இசையில் நன்கு பயிற்சி இருப்பது தெரிந்தது.

நடன அரங்கம் முழுவதும் சிவப்பு போர்வை அணிந்த மேசைகள். மேசைகள் மேலே உயரமான கிளாசுகளில் சர்வர்கள் உயர்ரக மதுபானங்களை நிரப்பிக் கொண்டிருக்க, மேசைகளின் எதிரே இருந்தவர்கள் அநேகமாக ஜோடிகளாக இருந்தார்கள்.

உள்ளே போதை இறங்க, வெளியே இருந்து வரும் இசை செவிக்குள் புகுந்து கிறங்கடித்துக் கொண்டிருக்க சில ஜோடிகள் பக்கத்து மேசையில் இருப்பவர்களைப் பற்றி கவலையே படாமல் இதழ் கிண்ணங்களில் இருப்பதை தமக்குள் பரிமாறிக்கொண்டிருக்க, அவன் பாடிக்கொண்டேயிருந்தான்.

இலயித்து, இரசித்து பாடுவது போல் இருந்தது.

“ஓ...என் அன்பே!
எல்லாம் நன்றாக இருந்தது
நீ என் அருகில் இருந்தபோது.
இப்போது
எதுவுமே நன்றாக இல்லை.
நீ இல்லாத போது!
இதயத்தில்
முள்ளை வைத்து
தைத்து விட்டதுபோல்
வலிக்கிறது.
இரத்தம் வடிகிறது.
உன் இதழ்களால்
துடைத்துவிட மாட்டாயா?
வருவாயா? நீ! வருவாயா?”

ஆங்கிலத்தில் அவன் பாடியதின் அர்த்தம் புரிந்து, நாற்காலி தள்ளி ஒரு வெள்ளைக்காரப் பெண் எழுந்தாள்.

“உன் இதயத்தை தா நண்பனே. என் இதழ்களை கைக்குட்டையாக்கி உன் காயத்தை ஆறச் செய்கிறேன்.”

என்று உரத்துக் கூவினாள். குரல் குழறியது. நன்றாக குடித்திருப்பாள் என்று இரத்தமாய் சிவந்திருந்த கண்கள் சொல்லிக் கொண்டிருந்தன.

அவன் அலட்சியம் செய்தான். அவளுக்கு கோபம் வந்திருக்க வேண்டும். ஏதோ சொல்லி கூச்சலிட்டாள். அவளோடு வந்திருந்தவன் கையைப் பிடித்து இழுத்து அவளை நாற்காலியில் அமரச் செய்தான்.

அவன் பாடிக்கொண்டே மேசையில் இருந்தவர்களை விழிகளால் தழுவி ஆராய்ந்து கொண்டிருந்தான்.

அரங்கின் வலது கோடியில் இருந்த மேசையின் முன்னால் தனது காதலனுடன் அவள் சிரித்துக்கொண்டிருந்தாள். அவள்மீதே அவன் விழிகள் நிலைத்து நின்றன. அவன் மேடையில் இருந்து பார்ப்பதை அவள் அறியவில்லை. அவன் பாடலிலும் கவனம் இல்லை.

“நிம்மி இன்று நீ என்றுமில்லாத அழகாய் தெரிகிறாய்!”

என்றான் அவள் அருகில் இருந்தவன்; அவளது கழுத்துக்குக் கீழே முறைத்துப் பார்த்தபடி.

நிம்மிக்கு பெருமையாக இருந்தது. அவனை கிறங்கவைப்பதற்காகவே இறுக்கமான ஜீன்சும், உடலை ஒட்டியது போன்ற இறுக்கமான ரீசேட்டும் அணிந்து வந்திருந்தாள்.

இப்போது நிம்மி யார் என்று நீங்கள் யோசிப்பீர்கள்.

நிம்மி என்பது நிர்மலாவின் நாகரிகமான பெயர் சுருக்கம்.

நிர்மலா என்பது பூபால் அன்ட் பிரதர்ஸ் இயக்குநகர்களில் ஒருவரான, ஒருநாள் திடீரென்று கொலையாகிப் போன ஹரிகரன் ஆசையோடு வைத்த பெயர். அதாவது நிர்மலா ஹரிகரனின் செல்ல மகள்.

நிர்மலாவுக்கு பெற்றோர் இட்ட பெயர் பிடிக்கவில்லை. பிடிக்காதது பெயர் மட்டுமல்ல, பெற்றோரையே பிடிக்கவில்லை.

நிர்மலாவுக்கு ஒரு மாதத்திற்குமேல் எந்தவொரு காதலனையும் பிடிப்பதில்லை.

இப்போது அருகில் இருப்பவன் கேசவன். கேசவன் உயரமாய் இருந்தான். சுருள் சுருளாக முடி வளர்த்திருந்தான். நிம்மியின் செலவில் குடித்துக்கொண்டிருந்தான். நிம்மியின் அழகை அவள் செலவில் ஏறிய போதையில் இரசித்துக்கொண்டிருந்தான்.

இசை இப்போது உச்சத்தை தொட்டுக் கொண்டிருந்தது. அரங்கில் இருந்த சிலர் ஜோடி சேர்ந்து தடுமாறி ஆடிக் கொண்டிருந்தனர்.

அவன் பாடிக்கொண்டே இப்போதும் நிம்மியை பார்த்துக்கொ[illegible]

இசை உச்சத்தில் [illegible]ரென்று அடங்கிப்போக அரங்கம் [illegible]கியது

அவன் மேடையை விட்டு விலகி பின்புறமாய் சென்றான். கடைசியாக ஒருமுறை மேடையில் நின்று திரும்பிப் பார்த்தான். நிம்மி கேசவனை முத்தமிட்டுக் கொண்டிருந்தாள்.

“வினோ நாளையும் வருவாய்தானே?” என்று கேட்டான் இசைக்குழுவில் ‘சித்தார்’ வாசித்துக்கொண்டிருந்தவன்.

“பார்க்கலாம். உறுதியாக சொல்ல முடியாது” என்றான், நிம்மியும் கேசவனும் முத்தமிட்டுவிட்டு, சிரித்துக்கொண்டு எழுந்து கொள்வதை கவனித்தபடி.

■

ஹரிகரனின் மனைவி சுவர் கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

இரவு 11.35. நிர்மலாவின் போக்கு சரியில்லை.

தந்தை இறந்த சோகம்கூட இல்லை. ஊர் சுற்றுகிறாள். எல்லாம் அவர் கொடுத்த செல்லம்.

இருப்புக் கொள்ளவில்லை. ஏன் இப்படி பொறுப்பில்லாமல் நடந்துகொள்கிறாள்? மனது தவித்து கேள்வி வந்தது.

வெளியே மோட்டார் சைக்கிள் வந்து ஓய்ந்து நிற்கும் சப்தம் கேட்டது.

விரைந்துபோய் ஜன்னல் திரை விலக்கி பார்க்க, நிம்மி கேற் திறந்தபடி, மோட்டார் சைக்கிளில் இருந்தவனுக்கு ஏதோ சொல்ல அவன் சிரித்துக்கொண்டிருப்பது தெரிந்தது.

திருமதி ஹரிகரன் ஜன்னல்விட்டு உள்ளே வந்து சோபாவில் அமர்ந்து கொண்டார்.

தான் கண்டதுபோல் காட்டிக்கொண்டால் நிம்மிக்கு இன்னும் துணிச்சல் வரும். ஏன் என்று கேட்டால், அப்படித்தான் செய்வேன் என்று முகம் எதிரே சொல்லிவிடுவாள். தெரியாதது போல் இருப்பது மரியாதை. யோசிக்க வேண்டும். நிதானமாக யோசித்து இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும். திருமதி ஹரிகரன் தீர்மானித்த நொடியில்,

வெளியே இருந்து நிம்மி,


பயத்தில் ‘வீல்’ என்று கதறுவது காதில் விழுந்தது.

சோபாவிட்டு எழுந்து வாசல் கதவு நோக்கி ஓட,

திடீரென்று வீட்டின் மின்சாரம் உயிர்விட்டது. இருள் சூழ்ந்தது.

இப்போது மீண்டும் நிம்மியின் அலறல் காதில் விழுந்தது.

■



## அங்கம் 11

கேசவனுக்கு உற்சாக மாக இருந்தது. காற்று முகத்தில் மோத உள்ளேயிருந்த போதை கிறுகிறுக்க வைத்தது.

வேகத்தை அதிகப்படுத்தினான். நிம்மியை முழுதாகப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டான். நிம்மியிடம் பெற்ற முத்தத்தை நினைத்துக்கொண்டு தன் உதடுகளை ஈரப்படுத்தியபடி வேகத்தை மேலும் உயர்த்திக்கொண்டான்.

எதிரே ஒரு கார் வந்து கொண்டிருந்தது.

கேசவனையே நோக்கி வருவதுபோல் தெரிந்தது.

மிக நெருக்கத்தில் கார் வந்தபோது நிமிர்ந்து பார்த்து உசாராகி மோட்டார் சைக்கிளின் வேகத்தை குறைக்க நினைத்தான். காலால் பிறேக்கை அழுத்தினான்.

‘பிறேக்’ அழுத்தி நின்ற மோட்டார் சைக்கிளை நோக்கி குறிவைத்து கார் மோதிய நொடியில்,

கேசவன் மோட்டார் சைக்கிளில் இருந்து காற்றில் எழுவதுபோல உயர்ந்து தரையில் கால்பதித்து துள்ளி நின்றான்.

காரின் குறுக்கே முன்னால் வந்து நின்று, கேசவன் சிரித்தான்.

கேசவனின் இடது கரத்தில் இருந்து எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது பிஸ்டல்.

பிஸ்டலை ஆட்டி கீழே இறங்குமாறு காருக்குள் இருந்தவனுக்கு சைகை காட்டினான்.

உள்ளே ஒரு ஆள் மட்டுமே இருப்பது மாதிரித் தெரிந்தது.

காரின் கதவு மெல்ல திறந்தது.

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



**பெயர்:** நடராஜா கீதாகரன்
**வயது:** 18
**முகவரி:** 24/4, பீரிஸ் பிளேஸ், குவாரி ரோட், தெஹிவளை.
**பொழுதுபோக்கு:** ரி.வி. பார்த்தல், பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல்.



**பெயர்:** ஏ.சி.எம். கலாப்
**வயது:** 18
**முகவரி:** 222, வட்டதெனிய, கம்பளை.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், நண்பர் தொடர்பு, விளையாட்டு.



**பெயர்:** எஸ். ஸ்டெலாராணி
**வயது:** 25
**முகவரி:** C/3/6, ஸ்டேஸ் வீதி, கொழும்பு-14.
**பொழுதுபோக்கு:** வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



**பெயர்:** எம்.ஏ.மெஹ்றுன் நிசா
**வயது:** 18
**முகவரி:** 201/ஏ, ஹிஜ்ரா மாவத்தை, மல்லவபிட்டி, குருநாகல்.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை, கதைப்புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.



**பெயர்:** ஆர். விமலன்
**முகவரி:** SAUDI 06ER (LTD) P.C.A. PROJECT, P.O.BOX-17061 JEDDAH-21484 K.S.A.
**பொழுதுபோக்கு:** கிரிக்கெட், கரம் விளையாடுதல், கதைப்புத்தகம் வாசித்தல்.



**பெயர்:** எம்.ஏ.எம். பைஸால்
**வயது:** 28
**முகவரி:** DALLAH MADINAH HOTEL P.O.BOX: 1475, AL-MADINA. K.S.A.
**பொழுதுபோக்கு:** ரி.வி. பார்த்தல், பத்திரிகை வாசித்தல், முத்திரை, வெளிநாட்டு நாணயம் சேகரித்தல்.

**பெயர்:** வி. ரவி
**வயது:** 24
**முகவரி:** கடற்கரை பங்களா, அலஸ்தோட்டம், உப்புவெளி, திருகோணமலை.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# ஒரு பச்சோந்தியும் உத்தமனும்

ஆக்கம். ஹரீரா அனஸ்

**ஒருநாள் திடீரென்று இடையில் மயக்கம் தெளிய அவள் துடித்துப் பதைத்துப் பார்த்தாள். தோலுரிக்கப்பட்ட மென்பட்டாய் அவள். அவள்மீது படர்ந்த விஷப்பாம்பாய் தன்னை வளர்க்க வந்த சித்தப்பா. துடித்துக் கதறி ஒவென்று பதறி மீண்டும் மீண்டும் அதையே நினைத்து அனைத்தையும் இழந்துவிட்ட தவிப்போடு தற்கொலைக்காய் தன்னைக் காவு கொடுக்க தேவிகா தயாராக.....**

அந்தக் கழுகு இந்தக் குயிலை ஏன் கொத்திக் குதறியது? இந்த ரோஜா மலரை கசக்கி அனுபவித்து சீரழித்தவன், அவளைக் காக்க வேண்டிப் பொறுப்பை எடுத்துக் கொண்ட ஒரு போக்கிரி. அவள் ஒரு அனாதை. அவளோடு சேர்த்து இன்னும் இரண்டு தங்கைகள். மூவருமே அழகுக் குவியல். அமைப்பான அந்த அழகுதான் மூத்தவளை இப்படி ஆக்கியது. தந்தை இறந்துபோக தாயும் வெளிநாடென்று ஆக அந்த மூன்று செல்வங்களையும் பாதுகாக்கும் பொறுப்பை அவன் எடுத்துக் கொண்டான்.

தேவிகா பூப்பெய்தி ஒருவருடம் கழிந்து போன பருவச்சிட்டு. அவளின் தேக நந்தவனத்தில் ஆயிரமாயிரம் மலர்வுப் பூக்கள். வளர்த்தவனுக்கே தீவளர்த்த கொடுமை. அவன் அவளை அந்தக் கணம் அணு அணுவாக உண்டு தீர்த்தான்.

அவளுக்கு இறைவன் கொடுத்த மயக்கமாகும் நோய். அடிக்கடி அவள் இதனால் அவஸ்த்தைப்படுவதுண்டு.

இந்த ஓநாய்க்கு இது ஒரு சாட்டு. அவளின் மயக்கம், இதற்கு மகிழ்விற்காய் ஆக்கப்பட்டதே மாதிரி.

ஒருநாள் திடீரென்று இடையில் மயக்கம் தெளிய அவள் துடித்துப் பதைத்துப் பார்த்தாள். தோலுரிக்கப்பட்ட மென்பட்டாய் அவள். அவள்மீது படர்ந்த விஷப்பாம்பாய் தன்னை வளர்க்க வந்த சித்தப்பா. துடித்துக் கதறி ஒவென்று பதறி மீண்டும் மீண்டும் அதையே நினைத்து அனைத்தையும் இழந்துவிட்ட தவிப்போடு தற்கொலைக்காய் தன்னைக் காவு கொடுக்கத் தயாராகி விட்டாள் தேவிகா. இன்னும் அவளைவிட்டு அந்தத் தொலைந்துபோன மயக்கம் அழிந்து போவதாய் இல்லை. அவனின் துணையை விட்டுவிட்டு ஓடி எங்காவது செத்து மாய்வது என்பதுதான் முடிவாகிவிட்டது. ஓவென்று கதறி அழுது தன் மனப்பாரத்தையெல்லாம் கொட்டித் தீர்க்க ஒரு துணையில்லை. அவள் எடுத்த முடிவை செயல்படுத்துவதற்காய்... தயாரானாள்.

கையில் விஷக் குப்பி. தன் கையாலாகாத தனத்தோடு வாழ்வை அழிப்பதுதான் முடிவாக எண்ணினாள்.

▫▫▫

காலம் தண்டவாளமாய் ஓடியது.

அவள் நாலறுந்த பட்டமானாள். தன்னை தற்கொலை செய்ய விடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் சாரங்களை எண்ணிப் பார்த்தாள். சாரங்கன் அவளுக்கு தூரத்து மாமா முறை. ஆனால் அவளிலும் அவன் மூன்று வயது மூத்தவன். அவளுக்கு வயது பதினெட்டு. அவனுக்கு இருபத்தொன்று.

காலம் என்பது சென்று, தனக்கொரு வாழ்க்கை என்று அமைத்துக்கொண்டு சந்தோஷமாய் குடும்பம், கணவன், குழந்தை என்று ஒரு அழகை அவளால் மனதினால் கூட எண்ணமுடியாத நிலமை. அவள் கற்பிழந்தவள். அவள் சீரழிக்கப்பட்டவள். அவளின் எண்ணம் துவண்டுபோனது. அவள் எதுவுமே அற்ற கருகிய சருகானாள். தனக்கென ஒரு தனித்துவம். தனக்கென ஒரு சிந்தனை. இவைகளைப் பற்றிக் கவலைப் படவே அவளுக்குத் தெரியவில்லை.

"தேவிகா..."

"என்ன மாமா..."

"உனக்கு எத்தினை தடவை இப்பிடி அசட்டுத்தனமா செஞ்சிடாதை எண்டு சொல்லியிருக்கிறன்.

"ஏனம்மா நீ இப்பிடியெல்லாம் அபத்தமான வேலை செய்யப்பார்க்கிறாய்? உனக்கென்ன தான் நடந்தது? ப்ளீஸ் என்னட்டைச் சொல்லு. நான் உனக்கு யார்? உன்டை சுக துக்கங்களிலை பங்கெடுக்க எனக்கும் உரிமையிருக்குத் தானேயம்மா?"

தனது மாமாவின்முன் தேவிகா ஒருமித்த மனத்தோடு அமர்ந்திருந்தாள். மனத்தின் அடியில் ஒரு பாறாங்கல் வைத்த பாரம். 'என் நிலமையை... அல்லது என் கேவலத்தை... அல்லது என் அவலத்தைச் சொல்லி அழ என் மாமாவிடமா.... அது ஆகுமா? அவர் என்னைப் புரிந்து கொள்வாரா?' சிந்தனை அவளை ஆக்கிரமித்து அலைக்கழித்தது.

"தேவிகா' அவன் அழைத்தபோது... அவள் நினைவு பெற்றாள். மனம் ஏதோ தடுமாறினாலும் கொஞ்சம் லேசாகுவதுபோல் இருந்தது.

சாரங்கன் அவளைத் தேற்றினான். "என்ன தேவி உனக்கு என்ன நடந்தது? உன்னை தற்கொலை அளவிற்குத் தூண்டியது ஏனம்மா...?"

"மாமா.... நான்... கற்பிழந்திட்டேன்..." வார்த்தைகளை கொழுவி கேவி அடைத்த குரல் கம்மி பேசமுடியாமல் திணறினாள்- தேவிகா.

ஆதியோடு அந்தமாய் அழுகை, விசும்பல், விம்மல், விரக்தி அத்தனையையும் தன் அன்பான மாமாவிடம் ஒப்படைத்தாள் அவள்.

"அடிப்பாவி...இவ்வளவையும் தாங்கிக் கொண்டா நீ இருக்கிறாய் என் செல்வமே....." என்று தன் அருமை மருமகளின் நிலையை அறிந்ததும் அவனால் ஓவென்று கதறி அழாமல் இருக்க முடியவில்லை.

"அவனை...அந்தக் கீழ்சாதி நாயைக் கண்ட துண்டமாய் வெட்டி" மனதில் கருவிக் கொண்டான் சாரங்கன்.

"தேவி என் செல்வமே! உனக்கு இனி நான் இருக்கிறன். நீ எதுக்குமே கவலைப் படாதை. உனக்குத் துணையா நானிருப்பன். உனக்கு என்ன கவலையெண்டாலும் என்னட்டைச் சொல்லு. ஆனால் தயவு செய்து தற்கொலை எண்ணத்தை மட்டும் கைவிடம்மா ப்ளீஸ். எப்படியும் உன்ரை மனம்போல ஒரு வாழ்க்கையை அமைச்சுத் தாறதுக்கு நான் முயற்சி செய்யுறன். அப்படி இல்லாட்டி உனக்காக நானிருக்கிறன். யாருமே உன்னைக் கட்டிக்கொள்ள முன் வராட்டி நானே உனக்கொரு வாழ்க்கையைத் தரத் தயாராய் இருக்கிறன். ஆனா நீ நான் சொல்றபடிதான் கேக்கவேணும் சரியே."

அன்றுதான் அவள் புதிதாய்ப் பிறந்தது போலவும் மனப்பாரம் இறங்கியதாயும் புத்துணர்வு பெற்றாள்.



"யாருமே உன்னைக் கட்டிக்கொள்ள முன்வராட்டி நானே உனக்கொரு வாழ்க்கையைத் தரத் தயாராய் இருக்கிறன்."

சாரங்கனின் வார்த்தைக் கோர்வை மீண்டும் மீண்டும் வினாடி வினாடியாய் அவளின் இதய நந்தவனத்தை வருடி வருடி மென் தென்றலாய் சுகம் தரலானது.

▫▫▫

வெளிநாட்டில் இருந்து தாய் வந்ததும் அவளுக்கு ஆறுதலாய் இருந்தது. வேறு ஒரு வீடு பார்த்து உடனடியாகவே மாறியும் இருந்து விட்டார்கள்.

மயக்கத்திற்கு மருந்து எடுக்க வேண்டுமா? மாமா.

நிம்மதியாய் இரண்டுவாய் சாப்பிட வேண்டுமா - மாமா.

எங்காவது காலாற நடந்துவர வேண்டுமா? - மாமா.

எல்லாவற்றிற்கும் அவளோடு சாரங்கன் போகத்தான் வேண்டும். இல்லாவிட்டால் அடம்பிடித்து அழுவாள். அழுதபின் மயங்கி விடுவாள். இந்த இக்கட்டில் சாரங்கன் அவளுக்காகவே வாழப் பழகிக்கொண்டான். தேவிகாவின் இன்பமுமே அவனின் இன்பம். அவள் துயருறுவது அவனுக்கு வேதனை. மாமா என்பது கொஞ்சம் கொஞ்சமாய் மாறி சாரங்கன் என்பது அவளுக்கு தின உச்சாடன ஸ்லோகமாயிற்று.

சாரங்கன் என்றால் ஒரு குதூகலிப்பு.

சாரங்கன் என்றால் ஒரு துள்ளல்.

மூடி மூடி இருந்த ஒரு மொட்டு நாளுக் கொன்றாய் விரிந்து பூவாய் - புதுப்பூவாய் அவளின் உள்ளத்தில் மலர்ந்திருந்தது; காதல்.

ஊர்வாய் அகலமாகியது. "அடிக்கடி சாரங்கன் ஆண் துணையில்லாத வீட்டிற்கு ஏன் போவான்.? கேள்விகள் அம்பாகி முடிச்சுப் போட்டு அவிழ்த்து பின்னர் முடிச்சுப் போட்டு என்றாகி காலம் ஓடி ஓடிச் சென்றது. அவளுக்காக அவன் குடும்பத்தின் மீதே ஒரு அக்கறை காட்டத் தொடங்கியதுதான் பலருக்கு வயிற்றெரிச்சல். ஏழை ஏழையாகவே இருக்க வேண்டும். பணக்காரன் ஏழையாகினால் பரவாயில்லை. எக்காரணங்கொண்டும் ஒரு ஏழை முன்னேறி விடவே கூடாது. இதுதான் உலகம். சாரங்கன் யாரையுமே சட்டை செய்யவில்லை. ஒரு கடையில் வேலை செய்தான். தன்னாலான உதவிகளை தனது சக்தியையும் மீறிச் செய்தான்.

▫▫▫

கலங்கிய மனத்தோடு அந்த "ச்செலி" மோட்டார் சைக்கிளை செலுத்திக் கொண்டிருந்தான் சாரங்கன். தனது தேவியைக் காணவில்லை என்ற செய்தி கேட்டதிலிருந்து அவன் ஒரு நிலையில் இல்லை. தேடாத இடமெல்லாம் தேடி இறுதியில் தேவிகாவின் வீட்டிற்கே போய்ப் பார்ப்போம் எனும் எண்ணத்துடன் போனான். அங்கே அவள்... அப்போதுதான் மயக்கம் தெளிந்திருந்தாள். சாரங்கனைக் கண்டதும்...கண்ணகலச் சிரித்து மாமா...வென்று அவனை அழைத்து அவனுக்கு அடுக்களையில் இருந்து உணவு பரிமாறி அடம்பிடிக்காமல் தானும் சாப்பிட்டு... பின்னர் தனியாக அழைத்து அறையில் வைத்துக் கேட்க,

"மாமா...இண்டைக்குக் காலையிலை சித்தப்பா வீட்டுக்கு வந்து....யாருக்கு...மே... தெரி..யா..மை...என்னைக் க...ட்....டி....ப் பிடிச்சு.." வார்த்தை தடம்புரள அணை உடைப்பெடுக்க அவள் ஆறாய் அழுதாள்...

'ப்ளடி ராஸ்கல்...திரும்பவுமா...இங்கை வந்தானா? அவனை உயிரோடையே விடக் கூடாது. என் தேவியைச் சித்திரவதை செய்பவனை அணு அணுவாகக் கொல்ல வேணும். அவன் துடிச்சு துடிச்சு சாகவேணும்.'

அவனுக்கு மனம் கறுவிக்கொண்டது.

"மாமா.. அதுக்குப் பிறகு எனக்கு என்ன நடந்தது எண்டு தெரியாது மாமா. மயக்க மாயிட்டன்." என்று மீண்டும் அழுதாள் தேவிகா.

அதன் பின்னர் அவள் எங்கேயோ போய் நடுவீதியில் மயக்கமாய் விழுந்து படுத்திருக்க யாரோ கொண்டுவந்து வீட்டில் ஒப்படைத்திருக்கிறார்கள்.

அவளின் சித்தப்பா என்கின்ற பச்சோந்தியை - அந்த ஈவிரக்கமற்ற சதைப் பேயைத் தீர்த்துக் கட்டிவிடும் முடிவான எண்ணத்துடன் சாரங்கன் அவளைத் தேற்றி ஆறுதல் படுத்திவிட்டு அங்கிருந்து வெளியாகிப் போனான்.

▫▫▫

பெற்ற தாய், உற்றார், உறவினர் எல்லோரின் எதிர்ப்பிற்கு மத்தியில் அவளுக்காக, அந்த உடைந்துபோன உள்ளத் திற்காக தன் அருமையான தேவிகாவிற்காக, வாழ்க்கையே வேண்டாமென்று ஒதுங்கிய அவளுக்காக அந்தத் திருமணத்தை துணிவோடு ஏற்றுக்கொண்டான் சாரங்கன்.

"தேவிகா" என் செல்வமே இனிமேல் காலம் காலமாக உன்னைக் கண் கலங்காமல் நான் கவனிப்பன். நீ எதுக்கும் பயப்படாதே. ஆனா சத்தியமா உனக்குச் சொல்றன், இனிமேல் உன்ரை வாழ்க்கையிலை நடந்த அந்தக் கடந்த காலக் கசப்பான நினைவுகளை எல்லாம் ஒரு கனவா நினைச்சு மறந்திடு. இப்ப நீ புதிய - புத்தம் புதிய என் தேவி... சரியா?"

தன் அன்புக் கணவன் சாரங்கனின் மடியில் ஆதரவாகப் படுத்தபடியே அவளின் கண்கள் இரண்டும் அவனின் அன்பின் ஆழத்தைப் புரிந்து ஆனந்தக் கண்ணீரை வழிய வைத்தன.

தேவிகா இப்போது சாரங்கனின் அன்பு அணைப்பில் - அவள் இப்போது அவனின் மனைவி.

▫▫▫

சாரங்கனின் நல்ல உள்ளம் - அந்தக் காமுகனின் மனைவி விதவையாவதையும், அவனின் மூன்று குழந்தைகள் அனாதைகளாவதையும் எண்ணியபோது அவனைத் தீர்த்துக்கட்டும் முயற்சியைக் கைவிட்டான். எதிர்ப்புகள் சூழ்ந்தபோதும்- சம்பிரதாயச் சடங்குகளைத் தூர எறிந்து தன் மருமகளை தியாகத்தோடு மனைவியாக்கினான்.

**அப்படிப்பட்ட காமுகப் பச்சோந்திகளுக்கு முன் சாரங்கன் ஒரு உத்தமன்- தியாகி- புரட்சிமிக்கவன் என்பதெல்லாம் மிகையில்லாமல் பொருத்தம் பெறுபவை. அந்தப் புது மணத் தம்பதியை நம்பிக்கையோடு வாழ்த்தி விடை பெறுவோம்.**

(சுபம்)

# விழிக்குள் விழுந்தவள்



ஸ்ரீவரணி - வாழையூர்

காலண்டரில் திகதியைக் கிழித்து விட்டு பார்த்தான் தினேஷ். ஏப்ரல் 26, நாளை பிரியங்காவின் பிறந்தநாள். பிரியங்காவை நினைத்தபோது, நெஞ்சுள் அவள் பேச்சு, பார்வை, ஸ்பரிசங்கள் யாவும் வந்தமர்ந்து கொண்டன. மனசு பிரியங்கா, பிரியங்கா,..... என ஓலமிட்டு, லேசாய் கண்ணில் நீர்துளிக்க, ஏக்கமாய் பெருமூச்சொன்று எழுந்தது-நெஞ்சை எரித்தவாறு.

'இப்போது எங்கிருப்பாய் பிரியங்கா? எப்படியிருப்பாய் பிரியங்கா? நாளை எல்லோர் வாழ்த்துக்களும் வருமே? என் வாழ்த்து?.... ஒற்றை ரோஜாவைத் தாங்கிவரும் என் வாழ்த்து?.... ஓ... எவ்வளவு துரதிஷ்டசாலி நான்? தமிழை, தமிழரை வாசிக்கவும் நேசிக்கவும் தெரிந்த உன்னை இழந்தது எவ்வளவு பெரிய துரதிஷ்டம்!' ஏக்கமாய் நெஞ்சு நகர்ந்துபோன வருடத்தின் பிரியங்காவின் பிறந்தநாளை பிரித்துப் பார்க்கத் தொடங்கியது.

"மனமுவந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள் பிரியங்கா."

"போமஸ்துதி தினேஷ்."

"ஏன் நன்றியை தமிழில் சொல்ல மாட்டாயா?"

"சொல்லலாமே! நம் மொழிதான் வேறு, மனசல்லவே? சரி, நன்றிகள்! போதுமா?"

"ம், போதும், போதும். இது உன் பிறந்தநாளில் என் அன்பளிப்பு."

கையில் நீட்டியதை வியப்பால் விழிவிரித்துப் பார்த்தாள் பிரியங்கா. சிறிய நீள்சதுர கண்ணாடி பெட்டியொன்றுள், முத்துமுத்தான எழுத்தில் கவிதையொன்று, அருகே புதிதாய்ப் பூத்ததுபோல் சிவப்பாய் ஒற்றை ரோஜா. விழியில் நீர் துளிக்க வாசித்தாள் கவிதையை.

**எதிர்கால**
**நிகழ்வுகளின்,**
**நிர்ணயிப்புக்களின்**
**இனியொரு -தருணத்தின்**
**தரிப்பிடம்.**
**இனிதான-இந்த**
**முத்துதிர்ந்து**
**இரு பத்தைந்து**
**ஆண்டுகள்,**
**நிறைந்திருக்க**
**நேற்றிரவு**
**வானில்-வந்திருந்த**
**வட்டநிலாகூட**
**வெண்மை மறந்து**
**உனைப்பார்த்து**
**சிவந்திருந்ததே!**
**நாளை,**
**நாள்-இருக்கும்**
**நாம்?**
**நம் அன்பு?**
**இருப்போம்-ஆனால்**
**இணையாமல்.**

முடிவில் கையெழுத்திட்டுக் கொடுத்திருந்த கவிதையைப் போலவே, சில நாட்களில் மொழி, மதம், பொறுப்புக்கள் காரணமாய் பிரிந்து போனார்கள். அந்த இரு அன்புள்ளங்களும் சேர்வதை, மொழி, இனம் மறந்து இணைவதை சமூகம் ஏற்றுக்கொள்ள என்ன புரட்சியா நடந்திருக்கிறது? விலக்கப்பட்டார்கள், விலகினார்கள். மௌனமாய், மனசால் மொழிபேசி, கண்ணால் துளி சிந்தி ஒவ்வொரு திசையாய், கிழக்கும் தெற்குமாய் பிரிந்து போனார்கள்.

இதோ, நாளை அவள் பிறந்தநாள்.

'எங்கிருப்பாய் பிரியங்கா? என் வாழ்த்துக்களை, நேசங்களை எப்படி உன்னிடம் சேர்ப்பது? சிந்தித்தவன் நெஞ்சுள் மின்னலாய் வழியொன்று தோன்றியது.

பிரியங்காவின் தமிழ் நேசம், தமிழ்ப் பத்திரிகையிலுள்ள நாட்டம் புரியும் அவனுக்கு. கவிதையால் வாழ்த்தெழுத ஆரம்பித்தான், தினமுரசிற்கனுப்ப......

**நினைவே,**
**நினைத்திருக்கின்றேன்.**
**நாளை-உனது**
**பிறந்தநாளல்லவா..?**

**வாழ்த்துக்கள் தாங்கி**
**மடல் மடலாய்**
**வந்தபோதும்-என்**
**ஒற்றை ரோஜாவில்**
**விழி விரிப்பாயே?**
**நினைத்திருக்கின்றேன்.**

**இன்று**
**ரோஜாவாய்**
**உதிர்ந்து-நீயும்,**
**நானும்.**
**சென்ற வருடம்**
**நீயிருந்தாய்**
**இந்த வருடம்**
**நீயில்லை,**
**வரும் வருடம்**
**நாமிருப்போமா?**

**நேற்று போனது**
**இன்று இருக்கிறது**
**நாளையென்றொரு**
**நாள்வரும்-அதிலும்**
**இன்னுமொரு**
**முத்துதிரும்**
**பின்பு**
**நிலாசிவக்கும்**
**இருந்தால்-நானும்**
**நினைப்பேன்,**
**உன்னை.**

பெயரிட்டு, உறையிலிட்டு விலாச மிட்டு அனுப்பினான். வாசிப்பாளென்ற நம்பிக்கையில்- எப்போதாவது!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# அணைந்த தீபம்

### கல்குடா - திருமதி லீலா பரமானந்தராஜா

விமலா வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்து கொண்டிருந்தாள். அவள் மனதில் உள்ள போராட்டம், பதற்றம் நடையிலும் தொற்றிக்கொண்டது. மணிக்கூட்டையும் அவசர அவசரமாக பார்த்துக்கொண்டாள்.

'இன்று எப்படியாவது கேட்டுவிட வேண்டும். எத்தனை நாளைக்குத்தான் மனதில் வைத்துக்கொண்டு புழுங்குவது' மனம் பத்தாவது தடவையாக நினைத்துக் கொண்டது. 'ஏன் இன்னும் வரவில்லை. போயிருப்பாரோ... ஒருவேளை... உண்மையாக இருக்குமோ...அப்படியும் இருக்கலாம்...' நினைக்க நெஞ்சு வேதனையில் விம்மியது. 'எதற்கும் வரட்டும். இன்று இரண்டில் ஒன்று பார்த்துவிட வேண்டியதுதான்'.

கேற் திறக்கும் சப்தம் கேட்டதும் விமலா தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டாள். மனதில் உள்ள போராட்டம் முகத்தில் தெரியாவண்ணம் இருப்பதற்கு பெரும்பாடுபட வேண்டியிருந்தது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று சொன்னவர்கள் சும்மாவா சொல்லி வைத்தார்கள்!

அரவிந்தன் வந்து ஆடைமாற்றி முகம் கழுவி சாப்பிடும்வரை அவள் எதுவும் பேசவில்லை. அவன் இப்போது சாய்வு நாற்காலியில் ஆறுதலாக இருக்கிறான். இந்த நேரத்தில் தான் அவள் ஏதாவது பிரச்சினை என்றால் அவனிடம் கூறுவாள். தயங்கியபடி அவன் அருகில் வந்தாள் விமலா.

"என்னங்க..." அவள் கூறவந்ததைக் கூறாமல் அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் பார்வையில் தெரிவது கோபமா? கெஞ்சலா? எதுவும் புரியவில்லை அவனுக்கு. 'என்ன' என்பதுபோல் அரவிந்தன் தலையை ஆட்டினான். "உங்கட ஒஃபிஸில சுமி என்றொரு பெண் வேலை செய்கிறாளா?" கேட்டாள். 'சுமி' என்ற பெயரைக் கேட்டதும் ஒரு கணம் அதிர்ச்சியை உள்வாங்கிக் கொண்ட அரவிந்தன் சமாளித்துக்கொண்டு "ஓம் அதுக்கென்ன! இப்ப?" என்றான். "உங்களுக்கும் அவளுக்கும் ஏதோ தொடர்பாம் என்று கதைக்கிறாங்க... வேலைவிட்டு நீங்க அவளை சைக்கிளில ஏற்றிக்கொண்டு பீச், சினிமா என்று போறீங்களாம்..இதெல்லாம் உண்மையா?..." அவள் கேட்டு முடிக்குமுன் அவன் கன்னத்தில் 'பளார்' என ஓர் அறைவிட்டான். "எவனோ சொன்னா..அத நீ நம்பணுமா? வீட்டில இருக்கிற உனக்கு ஒஃபிஸப் பற்றியும் வேலை செய்யிறவங்களப் பற்றியும் என்ன கதை? பேசாம வீட்டு வேலைகளைப் பார். உனக்கு அது போதும்."

அவன் உள்ளே சென்று கதவை மூடிக்கொண்டான். பேயறைந்தவள் போல் நின்றாள் விமலா. கடவுளே... என்ன இது.. ஒருவேளை நான் அவர சந்தேகப்பட்டது தவறோ..? குற்றம் செய்யாத அவர வீணா.. மனவருத்தப்படுத்தி விட்டேனோ..?' அவள் மனம் வெதும்பியது. தனது தோழி ஜெயா மீது கோபம் வந்தது. அவள் தானே வந்து சொல்கிறவள்... அவள் பொய் சொல்லி யிருக்கிறாளோ..? சிந்தித்துக்கொண்டிருந்தவள் அவ்விடத்திலேயே அமர்ந்து விட்டாள்.

அரவிந்தன் தடுமாறிப் போனான். 'விமலா அறிந்துவிட்டாள். இனி கவனமாக நடக்க வேண்டும்;' என அவன் மனம் சொல்லிக்கொண்டது. என்னதான் அவளை ஏசி அடித்தாலும், விமலாவை நினைக்க பயமாகவும் இருந்தது. சுமியை மறக்க முடியாது. கட்டிய மனைவி விமலாவை ஏமாற்றுவது தவறு என்றாலும், அதை தவிர்க்கவும் முடியாது. அவன் சிந்தனையுடன் தூங்கிப் போனான்.


திடீரென கண்விழித்தவன் சோகமே உருவாக தன் கால்மாட்டில் இருந்து காலை அமுக்கும் விமலாவைக் கண்டதும் "ஏன் நித்திரையைக் குழப்புகிறாய்?" என்றான்.

"என்ன மன்னிச்சிடுங்க... உங்கள தவறா பேச்சிற்றன்.." கூறிமுடிக்க அழுகையும் சேர்ந்து கொண்டது.

அவனுக்கு விமலாவை நினைக்க பாவமாக இருந்தது. துரோகம் செய்கிறோமே என்பதை நினைக்க வேதனை தோன்றினாலும் சுமியை நினைக்க எல்லாம் மறந்து விட்டது. அந்த முகத்தை பார்த்துக்கொண்டே இருக்கலாமே. அந்த அழகை, குரல் இனிமையை, முல்லைச் சிரிப்பை இரசிக்கத் தெரியாதவன் மனுசனே இல்ல...

"சரி...சரி...நான் வெளியில போக வேணும்..." கூறிக்கொண்டு எழுந்தவன் அரை மணியில் உடை மாற்றி வெளியில் சென்றுவிட்டான். அவன் அன்று அலுவலகத்திற்கு அணிந்து போன ஆடைகளை கழுவுவதற்காக எடுத்தவள் அவனது சேர்ட் பொக்கற்றில் கடிதம் ஒன்று இருப்பதை அவதானித்தாள்.

'என்ன இது...? அவரின்ர...ஏதாவது முக்கிய கடிதமாக்கும்..' என மேசை மீது வைத்தவள் ஒரு கணம் நின்று நிதானித்தாள். எதற்கும் பார்ப்போம்... என்று கடிதத்தை பிரித்தாள். அவள் தலை சுற்றியது. கண்கள் இருண்டன. 'ஓ..நான் ஏமாந்துவிட்டேன்.



அவரின் பேச்சில் நான் ஏமாந்து விட்டேன்...'

ஜெயா சொன்னது அத்தனையும் உண்மை. கடவுளே வெளுத்ததெல்லாம் பால் என்று எப்படி நம்பினேன்... அப்படி ஒரு பேதையாக வளர்த்துவிட்ட பெற்றோரைச் சொல்வதா என்னை ஏமாற்றும் கணவனை குற்றம் சொல்வதா?...'

அவள் விம்மி விம்மி அழுதாள். அழுது ஓய வெகு நேரம் எடுத்தது.

கடிதத்தை திரும்பவும் சேர்ட் பொக்கற்றிலேயே வைத்து திரும்பவும் சேர்ட்டை இருந்த மாதிரியே வைத்துவிட்டு கட்டிலில் படுத்துக்கொண்டாள்.

வெளியில் சென்ற அரவிந்தன் வருவது தெரிந்தும் அவள் எழுந்திருக்கவில்லை. அவன் அவசர அவசரமாக சேர்ட்டை எடுத்து கடிதத்தை எடுத்துக்கொண்டான். அவள் கவனிக்காததுபோல் படுத்துக்கொண்டாள்.

அதன்பின் அவள் அவ்வீட்டின் நடைப்பிணம் போல் ஆகிவிட்டாள். அவள் விழிகள் அழுதழுது சோர்ந்து விட்டன. மனம் அழுதது. ஆனால் அவள் அரவிந்தனிடம் எதுவும் கேட்கவில்லை. அவனுடன் பேசும் வேளைகளை தவிர்த்துக்கொண்டாள்.

அவளது ஒவ்வொரு செய்கையும் அரவிந்தனுக்கு அதிர்ச்சி வைத்தியமாக இருந்தது 'என்ன இது... குட்டிபோட்ட பூனை போல் என் காலையே சுற்றிக் கொண்டிருந்தவள்... ஒருவேளை உண்மை தெரிந்து ஒதுங்கி விட்டாளோ..?'

அன்று வேலைக்குப் போன அரவிந்தனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

"அரவிந்தன் என்னை மறந்திடுங்க... எனக்கு கல்யாணம் பேசி முற்றாக்கியாச்சு. நாளை சுவிஸில இருந்து அத்தான் வாறார். ஒரு கிழமையில கல்யாணம் முடிச்சிற்று.... என்னை கூட்டிக்கொண்டு போகவாம். எனக்கு வேற வழி தெரியல்ல... ஓம் என்று சொல்லிற்றன். இனி உங்கட விமலாக்கு நல்ல கணவனா இருங்க. குட்-பை" அவள் சென்றுவிட்டாள்.

அவனுக்கு வானம் இடிந்து தலையில் விழுந்தது போலிருந்தது. தொடர்ந்து வேலை செய்ய மனம் இடம் கொடுக்கவில்லை. லீவு எழுதிக்கொடுத்துவிட்டு வீட்டுக்குச் சென்றான்.

அங்கு... வாசல் நிறைய சனம்-அழு குரல். பயந்துபோய் உள் சென்றவன் நெற்றிப் பொட்டில் யாரோ தாக்கியதைப் போன்ற உணர்வைப் பெற்றான். குத்து விளக்குகள் எரிய விமலா பிணமாக வளர்த்தப்பட்டிருந்தாள். அவனுக்கு அதற்கு மேல் எதுவும் விளங்கவில்லை. 'நஞ்சு குடித்து இறந்து போனாள்' என்று யாரோ சொல்வது கனவில் கேட்பது போலிருந்தது.

'ஓ...நான் எத்தனை பெரிய பாவி.. விமலா.. உன்ர தூய அன்ப புரிஞ்சுக் கொள்ளாம உன்னை.. கொன்றிட்டன்.. விமலா... விமலா.. இந்தப் பாவிக்கு மன்னிப்பே இல்லம்மா.....'

அவனால் வாய்விட்டு வெளியில் சொல்லி அழ முடியவில்லை. அழுதான். அழுது கொண்டே இருந்தான். அவனைத் தேற்ற யாராலும் முடியவில்லை. அவன் இப்போது விமலாவின் கணவன்.

### எழுதுவோர் கவனிக்கவும்

புதிய எழுத்தாளர்கள்
ஊக்குவிக்கப்படுவார்கள்.
சிறந்த படைப்புக்கள் வரவேற்கப்படும்.
பிரசுரிக்கப்படாத கதைகள் திருப்பி
அனுப்பப்படமாட்டாது.
ஆகவே கதையோடு இணைத்து
முத்திரை வைத்து அனுப்பவேண்டாம்.
முரசுக்கு வரும் ஆக்கங்கள் எதுவும்
திருப்பியனுப்பப்படமாட்டாது.

---

## கவிதைக் கதை

### சித்திரை விரகம்

நேற்று இரவெல்லாம்
தூக்கமே இல்லையடா.
ஏதேதோ கற்பனையில்
மேலெல்லாம் கொதிக்குதடா.
முற்றத்திற்கு வந்தனடா
தொடர்ந்து நிற்க முடியேல்ல.
உலவிவிட்டு வருவமெண்டால்
நிலவு கூடச் சுடுகுதடா.
காற்றும் காந்துதடா,
குண்டுமல்லி வாட்டுதடா
பாயில் நான் படுத்தா
முள்ளு முள்ளாக் குத்துதடா!

கண்மூட முடியேல்ல
பயங்கரமாய் நினைவுள்,
வெள்ளவத்தை வீதியிலே
டூயட் பாடும் கனவுகள்!
தலையணையை நான் பிடிச்சா
தாவணியாத் தெரியுதடா
தளிர் இலையை நான் கடிச்சா
அவள் இதழாய்த் தோணுதடா!
இரவே நரகமடா
இதுவே தொடக்கமடா...
தனித்திருக்க முடியேல்ல
துணைக்கு நீ வாறியே?

"ஐயய்யோ நான் மாட்டன்.
உன் நிலமை மிக மோசம்.
ஆவேசம் வந்துதெண்டால்
அருகில் நிற்க முடியாதே"

கடிக்கிறே பாத்தியே?
என் நிலமை புரியாமல்
படிக்கிற இலக்கியத்தை
எங்க மச்சான் போட்டனி?

"எனக்குப் புரியுதடா
நண்பன் உன் வேதனைகள்
எருமைக்குக் கவிவரும்-போதே
நான் தெரிந்து கொண்டேன்.

சித்திரை வந்தாலே
இத்தொல்லை பெரும் தொல்லை.
லவ்வடிக்கப்ப போனனியே?
சிட்டேதும் மாட்டினதே?"

ஐயோ...
நினைக்கவே சிலிர்க்குதடா
மேனிபுல் லரிக்குதடா!
மாமான்ர கடைசி மகள்
மதியழகி என்று பெயர்
சூப்பர் அழகியடா
சொல்ல மொழி இல்லையடா...

ஆயிரம் ரோஜாக்கள்
அடுக்க அவள் வருவாள்!
பல நூறு நிலவுகள்
ஜொலிக்க அவள் சிரிப்பாள்!
அவளுக்கு நான்-'சொக்கலட்'
எனக்கு அவள்-'சூயிங்கம்'!
லவ்வெண்டால் லவ்வு
அப்பிடியொரு லவ்வடா!

"பிறகு...?"

காதல் கிளைபரப்பி
மாமாக்குத் தெரியவர,
ஆர்வமாய் கூப்பிட்டார்.
"அஞ்சுசதம் தரமாட்டன்
கட்டுவியோ" எண்டு கேட்டார்.
அவள் கிடைச்சால் போதுமெண்டு
ஒமெண்டு போட்டன் மச்சான்.

"பாவம் விசரன்"

"என்ன மச்சான் முணுமுணுப்பு?

"சீதனம் வாங்காத
மாபுருஷன் நீயென்றேன்
வேறொன்றும் கூறவில்லை
மச்சான் நீ தியாகியடா!"

ஹி...ஹி...ஹி...
(மிச்சத்தையும் கேளன் மச்சான்)
நான் சொன்ன பதில் கேட்டு
பல்லிளித்த என் மாமன்
சித்திரைத் தினத்தன்று
தன் வீடு வரச்சொன்னார்
பொன்னான மகளோடு
கதைபேசிப் போகச் சொன்னார்!
சொன்ன கணம் முதல்
எனக்கிருப்புக்கொள்ளவில்லை
சின்னவளின் கன்னம் முதல்
கால்வரை கற்பனையில்...
நண்பா...!
பொல்லாத இவ்விரவு
விடிஞ்சாத்தானே சித்திரை?

"ஐயோ! ஓமடா
விடிஞ்சா சித்திரை.
விடியும்வரை நித்திரை-
கொள்ளடா பாவி!
போகுதென் ஆவி!!"

### ஓட்டோ படலம்

(மறுநாள் காலை)
சித்திரைச் செவ்வானம்
சிரிக்கக் கண்டேன்.
சிங்காரச் சிட்டுக்கள்
பாடக் கண்டேன்.
சேவல் எழும்புமுன்
சேவலை நான் எழுப்பி
அதற்குப் பதிலாக,
நான் கூவி விடிய வைத்தேன்!
சூரியன் உதிக்கும்போது
பூவோடு நான் ரெடி!

உதைத்த உதையில்
நண்பன் உருண்டு விழுந்தான்.
கோபத்தில் கண்விழித்தான்
முறைத்தான்....
சித்திரை பிறந்தாச்சு
"புறப்படு" என்றேன்.
"எங்கே" என்றான்.
மாமன் வீட்டுக்கடா
மறந்து போச்சோடா
கெதியா எழும்படா
குளிச்சிட்டுப் புறப்படடா.
அவசரப்படுத்தினேன்.

## சித்திரைச் செவ்வானம் சிரிக்கக் கண்டேன்...

-எம். சுரேஷ்-

அவன் வருமுன் 'ஓட்டோ' ரெடி!

நண்பன் வந்தான்
ஓட்டோவைப் பார்த்தான்
ஒப்பாரி வைத்தான்
கனமாய் திட்டினான்.
"ஓட்டோ எதுக்கடா?
செக்கிங் அதிகமடா
வீண் செலவு எதுக்கடா?
பஸ்சில போவமடா."

வேண்டாம் மச்சான்.
என்னால முடியாது.
பஸ்சில போனால்
நாளிகை ஆகும்.

ஒரு நொடி பிந்தினாலும்
என்னுயிர் தாங்காது.
என்னைக் காணாட்டி
என் துணை வாழாது!

"காறித் துப்படா
கவிதை மட்டும் சொல்லாதே
ஆத்திரம் வருகுதடா...'
இனி உன் இஷ்டம்."

"ஒகளன்ட அவுருத்த?"
"உங்களுக்கும் அவுருத்த"
உது நாங்கள்!

மீண்டும் ஏறினோம் (ஓட்டோவில்!)
ஐந்தடியும் சென்றிருக்காது
மீண்டும் 'காக்கி'
மீண்டும் இறக்கம்
மீண்டும் 'அவுருத்த'
மீண்டும் ஏற்றம்...



### செக்கிங் காண்டம்

"முக்கி முக்கிச் சொன்னனான்
முட்டாள் நீ கேட்டனியே?
முன்னால பாரடா
'காக்கி' ஒண்டு கைய நீட்டுது!"
முதலில் இறங்கினேன்.
புத்தாடை, புதுவேட்டி,
பட்டான நெற்றியில்
பொட்டாக சந்தனம்.
'காக்கி' சிரித்தது....

உப்பிடியே அடிக்கொரு செக்கிங்
ஆளுக்கொரு கேள்வியால்,
புதுச் சட்டை பழசாகி,
வெள்ளை வேட்டி கருப்பாகி,

மாமனின் வீடுபோக...
மாமன் மகள் வந்தாள்
மிக அழகாய் புன்னகைத்தாள்,
"சித்திரைக்கு ஏன் வரவில்லை"
என்றாள்,
தீபாவளி வாழ்த்துக்கூறி
வரவேற்றாள் (?!)
ஷி....ஷி....ஷி.....

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# இலக்கிய நயம்

## தருவது-ரசிகன்

# விழி—பேசும்—மொழி



"அமுதா... அமுதா.. அமுதா..!"

எதிரே நிமிர்ந்தும், உயர்ந்தும் தெரிந்த மலைகள் உதயதீபனின் குரலை வாங்கி எதிரொலியாக திருப்பித்தந்தன.

மனசுக்குள் நூறு நூறு பூக்கள் மலர்ந்தன. பிரியமானவள் பெயரை மலைகள் உச்சரிக்க செவிகள் அதை வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டன.

ஒரு குழந்தைபோல கைகள் இரண்டையும் காற்றில் வீசியடித்து துள்ளிக்குதித்தான் உதயதீபன்.

பெயரை உச்சரிக்கும் போதே உள்ளே ஒரு சுகம் ஊற்றெடுக்கும் அற்புதம் காதலின் மகத்துவம்.

'மனதுக்கினியவள் பெயரை எதிரொலியாய் உச்சரித்த மலைகளுக்கு நன்றி.'

மனதுக்குள் சொல்லிக்கொண்டான். இன்னும் ஒருமுறை... இன்னும் ஒருமுறை. மனது விண்ணப்பம் போட்டது.

"அமுதா... அமுதா.. அமுதா..."

மறுபடி குரல் உயர்த்தி அழைக்க, மலைகள் மீண்டும் எதிரொலி அனுப்ப,

களுக்கென்று சிரிப்பொலி காதருகே கேட்டது.

"மலையரசி சிரிக்கிறாளோ?" மனது வெட்கப்பட்டுக்கொண்டு விசாரித்தது. செண்பக பூவின் வாசம் மூக்கைத் தொட்டது.

அருகில் ஒரு நிழல் தெரிய திரும்பிப் பார்த்தான். விரிந்தன விழிகள். மூட மறந்தன இமைகள்.

யாரது பெயர் சொல்லி அழைத்து, எதிரொலியாய் அந்தப் பெயர் கேட்டு மனத் தோட்டத்தில் மலர்கள் பூக்க மகிழ்ந்தானோ அவள்-

வளைந்த புருவத்தோடு, கடைந்தெடுத்த சிலைபோல, கனியிதழில் புன்னகை ஏந்தி அருகே நின்றாள்.

"அமுதா நீயா?"

என்றான். தான் துள்ளிக்குதித்ததை எல்லாம் கண்டுவிட்டாளோ என்ற வெட்கத்தோடு.

ஆணுக்கும் வெட்கம் வரும். காதலில் அது அடிக்கடி வரும்.

அசட்டுத்தனமாக ஏதாவது செய்ய, அது புரிந்து பெண் நகைக்க, ஆணுக்கும் வெட்கம் வரும்.

"என்ன கேள்வி இது?"

கண் எதிரே தோன்றிய அழகு கேள்வி கேட்டது.

"என்ன கேள்வி?"

என்றான்.

"நீயா? என்று கேட்டீர்கள். ஏன் வேறு யாரையும் எதிர்பார்த்தீர்களாக்கும். இருக்கும் இருக்கும். நந்தி போல நான் எதற்கு குறுக்கே வருகிறேன்?"

என்ன பதில் சொல்வது? வெட்கத்தால் விவரமில்லாமல் வந்த வினா என்று எப்படிச் சொல்லுவான்.

உடனே மனசில் ஓர் உத்தி வந்தது. பெண் மனம் அறிந்து வீசப்பட்ட தந்திரமாய் வார்த்தைகள் கோர்த்து,

"இந்த நீலப்பட்டாடையில் நேரில் உன்னைக் கண்டவுடன் நிலத்தில் அல்ல, நீல வானுக்கு அப்பால் சென்று விட்டேனோ என்று வந்தது ஒரு சந்தேகம்."

தெரிந்தெடுத்து அணிந்துவந்த பட்டாடைக்கு பாராட்டு கிடைத்ததில் அமுதாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

தனது தெரிவு சரியென்று புகழப்பட மனது சில்லென்று குளிர்ந்து போனது. என்றாலும் வெளியே மகிழ்ச்சி சொல்ல மனம் ஒத்துக்கொள்ளாது.

"என்ன சந்தேகம் உங்களுக்கு?"

உதடு சுழித்து, தோள்களை குலுக்கி திரும்பிச் செல்வது போல பாவனை செய்தாள்.

வெட்கத்தால் விளைந்த தன் அசட்டுத்தனமான கேள்விக்கு நொந்து கொண்டான் உதயதீபன்.

"அமுதா! நில் அமுதா. நான் அதற்கு கேட்கவில்லை. வந்து..."

"பின்னர் எதற்காக கேட்டீர்களாம்?"

"அமுதா! கட்டான உன் உடலில் கச்சிதமாக பொருந்தியிருக்கும் இந்த நீலப் பட்டாடையுடன் உன்னைப் பார்க்கும் எவரும் பூவுலகப் பெண் என்று ஒரு போதும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்."

"போதும்.போதும். புகழ்ந்து பேசினால் மயங்கிவிடுவேன் என்று எண்ணமாக்கும்."

"சத்தியமாய் இல்லையடி.. பொற் சித்திரமான உன்னைக் கண்டவர்கள்தான் மயங்கிப் போக வேண்டும். நீ ஏன் மயங்க வேண்டும்?"

"ம்...ம்..இன்று சரியில்லை."

"என்ன சரியில்லை?"

"வரும்போது துள்ளிக்கொண்டிருந்தீர்கள். இப்போது ஏதோ உளறுகிறீர்கள்.."

"உளறவில்லை அமுதா. உருகிப் போகிறேன். வெய்யில் பட்டுவிட்டால் சிவக்கும் சூரியகாந்தி போல, உன் விழிகள் பட்டதனால் சிவந்துவிட்ட என் உள்ளத்தில் சுடும் ஆசைகள் சிந்தையை தகிக்க வைக்கின்றன."

"எப்போதுமே இந்த ஆசைதான்."

தலையில் அடித்துக்கொண்டாள். சற்று விலகிப்போய் நின்று கொண்டாள்.

"அமுதா உனக்கொரு விசயம் தெரியுமா?"

"என்ன?"

"கொம்பு தாவாத குரங்கு இருக்கிறதோ? வாலிப வயதில் ஆசை என்ற கொப்பில் தாவாத உள்ளங்கள் இருக்க முடியுமா?"

"ம்...பேச்சில் ஒன்றும் குறைச்சல் இல்லை. இதனால்தான் நான் அடிக்கடி வருவதில்லை."

உதயதீபனின் முகம் வாடிவிட்டது. உண்மையாகவே அவளுக்கு பிடிக்கவில்லையோ, என்று கவலை வந்தது?

"அமுதா உண்மையாகத்தான் சொல்கிறாயா?"

அமுதா திரும்பி அவன் முகம் பார்த்தாள்.

பார்வையில் இருந்தது பதில். விழிகள் சிமிட்டி உதட்டிலே மெல்லிய புன்னகை காட்டினாள்.

அருகே சென்று அவள் கரம் பற்றியபடி கேட்டான்,

"பொய்தானே சொன்னாய்?"

அமுதா பதில் சொல்லவில்லை.-விழிகள் மட்டும் வண்ணத்துப்பூச்சியின் இறகுகள் போல படபடத்தன.

"மன்னித்துக்கொள்."

என்றான் உடைந்த குரலில்.

"எதற்கு மன்னிப்பு?"

"நான் வரம்பு மீறியிருந்தால்...

அதற்கு!"

"யார் சொன்னது? உங்களுக்கு சகல உரிமையும் இருக்கிறது."

உதயதீபன் மறுபடி உற்சாகமானான்.

"உரிமை இல்லையோ என்று நினைத்தேன்."

"என் மீது உங்களுக்குள்ள உரிமையை தடுக்க இனி ஒருவர் பிறந்துதான் வரவேண்டும்."

"பிறந்துகூட வரமுடியாது - விட மாட்டேன்."

ஆவேசமாய் சொல்லியபடி அமுதாவை தன்னோடு இறுக்கிக்கொண்டான்.

இறுக்கத்தில் சிக்கியபடியே,

"விடுங்கள்."

என்றாள். விட மறுத்து அவள் முகம் தன் கரத்தில் ஏந்தி விழிகளை நோக்கினான்.

அவள் இதழ்கள் சொல்லியது பொய் என்றன அந்த பொல்லாத விழிகள்.

காதலில் இதழ்கள் சொல்லாத செய்தியை விழிகள் துணிந்து சொல்லிவிடும்.

அமுதாவின் விழிகளை பார்த்தபடியே உதயதீபன் சொன்னான்,

"விருந்தும் தரும். வருந்தும் நோயும் தரும். அந்த நோய்க்கு மருந்தும் தரும். அந்த பெருமை இந்த விழிகளுக்கு தகும்."

"புரியவில்லையே?"

என்றாள் அமுதா.

"புரியவைக்கத்தானே போகிறேன்."

என்றபடி அவள் இதழ்களில் தன் உதடுகள் கவிழ்த்தான் உதயதீபன்.

நீலப்பட்டாடை நிலம் காண, நிலா வெட்கப்பட்டுச் சிணுங்க, நாம் விலகி வந்து, திருவள்ளுவரிடம் உதயதீபன் சொன்ன விழிக்கதைக்கு குறள் கேட்கலாம்.

"இரு நோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய் நோக்கொன்றந் நோய் மருந்து"

அதிகாரம் 110
குறள்-1091

# சிந்தியா பதில்கள்

டியர் சிந்தி! இளமையுடன் இருக்க என்ன செய்ய வேண்டும்?

**கே.வின்சன்-மட்/சத்துருக்கொண்டான்.**

உங்கள் பிறந்தநாளை மறந்துவிட வேண்டும். விபரம் அறிய அடுத்தவார முரசை பாருங்கள்.

□□

மரணத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**எஸ்.விஜை-பத்தனை.**

சில சமயங்களில் நியாயமின்றி கை நீட்டுகிறது. இருக்க வேண்டியவர்களை இழுத்துக்கொள்கிறது. இழுத்துக்கொள்ள வேண்டியவர்களை இருக்கட்டும் என்று விட்டு வேடிக்கை பார்க்கிறது.

□□

இலங்கையில் எதிர்வரும் ஜனாதிபதி யாராக இருப்பார்?

**ஆர்.சிவராசா-செங்கலடி.**

எவர் வெல்வாரோ அவர்!

□□

முரசில் இடம்பெற்ற சுப்பர் ஸ்டார் சந்திப்பின் முடிவு என்ன?

**திருமதி பாரதி சுதாகரன்-மட்டக்களப்பு.**

எவரும் சகல கேள்விகளுக்கும் சரியாக பதில் அளிக்கவில்லை. சில கேள்விகள் கடினமோ என்று யோசிக்க வேண்டியுள்ளது. அதனால் சுலபமான கேள்விகளோடு புதிய போட்டி ஒன்று நடத்தப்படும் என்று காதில் விழுந்தது.

□□

தற்போது உலகில் பெருகிவரும் குண்டர்கள் பற்றி உங்கள் கருத்து?

**எம்.குலசேகரன்-இறக்குவானை.**

பூமிக்கு பாரம் அதிகமாகி வருகிறது என்று அர்த்தம். கவலைப்பட வேண்டாம். பூமி தாங்கும்.

□□

நடந்து முடிந்த தென் மாகாணசபைத் தேர்தல் பற்றி?

**நஸ்லிஹா பறக்கத்துல்லா-மல்லவப்பிட்டிய.**

இனப்பிரச்சனை விவகாரம்தான் அங்கு வெற்றி தோல்வியை நிர்ணயித்தது என்பது காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதைதான். அதுவும் ஒரு காரணமே தவிர அதுவே முழுக் காரணம் அல்ல என்பதே எனது கருத்து.

□□

அன்பு காட்டியும் அன்பு காட்டாதவர்களைப் பற்றி?

**எம்.பௌசாப்கான்-குருத்தலாவை.**

அவ்வளவுதான் அவர்கள் அவ்வளவுதான்.

□□

டியர் சிந்தியா, உண்மையை பேசும் சிலருக்கு சமூகத்தில் நியாயம் கிடைப்பதில்லையே இது ஏன்?

**ஆர்.கலைமகள்-கொடஹேனை.**

உலகம் உருண்டை என்று முதலில் கண்டுபிடித்துச் சொன்னவனை கொல்லத் துரத்தியதும் இந்த உலகம்தானே. உண்மைகளை காலம் கடந்து உணர்ந்துகொள்வது, உண்மையானவர்களை காலம் தாழ்த்தி புரிந்துகொள்வது என்று விதியாகிவருகிறது.

□□

மழையில் நனைந்து பாடித் திரிய ஆசை. நீங்களும் வருவீர்களா?

**என்.யோகராணி-பதுளை.**

வரலாமே! நான் மட்டும் குடையோடு!!

□□

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு முக்கியமானதாக கருதப்படுவது ஒழுக்கமா? நல்ல மனமா? முயற்சியா? தன்னம்பிக்கையா? இதில் தலை சிறந்தது எது?

**எம்.தமிழ்ச் செல்வி-அக்கரப்பத்தன.**

நல்ல மனம் இருந்தால்தான் ஒழுக்கம் வரும். முடியும் என்ற தன்னம்பிக்கை இருந்தால்தான் முயற்சி வெற்றி பெறும். அந்த முயற்சி அடுத்தவரை இகழ்ச்சியடைய வைக்காமல் இருக்க நல்ல மனதோடு கூடிய நல் முயற்சியாக இருக்க வேண்டும். சுத்தமான மனதே முக்கியம். அதுவே சிறந்தது.

□□

டியர் சிந்தியா! தாஜ்மஹாலை கட்டியவரின் பெயர் என்ன?

**ஐ.எம்.ஹனிபா-கந்தளாய்.**

ஒருவரல்ல பலர். அந்தப் பலரின் உதிரத்திலும் வியர்வையிலும் உருவானதே தாஜ்மஹால். கட்டுவித்தவர் சாஜஹான்.

□□

வை.கோ.தமிழக முதலமைச்சராக அடுத்து வரும் சாத்தியம் உண்டா?

**ஆர்.சேகரன்-கண்டி.**

கட்சி தொடங்கியவுடன் முதல்வராக வை.கோ. எம்.ஜி.ஆரல்ல.

□□

வாலியை கண்டு கண்ணதாசன் பயந்தாராமே? உண்மையா?

**அ.சத்தீஸ்வரன்-கொழும்பு-6.**

அப்படியொரு கருத்தை தமிழக வார இதழ் ஒன்றில் தனது சுயசரிதையில் வாலி எழுதி யிருக்கிறார். அது தமிழகத்திலும் சிறு சர்ச்சையை கிளப்பியிருந்தது. பதில் சொல்ல இல்லாத ஒருவர் பற்றி அப்படி வாலி எழுதியிருக்க கூடாது. அதில் கருத்துச் சொல்ல முடியாது.

□□



## குறுக்கெழுத்துப் போட்டி இல—47

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | | 4 |
| 5 | | | 6 | | ■ | |
| | | ■ | | | ■ | |
| | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | | ■ | 9 | | |
| ■ | 10 | | | | ■ | |
| 11 | | | ■ | 12 | | |

**இடமிருந்து வலம்**

1. கையெழுத்துக்குப் பதிலாக இதனைப் பயன்படுத்துவார்கள்.
3. உருவத்தில் சிறிய ஆனால், உறுதியானவர்களுக்கு இதனை உதாரணம் சொல்வதுண்டு.
5. தன்மானம் உள்ளவர்களுக்கு இதனை உதாரணம் சொல்வார்கள்.
10. விவசாய நடவடிக்கைகளுக்கு உகந்த பிரதேசம் இது.
11. தலை அலங்காரத்திற்கு இதுவும் தேவை.
12. வெற்றிலையின் தோழன்.

**மேலிருந்து கீழ்**

1. இது உயிரபாயத்திலும் முடிவதுண்டு.
2. 27வது நட்சத்திரத்திற்கு இதுதான் பெயர்.
3. மணமாகாத பெண்ணை இப்படியும் சொல்வதுண்டு.
4. மங்களகரமான காரியங்களில் ஏற்றி வைக்கப்படுவதுண்டு.
6. அனுமானின் இன்னொரு பெயர்.
7. உடலுக்குள் இதுவும் அடக்கம்.
8. தென்னை இது தரும்.
9. இதை ஆக்கப் புலவர்களால் முடியும்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 07.05.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-47**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல-45க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தே | ன் | 2 கூ | டு | ■ | 3 த | 4 டை |
| னீ | ■ | 5 ர் | ம | ச | ■ | போ |
| ர் | 6 சு | மை | ■ | 7 கை | 8 கே | யி |
| ■ | ம | ■ | 9 தி | ம் | ட | ட் |
| 10 ப | ங் | கு | னி | ■ | ய | ■ |
| ■ | க | ■ | 11 எ | று | ம் | 12 பு |
| 13 ம | லி | வு | வி | லை | ■ | ல் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.45இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. ப.நாகேஸ்வரி, திருகோணமலை.
2. ஹஸ்மத் பர்ஹானா, முறுத்தகஹமுள.
3. எமிலியானா பர்ணாந்து, கண்டி.
4. அ.உலகநாதன், கொழும்பு-03.
5. கே.சுபாஸ்ரீ, கண்டி.
6. ஏ.எஸ்.அப்துல் ரசாக், நாத்தாண்டியா.
7. வி.குமார், புத்தளம்.
8. மு.சோமசேகரன், கொழும்பு-9.
9. எம்.ஐ.புஆத், கிண்ணியா.
10. வ.பிரேமா, வவுனியா.


**இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.**

# மகாபாரதம்

அங்கம் 27

**இவ்வாரம் (01.05.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்



**காலத்தின் குரல்:** உரிமைகளுக்கும் அபிலாசைகளுக்குமிடையில் தொங்குகின்ற வாளின் கூர்மையினைப் பரிசோதிக்கும் காலகட்டம் இது. இம்மாகாவியத்தின் திருப்பு முனையாக இது விளங்குகிறது. அஸ்தினாபுரத்தின் அரசனாக நியமிக்கப் படுபவன் யுதிஷ்டிரனாக இருந்தால், மக்களை அரவணைத்து நல்லாட்சி செய்யும் ஆற்றல் அவனுக்குண்டு. ஆனால் பேராசையினாலும் சகுனியின் தூண்டுதலினாலும் திருதராட்டிரனின் சபலத்தினாலும் பேரவாவுக்கு அடிமையாகிவிட்ட துரியோதனன் தனது இலட்சியத்துக்கு குறுக்கே எவரும் வரலாகாதென்று திட்டங்களை வகுக்கிறான். இந்தச் சூழ்நிலையினால் எதிர்காலத்தில் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை கிருபாச்சாரியாரும் துரோணாச்சாரியாரும் நன்கு உணர்வார்கள். ஆனால் தனக்குக் கிட்டாது போன மகுடத்தை தன் மகன் தலையில் சூடத் துடிக்கும் திருதராட்டிரனுக்கு உண்மையை உணர்த்த முடியாத நிலையிலுள்ளனர்.

-காட்சி தொடக்கம்-

துரியோதனன் அரண்மனை.

**துரியோ:** நாளை என்ன நடக்கும் என்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

**கர்ணன்:** சுத்த வீரன் காலத்துக்காகக் காத்திருக்க மாட்டான். எமது எதிர்காலத்தை எவரும் நிர்ணயிக்க முடியாது.

**சகுனி:** உன் வீரத்தை மெச்சுகிறேன் கர்ணா. துரியோதனா! நான் உயிருடனுள்ளவரை உன் தலையிலிருந்து கிரீடத்தை எவரும் பிடுங்கிவிட முடியாது. அந்த ஆண்டவனோ அன்றி அந்த கங்கையின் மைந்தனோ இதனைத் தடுக்க முடியாது.

**துச்சாதனன்:** மாமா! எங்கள் தந்தையாரே யுதிஷ்டிரனை மன்னனாக்க விரும்புகிறாரே!

**சகுனி:** உங்கள் தந்தை போடும் முடிச்சை நான் அவிழ்த்து விடுவேன்.

-காட்சி மாற்றம்-

அரசவை.

**விதுர:** அஸ்தினாபுரி மக்களே! இன்னும் சற்று நேரத்தில் மகாராஜா உங்கள் எதிர்கால மன்னர் யார் என்பதை அறிவிப்பார்.

**காந்தா:** குந்தி! நீ என்ன கருதுகிறாய்?

**குந்தி:** துரியோதனனும் யுதிஷ்டிரனும் எனக்கும் பிள்ளைகள்தானே அக்கா!

கைதிகள் நால்வர் அவைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

**விதுர:** சில குற்றவாளிகள் அழைத்து வரப் பட்டுள்ளனர் மகாராஜா! சேனாதிபதி! இவர்கள் செய்த குற்றம் என்ன என்பதை மகாராஜாவுக்கு தெரிவியுங்கள்.

**சேனா:** இந்நால்வரும் சேர்ந்து ஒருவனைக் கொன்று விட்டனர் மகாராஜா. தாங்கள் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளனர்.

**திருத:** அப்போ அவர்களுக்கு...!

**விதுர:** மன்னிக்க வேண்டும் மகாராஜா! தாங்கள் அனுமதித்தால், இந்த வழக்கில் நீதி வழங்கும் சந்தர்ப்பத்தை இளவரசர்களுக்கு அளிக்கலாம். அவர்களுடைய ஆற்றலை மக்களும் அறிவார்கள் அல்லவா?

**பீஷ்ம:** விதுரரின் கருத்தை நானும் ஆமோதிக்கிறேன். சகோதரர் சகுனியின் கருத்தையும் அறியலாமே!

**விதுர:** மன்னியுங்கள்! அஸ்தினாபுரி அரசவையின் பிரச்சினை இது...!

**பீஷ்ம:** காந்தார இளவரசர் இன்று அஸ்தினாபுரியின் ஓரங்கமாகிவிட்டாரே!

**விதுர:** ஓரிடத்தைச் சேர்ந்திருப்பதற்கும் அங்கு சார்ந்திருப்பதற்கும் வித்தியாசமுண்டல்லவா?

**துரியோ:** விதுர சித்தப்பா அவர்களே! நான் இந்நாட்டவன். மகாராஜாவின் தலைமகன் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கும் முன்னுரிமை எனக்குத் தரப்பட வேண்டும்.

**விதுர:** நீ யுதிஷ்டிரனுக்கு இளைய தம்பி என்பதனால் முதலில் தீர்ப்பு வழங்கும் உரிமையை உனக்கு அளிக்கலாம்.

**திருத:** இந்த வழக்குக்கு நீயே தீர்ப்பினை வழங்கலாம். இந்தக் குற்றவாளிகளுக்கு என்ன தண்டனை வழங்குகிறாய் மகனே!

**துரியோ:** இதில் சிந்திப்பதற்கு எதுவுமேயில்லை. பாரம்பரிய வழக்குப்படி கொலைக் குற்றம் புரிந்தவர்கள் மரண தண்டனைதான் பெற வேண்டும். ஆகவே இவர்களுக்கு மரண தண்டனை வழங்குமாறு தீர்ப்பளிக்கிறேன்.

**சகுனி:** ஆண்டவன் உன்னைக் காப்பாற்றுவானாக என் அன்பு மருமகனே!

**திருத:** விதுரா! இவர்களுக்கு மரண தண்டனை என்று அறிவிக்கும்படி கட்டளையிடுகிறேன்.

**விதுர:** மன்னியுங்கள் மகாராஜா! இளவரசர் யுதிஷ்டிரனுக்கும் நீதி வழங்கும் சந்தர்ப்பமளிக்கலாம் அல்லவா?

**திருத:** நீதிதான் வழங்கப்பட்டாகிவிட்டதே!

**விதுர:** யுதிஷ்டிரனின் அபிப்பிராயத்தையும் கேட்டு அறிந்துகொள்ளலாம் என்றே எனக்குத் தோன்றுகிறது.

**திருத:** சரி! யுதிஷ்டிரா! எங்கே இந்த வழக்கில் உனது தீர்ப்பினை வழங்கு பார்க்கலாம்.

**யுதிஷ்:** எல்லோருக்கும் எனது வணக்கம்.

**திருத:** உனது சகோதரன் அளித்துள்ள தீர்ப்பு பற்றிய உனது கருத்து என்ன?

**யுதிஷ்:** முதலில் இவ்வழக்கின் முழு விபரமும் நான் அறிந்தாக வேண்டும். குற்றவாளிகளின் குலம், கோத்திரம் ஆகிய விபரங்களும் தெரிந்தாக வேண்டும் மகாராஜா!

**கர்ண:** சாதி மதப் பாகுபாடுகளுக்கும் நீதி வழங்கலுக்கும் என்ன சம்பந்தம்?

**யுதிஷ்:** இரண்டுக்கும் தொடர்பில்லாவிட்டால் இவ்வினாவினை நான் விடுத்திருக்க மாட்டேன்.

**திருத:** குற்றவாளிகள் தங்கள் குலம் கோத்திரத்தை கூறட்டும்.

**முதல் எதிரி:** நான் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த சூத்திரன் பிரபு!

**இரண்.எதிரி:** நான் வைசிய சமூகத்தவன்.

**மூன்.எதிரி:** நான் ஒரு சத்திரியன்.

**நாலா.எதிரி:** பிராமண குலத்தவன் நான் மகாராஜா!

**யுதிஷ்:** நீதியைப் பொறுத்தவரை நான் ஒவ்வொருவருடைய குலத்தையும் சீர்தூக்கியே தீர்ப்பு வழங்கக் கடமைப் பட்டவன். முதலாவது எதிரி சூத்திர குலத்தைச் சேர்ந்த ஒரு பாமரன். அவனுக்கு நான்கு வருடச் சிறைத் தண்டனை அளிக்கப்பட வேண்டும். வைசிய குலத்தவனான இரண்டாவது குற்றவாளிக்கு எட்டு வருடம் சிறைத் தண்டனை அளிக்கிறேன். சத்திரிய குலத்தவன் பதினாறு வருடங்கள் சிறையிலிருக்க வேண்டும். ஆனால் மேல் வகுப்பைச் சேர்ந்த பிராமணனுக்கு இந்தத் தண்டனை பொருந்தாது.

**சகுனி:** (கிண்டலாக) ஆகா..! மகா மேன்மையான நீதிதான்..!

**யுதிஷ்:** குற்றவாளிகளில் சூத்திர குலத்தவன் அறிவு முதிர்ச்சியற்றவன். வைசியனோ குற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை அறிந்தவன். சத்திரியன் மனுக்குலத்தைப் பாதுகாக்கும் கடைப்பாடுள்ளவன். இதே வேளை பிராமணன் கல்வி கேள்விகளில் மேம்பட்டவன். அவன் இத்தகைய குற்றத்தை மனதால்கூடக் கருத முடியாதவன். ஆகவே பிராமணன் மிகவும் கடுமையான தண்டனைக்குட் படுத்தப்பட வேண்டியவன் மகாராஜா!

**பிராமணன்:** உண்மைதான் மகாராஜா! நான் செய்த இக் கொடிய செயலுக்குப் பிராயச் சித்தமாக நான் தீ வளர்த்து அதில் வெந்து சாம்பலாக வேண்டியவன். அத் தண்டனையை எனக்கு வழங்குமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**திருத:** அதனை நிர்ணயிக்க வேண்டியவர் கிருபாச்சாரியார்.

**சகுனி:** இந்தத் தீர்ப்பு சரியானதல்லவே!

**யுதிஷ்:** குற்றவாளிகள் எனக் கருதப்படுபவர்கள் எல்லோருக்கும் ஒரே தண்டனை வழங்குவது பொருந்தாது மாமா!

மக்கள் வாழ்த்தொலி– இளவரசர் யுதிஷ்டிரன் வாழ்க என்று அனைவரும் வாழ்த்துகின்றனர்.

**விதுர:** வழக்கு முடிந்தது. தீர்ப்பும் வழங்கப்பட்டு விட்டது. இப்பொழுது அஸ்தினாபுரத்தின் அடுத்த மன்னவர் யார் என்பதனை அறிவிக்குமாறு மகாராஜாவைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திருத:** சித்தப்பா பீஷ்மர் அவர்கள் தமது சங்கினை முழங்கி யுதிஷ்டிரனை அஸ்தினாபுரி மன்னனாக அறிவிக்கும்படி கோருகிறேன்.

குந்தி இருக்கையை விட்டு எழுந்து மகனை வாழ்த்துகிறார். காந்தாரி மனமுடைந்து காணப்படுகிறார்.

<u>பாடல்:</u>

*நீதி மீண்டும் நிலை பெற்றெழுந்ததே*
*மக்கள் மனத்தில் மதிப்புற்றுயர்ந்ததே!*

யுதிஷ்டிரன் சகலரையும் வணங்குகிறான். பீஷ்மர் சங்கினை ஊதி யுதிஷ்டிரனின் முடிசூடு விழா பற்றி அறிவிக்கிறார்.

இதனைத் தாங்க முடியாத துரியோதனன் வெளியேறுகிறான்.

**காலத்தின் குரல்:** தங்கள் எதிர்பார்ப்பு கைகூடாமற்போனமையினால் துரியோதனன் சகுனி, கர்ணன் ஆகியோர் துயருற்றிருக்கும் போது பீமனும் இளைய சகோதரர்களும் இராச்சியத்தை விஸ்தரிக்கும் பணியில் இறங்குகின்றனர். கிருஷ்ணனும் துவாரகையில் நின்றுவிட்டான். ஆகவே இப்பொழுது நாம் செல்வதற்கு மூன்று பாதைகள் திறந்திருக்கின்றன. செத்தி நாட்டு இளவரசன் சிசுபாலன் நமது காவியத்தின் பிரதான நாயகர்களில் ஒருவன். அடுத்துத் தென்படுவது விதர்ப நாடு. அங்கு ருக்மணி பூத்துக்குலுங்கும் புதுமணமலராக விளங்குகிறாள். தனது மருமகன் கம்சனைக் கொன்றமைக்காக கிருஷ்ணனை பழிவாங்கும் துடிப்புடன் மகத நாட்டில் ஜராசந்தன் குமுறுகிறான். துவாரகை மீது தனிமையில் படை எடுக்க முடியாத நிலையில் செட்டி நாட்டின் அரசன் தாமகோசனை தன்பால் இழுக்க ஜராசந்தன் முயலுகிறான். தாமகோசன் வாசுதேவனின் சகோதரியை மணந்தமையினால் அவன் மகன் சிசுபாலன் கிருஷ்ணனுக்கு மைத்துனனாவான். இதனால் பாண்டவர்களுக்கும் உறவினன். ஆகவே இக்காவியம் ஒரே குடும்பத்தைச் சுற்றியே சுழல்கிறது. அஸ்தினாபுரத்தை சீர்குலைக்க அதன் எதிரிகளாகிவிட்ட சகுனி துரியோதனனையும்; ஜராசந்தன் சிசுபாலனையும் பகடைகளாகப் பயன்படுத்துகின்றனர். சிசுபாலனை விதர்ப இளவரசி ருக்மணிக்கு மணம் முடித்து வைப்பதன் மூலம் அவனை துணையாகக் கொண்டு துவாரகை மீது படை எடுக்கத் திட்டம் தீட்டுகிறான் ஜராசந்தன்.

-காட்சி மாற்றம்-

ஜராசந்தன் தன் படை புடைசூழ விதர்ப நாட்டை நோக்கி வருகிறான்.

விதர்ப நாட்டு அரசவை– மன்னர் விஸ்மக் அரியணையில் அமர்ந்திருக்க காவலன் வருகிறான்.

**காவ:** வணக்கம் மாமன்னரே!

**மந்திரி:** என்ன செய்தி காவலரே!

**காவ:** இன்னும் சற்று நேரத்தில் மகத நாட்டரசர் தங்கள் அரண்மனைக்கு வரவிருக்கிறார் பிரபு!

**விஸ்ம:** மகனே ருக்மி! மாமன்னரை சகல மரியாதைகளுடன் அவைக்கு அழைத்து வா... வட இந்தியாவிலேயே அதி பராக்கிரமசாலியான மகத மாமன்னரிடம் ஆசி பெற்று அழைத்து வா. அவர் என்னுடைய ஆப்த நண்பருமாவார்.

ருக்மி சென்றதும் மாமந்திரியிடம்..

**விஸ்ம:** மாமந்திரி! மகத நாட்டதிபர் விதர்ப நாட்டுக்கு முன்னர் எப்போதும் வந்ததில்லை. இன்று அவர் வருகையின் காரணம் என்னவோ!

**மந்தி:** முக்கியமான காரணம் இருக்கலாம். அவர் வந்ததும் அறிந்து கொள்ளலாம் மகாராஜா!

▫▫▫

ஜராசந்தனும் படையினரும் முன்னேறுகின்றனர்.

**காவ:** வணக்கம் மகாராஜா! விதர்ப நாட்டு இளவரசர் ருக்மி தங்களை வரவேற்க வந்துள்ளார்...

**ஜரா:** யாரது? அட ஏகலைவன் அல்லவா நீ?

**காவ:** ஆமாம் மகாராஜா!

**ஜரா:** ஏகலைவா! ருக்மியை நீயே போய் அழைத்துவா...!

▫▫▫

ருக்மியின் முகாம்.

**ருக்மி:** ஏகலைவா! குரு துரோணாச்சாரியார் உனக்கு அநீதி இழைத்துவிட்டார்!

**ஏகலை:** குரு கேட்பதை மாணவன் தடையின்றி கொடுப்பதே கடமையல்லவா? இழக்கப் பட்ட பெருவிரலே குருவின் நல்லாசியாகும் எனக்கு. வரலாற்றில் இதனால் எனக்கோர் இடமுண்டு. அர்ச்சுனன் அவருடைய பிரதான சீடன் என்றால் அன்னாருடைய கோரிக்கையை நிறைவேற்றிய கடமையுள்ள மாணவன் நானே என்று வரலாறு கூறும்!

**ருக்மி:** சரியாக இருக்கலாம்! எனினும் அது அநீதியே! வாரும் மகாராஜாவிடம் செல்வோம்.

ஜராசந்தனை ருக்மி வரவேற்கிறான். இருவரும் இரதத்திலேறிப் புறப்படுகின்றனர்.

**ஜரா:** அப்பா நலமுடன் இருக்கிறாரா?

**ருக்மி:** ஆண்டவன் அருளால் அவர் நலமே! ருக்மணியின் சுயம்வரம் பற்றியே அவருடைய சிந்தனையெல்லாம்.

**ஜரா:** உங்கள் தந்தையின் நண்பன் நான். அவருடைய பிரச்சனையைத் தீர்ப்பதில் எனக்கும் பங்குண்டு. ருக்மணிக்கேற்ற கணவனை தேர்ந்தெடுக்க நானும் உதவலாம்!

-காட்சி மாற்றம்-

ருக்மணியின் அரண்மனை–ருக்மணியின் தோழிகள், அவளுடைய சுயம்வரத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யவே ஜராசந்தன் வந்திருப்பதாகக் கூறுகின்றனர். செத்தி நாட்டு இளவரசன் சிசுபாலனையே ருக்மணிக்கு கணவராக்கும் முயற்சி நடைபெறுவதாகவும் தோழிகள் கூறுகின்றனர்.

▫▫▫

விதர்ப அரண்மனை.

**விஸ்ம:** செத்தி நாட்டரசர் தங்கள் நண்பனானால் அவர் எனக்கும் நண்பரல்லவா? சிசுபாலனின் வீரம் பாரத நாடு அறிந்ததே!

விஸ்மகியின் மற்றுமொரு மகனான ருக்மன் ஜராசந்தனுக்கு வணக்கம் கூறுகிறான்.

**ஜரா:** நீடூழி வாழ்க மகனே!

**விஸ்ம:** ருக்மணியின் சுயம்வரம் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறோம்.

**ருக்ம:** ருக்மணி எனது ஒரே சகோதரி. அவளுக்கு இணையாக பாஞ்சால நாட்டின் இளவரசி பாஞ்சாலியை மட்டுமே கூறலாம். அவளுடைய தகுதிக்கு ஏற்ற கணவன் கிட்ட வேண்டும் என்பதே எமது அவா. அவளுக்கு ஏற்றவன் துவாரகாபுரி கிருஷ்ணனே என்பது எனது கருத்து.

**ருக்மி:** நடக்க முடியாது.

**ருக்மன்:** காரணம் அறியலாமோ ருக்மி?

**ருக்மி:** கிருஷ்ணனின் பெயரை மகாராஜா ஜராசந்தரின் முன்பு இழுத்து அவரை அவமரியாதை செய்து விட்டாய். தவிர ருக்மணி ஓர் அரசிளங்குமரி. கிருஷ்ணனின் குலம், கோத்திரம் எவருக்கும் தெரியாது. அவன் யசோதாவால் வளர்க்கப்பட்டவன். அவன் ஓர் அடிமையின் மகனாகவும் இருக்கலாம். குலம், கோத்திரம் தெரியாத எவனுக்கோ நமது அருமை சகோதரியை மணமகளாக்க முடியுமா? ஓர் இடையனுக்கா நம் தங்கையை கொடுக்க வேண்டும்?

**ஜரா:** செத்தி நாட்டுடன் உறவு பூண்டால் அரசியல் நிலையில் எமக்கு சாதகம் கிட்டுமல்லவா?

**ருக்மி:** ஒரு நாட்டின் பெருமைக்கு அரசியல் உறவுகளை உருவாக்குவதை சுத்த வீரன் விரும்ப மாட்டான்.

**ஜரா:** துருவ முனிவரின் மகனும் பரசுராமரின் சீடனும் தனது பலத்தையே பிரதானமாக நம்புவான் என்பதை நான் அறிவேன். இருப்பினும், உலகில் வீரம் மட்டும் இருந்தால் போதாது மகனே! இலங்கையின் அதிபதி இராவணனைப் போன்று வீரத்தில் மட்டும் அதிக நம்பிக்கை வைக்கலாகாது. விவேகமும் அவசியம்.

**விஸ்ம:** விவாதம் அவசியமற்றது. ருக்மணியை சிசுபாலனுக்கு மணம் முடித்து வைத்தால் நமக்கு நல்ல பாதுகாப்புக் கிட்டும் என்பது எனது நம்பிக்கை. தங்கள் ஏற்பாட்டை நான் ஏற்கிறேன். சிசுபாலனுக்கு இன்றே ஓலை அனுப்புங்கள்.

**ருக்ம:** இளவரசர் சிசுபாலனுடனான உறவு மகிழ்ச்சிதான். இருப்பினும் மகத நாட்டு மன்னரின் ஏற்பாடுதான் எனக்குப் பிடிக்கவில்லை.

**ஜரா:** எனது அறிவுக்கும் அனுபவத்துக்கும் எட்டிய கருத்துக்களையே நான் கூறினேன். எமக்குள் வயது வேறுபாடு உண்டு. எதிர்காலம் பற்றி நீங்களே தீர்மானிக்க வேண்டியவர்கள். ஆகவே..நான் கூறிய...!

**ருக்மி:** மகாராஜா! அப்பாவே விரும்பி ஏற்றுக்கொண்ட இந்த சம்பந்தத்தை நாங்கள் ஏற்காமல் விடலாகாது. சிசுபாலனை யுத்த முனையில் சந்திப்பதை விடுத்து அன்னாரை இங்கு வரவேற்பதிலேயே நாங்கள் மகிழ்ச்சி அடைவோம்.

▫▫▫

ஜராசந்தன் விடுதி.

**ஏகலை:** வாழ்க மகாராஜா!

**ஜரா:** அந்தரங்கமான பணி ஒன்றை உன்னிடம் ஒப்படைக்கிறேன். இதனை சிறப்பாக முடித்தால் தகுந்த வெகுமதி அளிக்கப்படும்.

**ஏகலை:** சுத்தவீரன் பலனை எதிர்பார்த்துப் பணிபுரிபவனல்ல மகாராஜா! எனக்கு ஒரேயொரு ஆசை மட்டுமுண்டு. அர்ச்சுனனுடன் போரிட வேண்டும்.

**ஜரா:** துரோணரால் ஏற்பட்ட அவமானத்தை இன்னும் மறக்கவில்லைப் போலும்.

**ஏகலை:** குரு மீது எனக்கு மனவருத்தமில்லை. அவர் கேட்டதைக் கொடுக்க வேண்டியது எனது கடமை. எனது கையைப் பார்க்கும்போது வேதனை ஏற்படுவது உண்மையே. அர்ச்சுனனுடன் போரிட வாய்ப்புக் கிட்டுமானால் நிச்சயம் நானே வெல்வேன்.

**ஜரா:** நீ ஒரு சுத்தவீரனேதான். செத்தி தேசம் சென்று இந்த ஓலையை இளவரசர் சிசுபாலனின் கையில் ஒப்படைப்பது உனது கடமை.

ஏகலைவன் ஓலையுடன் குதிரையில் ஏறிப் புறப்படுகிறான்.

▫▫▫

செத்தி தேசம்–சிசுபாலன் அரண்மனை.

காவலன் பிரவேசித்து வணக்கம் செலுத்துகிறான்.

**சிசுபா:** என்ன செட்டி தேசத்தை யாராவது தாக்குகின்றார்களா? ஓய்வெடுக்கும் இந்த வேளையில் ஏன் என்னை நாடி வந்தாய்?

**காவல:** மகத நாட்டிலிருந்த தூதுவன் வந்திருக்கிறான் மகாராஜா! அவன் பெயர் ஏகலைவன்.

தூதுவன் ஏகலைவனை அழைத்து வருகிறான்.

**ஏகலை:** மகதநாட்டு மாமன்னர் இந்த ஓலையைத் தங்களிடம் நேரடியாக ஒப்படைக்கும்படி பணித்துள்ளார் இளவரசே!

**சிசுபா:** (ஓலையைப் படித்த பின்னர்) ஓ ருக்மணிக்கு சுயம்வரம் ஏற்பாடாகியிருக்கிறதா? துவாரகையிலிருந்தும் யாராவது வருகிறார்களோ? வாசுதேவ கிருஷ்ணனின் முன்னிலையில் ருக்மணி என் கழுத்தில் மாலை சூடவேண்டும். அந்தக் கிருஷ்ணன் அவமானத்தால் தலை குனிய வேண்டும்.

**ஏகலை:** பாரத நாட்டு இளவரசர்கள் அனைவரும் எதிர்பார்க்கப்படுகின்றனர். துவாரகையின் அதிபதி ஓர் இளவரசரல்ல என்பதால் அவருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என நம்புகிறேன் மகாராஜா!

**சிசுபா:** ஏகலைவா! களைப்பாக இருப்பாய். ஓய்வெடுத்துக்கொள்ளும். ஏற்ற பதில் ஓலையுடன் நீர் புறப்படலாம்.

-காட்சி மாற்றம்-

ருக்மணி அந்தப்புரம்.

**ருக்மி:** நான் கூறுவதைக் கவனமாகக் கேள் ருக்மணி. நமது தந்தையின் விருப்புடன் தான் நான் இதனை உன்னிடம் கூறுகிறேன்.

**ருக்மணி:** தேவையற்ற முகவுரைகளை விடுத்து விடயத்தைக் கூறுங்கள் அண்ணா!

**ருக்மி:** தங்கையே! உனது சுயம்வரத்துக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன. செத்தி தேசத்தின் இளவரசன் சிசுபாலனுக்கு மாலை சூட வேண்டும் என்பதே நமது தந்தையின் விருப்பம்.

**ருக்மணி:** எனக்குப் பொருத்தமானவரைத் தேர்ந்தெடுத்து மாலை சூடும் உரிமை எனக்கு இல்லையா? நான் ஏற்கனவே மனதால் ஒருவரை வரித்து விட்டேனே!

**ருக்மி:** அப்படியா..? ஆனால் சிசுபாலன் உன் மணாளனாக வர வேண்டும் என்பது நமது தந்தையின் ஆசை என்பதை மறக்க வேண்டாம்....!

▫▫▫

ருக்மணி கிருஷ்ணனுக்கு ஓலை எழுதுகிறாள்.

<u>பின்னணிப்பாடல்</u>

***உள்ளத்தினுள்ளே உறைந்துவிட்ட***
***உத்தமரே வணக்கம்- உங்கள்***
***எண்ணத்தினாலே உருக்குலைந்தே யிங்கு***
***வண்ண மிழந்துவிட்டேன்-இவள்***
***கண்கள் களித்திட காட்சி யளித்திட***
***ஓடோடி வாரீரோ-உயிர்***
***வாடி வதங்குமுன் தேடி வந்தென்னை***
***தேற்றி யணைப்பீரோ....!***

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.



அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி: 436331



உயிரோடு எரி!
வன்முறையின் விதி!



தருவது லி யோ ட

# மே 1



லெனின்-
சோவியத் யூனியனின்
சிற்பி!
சிதறிப்போன சோவியத்
அந்த-
சிற்பியின் சிலையைக்கூட
உடைத்துப் போட்டுவிட்டது.

இப்போதுதான்
சிலையை
உடைத்தார்கள்.
என்று-எப்போது
லெனினது பெயரை
வயிறு வளர்க்கவும்
வருவாய் தேடவும்
போலிக் கமியூனிஸ்டுக்கள்
உச்சரிக்கத் தொடங்கினார்களோ
அன்றே-அந்த நிமிடமே
சத்தியமாய்
லெனினும் செத்துப்போனார்.

மே தின நாளில்
லெனினை நினைக்க
வேதனை வடிகிறது.
போலிக் கம்யூனிஸ்டுக்களை
நினைத்தால்
வெட்கம் வருகிறது.
வாழ்க மே தினம்!
ஒழிக போலிகள்!!

உதடு திறக்க விழிகள் கிறங்கும்



சுவராகும் உடல்

என்னைப் போல் ஒருவன்!



தண்ணீர்-தண்ணீர்



